"எந்நூலுக்கும் இந்நூலே மூலம்"

88

# நான்

உரிமையாளர்
கந்தையா
ஸ்ரீ வாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-6-64.

பார்சலில் வந்து சேர்ந்தது.

88.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எந்நூலுக்கும் இந்நூலே மூலம் "

# நான்

ஞான வள்ளல்

**பரஞ்சோதி மஹான்**

அருளியது

உலக சமாதான

பரிபூரண பரஞ்சோதியின்

**உயர்ஞான சபையாரால்**

வெளியிடப்பட்டது.

(Act XXI of 1860)

(Copy Right Reserved)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | இருள் | ... | 1 |
| 2. | நான் | ... | 2 |
| 3. | நாதம் | | |
| 4. | சோதி | ... | 4 |
| 5. | அணுக்கள் | | |
| 6. | அணுக்கள் பிரிதல் | ... | 6 |
| 7. | சக்தி | | |
| 8. | இயற்கை செயற்கை | ... | 7 |
| 9. | அறிவு | | |
| 10. | மகா காரண லோகம், காரண லோகம் | | |
| 11. | சூக்குமலோகம், மோக்ஷம்-முக்தி, தேவர்கள் | | 9 |
| 12. | சூக்கும லோகப் போக்கு வரவு | ... | 10 |
| 13. | பூதலோகம் | ... | 11 |
| 14. | பூமி | ... | 13 |
| 15. | மனித ரூபம் | ... | 14 |
| 16. | ஸ்தூலக்கண்—ஞானக்கண் | ... | 15 |
| 17. | தொந்தமும் மாய்கையும் | ... | 18 |
| 18. | மனித பெருக்கத்தாலும் பொருளாதாரத்தாலும் அறிவின் குறைவுள்ள அரசியல் நிர்வாகத்தாலும், ஏற்பட்ட நன்மையும் தீமையும் இனி இருக்க வேண்டிய அரசியல் நிர்வாகமும் | ... | 20 |
| 19. | பொருளாதாரம் | ... | 33 |
| 20. | ஆகாரத் திட்டம் | | |
| 21. | ஒழுக்கம் | ... | 35 |
| 22. | குழந்தைகள் தாமே சொல்லிக்கொள்ள பழகவேண்டிய வாக்கியங்கள் | ... | 36 |
| 23. | பாடல் நடிப்பு உற்பத்தி விளைவுகள் | ... | 37 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 24. | விவாகத் திட்டம் | ... | 39 |
| 25. | குழந்தை பெறுதலின் திட்டம் | ... | 42 |
| 26. | போகம் | ... | 43 |
| 27. | குழந்தை இல்லாக் கவலை | ... | 44 |
| 28. | சூது | ... | 45 |
| 29. | பூமி அழியாது | ... | 46 |
| 30. | அழிந்தது தோன்றல், சுவை மாறுதல் | ... | 47 |
| 31. | முன் ஜென்மத்தின் சம்பந்தமும் சம்பந்தமில்லாததும், எல்லா மக்களும் சமத்துவம், செய்கை சேர்க்கையின் தொடர்பு, பிறவி | ... | 48 |
| 32. | மதி | ... | 53 |
| 33. | ஆராய்ச்சி | ... | 55 |
| 34. | மனிதனின் எண்ணமும் தொழிலும் | ... | 62 |
| 35. | ஞாபக சக்தியின் தொடர்பு | ... | 63 |
| 36. | அறிவாளிகளின் சந்தர்ப்பம் | ... | 63 |
| 37. | அசரீரி | ... | 65 |
| 38. | ஆராய்ச்சிக்கு கிடைக்கும் சேதியும் வேதவாக்கும் | ... | 66 |
| 39. | பிரம்மச்சாரி | ... | 67 |
| 40. | தைரியம் | ... | 68 |
| 41. | குரு சிஷ்யர் அன்பின் தொடர்பு | ... | 69 |
| 42. | கனவு | ... | 69 |
| 43. | கவிகள் | ... | 70 |
| 44. | ஊமை | ... | 75 |
| 45. | குருடு | ... | 76 |
| 46. | மரணித்தல் | ... | 76 |
| 47. | மரணத்தைத் தடுக்கும் முறைகள் | ... | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 48. | தூரச் செய்தி அறிதல் | ... 79 |
| 49. | நரை | |
| 50. | சோதிடம் | ... 80 |
| 51. | என் ஜீவிய சரித்திரம் | ... 81 |
| 52. | ஆதியின் பரிணமிப்பு | ... 82 |
| 53. | கல்வி, விவேகமில்லாக் கல்வியால் விளையும் தீங்குகள் | ... 83 |
| 54. | பத்திரிகை ஆசிரியர்கள் | ... 87 |
| 55. | நூல்கள் | |
| 56. | அறிவின் ஆற்றல் | ... 88 |
| 57. | தத்துவங்களைக் கண்டு பிடித்தவர்களே தீர்க்கதரிசிகள் ஆவார்கள் | ... 92 |
| 58. | அத்துவிதம், துவிதம் | ... 98 |
| 59. | ரூப துவிதக் கொள்கைகள் | |
| 60. | அரூப துவிதம் | ... 99 |
| 61. | சுத்த அத்துவிதம் | |
| 62. | உடல் தத்துவம் | ... 99 |
| 63. | சந்நியாசமும் புண்ணிய ஸ்தலங்களும் | ... 100 |
| 64. | எளியவர்க்கும் தனவந்தர்களுக்கும் இடையில் விவேகி கற்பித்த சம்பிரதாய தீர்ப்பு | ... 101 |
| 65. | யாவரும் முக்தி அடைந்தே தீருவார்கள் | ... 102 |
| 66. | பக்தி | ... 104 |
| 67. | குரு | ... 105 |
| 68. | லம்பிகா யோகம் | ... 108 |
| 69. | வாசி யோகம் | ... 110 |
| 70. | படுக்கை | |
| 71. | பஞ்ச வர்ணம் | ... 111 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. கபம்
73. காய கல்பம்
74. நூறு வயது இருக்க உபாயம் ... 112
75. நிர்வாணம்
76. கண் ... 113
77. தச நாதம்
78. நுட்பம்
79. அறுவகை தீக்ஷைகள் ... 114
80. தேஜஸ்
81. உட்காரும் விரிப்பு
82. அமிர்தம் ... 115
83. இருதய அப்பியாசம் ... 116
84. சோம வட்டம்
85. சாயா தெரிசனம் ... 118
86. விந்தின் இருப்பிடம்
87. நெருப்பாறு மயிர்ப்பாலம் ... 120
8. நெற்றிக்கண்
89. பிடரிக்கண்
90. உச்சிக்கண் ... 121
91. ஆறுதாரம் ... 122
92. வலம்புரிச் சுற்று ... 123
93, உணர்வு ... 124
94. உணர்வின் இன்பம் ... 125
95, உணர்வுக்கு உதவாதவை
96. இறங்குபடி
97. தவக்கனல்
98. உணர்வின் பயன் ... 126
99. உலகத்திற்கு சந்தோஷ செய்தி
100. அழைப்பு ... 127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்

## இத்தத்துவமே உலகம்

இருளே பூரணம் - உயிர் இருப்பது இருளில் - உயிராய் இருப்பது நான் என்ற நினைவு - உயிரின் ஒத்தாசையாய் உள்ளது தன் தொணி - உயிரின் பொருளாயுள்ளது அக்கினி அல்லது சோதி - உயிரின் நிர்வாகி அறிவு - அடக்கமும் அணுவில் - விரிந்ததும் அணுவால் - அறிந்ததும் அணுவினுள் ஆதி மெய் உணர்வால்.

## கவனிப்பு

உலக உழைப்பாளிகள், உத்தம அறிவாளிகள், யோகிகள், ஞானிகளாயிருந்த போதிலும் தன்னைத் தான் அறிய விருப்பமுடையவர்கள், ஜாதி, மத வித்தியாசமில்லாமல் 25 வயதிற்கு மேல் 70 வயதிற்குட்பட்டவராயும், பெரிதும் இல்லறவாசிகளாயும், திடகாத்திர மேனியும், சரீர தீங்கில்லாதவர்களாயும் இந்த சபையின் முக்கிய நிபந்தனைகட்குக் கட்டுப்பட்டவர்களாயும் இருக்க வேண்டும்.

மேற்கண்டபடி உள்ளவர்களை இந்த சபையில் சேர்த்து உடனே குருபிரான் ஞான வள்ளல் பரஞ்சோதி மஹான் அவர்களால் தீட்சை செய்து வைக்கப்படும்.

தீட்சை பெற்றால் கருவோடு நினைவும் கலந்து நெற்றிக்கண் திறந்து அங்கு ஏற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியால் எல்லா விபரங்களும் தன் அறிவுக்குப் புலப்படுவதோடு எப்பொழுதும் உணர்வோடு இருப்பீர்கள். இதை 10 மாதம் சரியாய் கவனித்து வந்தால் இனி மறு பிறவி எடுக்காமலும், இச் சரீரம் எடுத்த பிறவியை முடிக்கும் வரை மரணம் கிடையாது. தன் பிறவியை முடித்ததும் சரீரத்தை விடுவித்து அதை பிறர் எடுத்து புதைக்கவோ, சுடவோ, இடம் தராது, தன் சரீர அணுக்களை தன் பேரின்ப சுகத்தால் பிரகாசிககவைத்து ஜோதியாய் கலப்பது நிச்சயம்.

கடவுள் நிலை, மனித அறிவாய் வந்து நிர்வாகம் நடத்துகிறது. மனிதர்களின் மறதியால் ஆலய வழிபாடுகளாலும், யோக சிரத்தையாலும், ஆராய்ச்சியின் யூகத்தாலும் தன்னிலையை அறிய முற்படுகிறார்கள்.

அதன் பயனும், முடிவும் இவ் வுலக சமாதான ஆலயமாக ஏற்பட்டிருக்கிறது. அது தைரியத்திற்கு இருதயமாகவும், அறிவின் பெருக்கத்திற்கு மூளையாகவும், பேரானந்த அனுபோக ஞான முடிவிற்கு ஸ்தூலமாகவும் உச்சியாகவும் இருக்கிறது.

உலக சமாதான ஆலயம்,
நெ. 300, திருவொற்றியூர் ஹைரோட்,
புதுவண்ணாரப்பேட்டை, சென்னை-21

சந்தோஷம்
T. S. தேவராஜ்,
காரியதரிசி.

பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானவள்ளல் பரஞ்ஜோதி மஹான்

இவர் பெயர் செய்யது [illegible]

செய்யது [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. இருள்

ஏக்கத்திற்கு இடமாயுள்ளதும், சிருஷ்டியாகாததும், சிருஷ்டிக்கச் சக்தியற்றதும், எவ்வஸ்துவாக இல்லாததும், எல்லா உருவத்திலும் உள்ளும் புறமும் விலக்கப்பட முடியாது நிறைந்தும் உள்ளது இருள்.

ஒரு இருட்டறையில் வெளிச்சம் புகுமே ஒழிய இருள் புகாது. வெளிச்சம் உள்ள அறையில் இருட்டு புகாமலே வெளிச்சம் மறைந்ததும் யதார்த்த இருட்டு அங்கேயே இருக்கிறது. அப்போது வெளிச்சத்தினுள்ளும் இருட்டு இருக்கிறது.

ஒன்றுமே சிருஷ்டியாகுமுன் இருந்தன்து ஒரே அணு. அவ் வணுவினுள் இருந்த ஏக பெரும் துணிவின் வியாபக ஏக்கமே நாதுன் என்ற நினைப்பு.

நினைப்பு—உணர்வாகவும்
நாதம்—உணர்தலாகவும்
அக்கினி—உணர்ச்சியாகவு மிருக்கிறது.

சரீர ஸ்பரிசம் உணர்ச்சியாகவும், அதை அறியக்கூடிய அறிவு உணர்தலாகவும், அதன் உள்ளும் புறமும் வியாபித்து இருப்பது உணர்வாகவும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நான் அல்லது நினைப்பு

இருட்டைத் தவிர மற்ற யாவுமாய் சிருஷ்டியாகியிருப்பது "நான்". இதற்கு உயிர், நினைப்பு, கடவுள் என்று பெயர். ஒரு மனிதனது நினைப்பின் சக்தி எண்பதினாயிரம் கோடி (80,000,00,00,000) மைல்களுக்கு மேல் வியாபித்திருக்கிறது.

**ஆஸ்திகனின் பிரயாசையின் பயன் நாஸ்திகத்தில் முடிவு. நாஸ்திக விளக்கமே முக்தி.**

### ஓ மனிதனே,

நீ எங்கும் நிறைந்தே இருக்கிறாய்

உனது உடல் ஸ்பரிச உணர்ச்சியை உணரும் அறிவுவாயிலாக நீ உன் உடல் முழுதும் நிறைந்தும், இரண்டு மைல் சுற்றளவில் இருக்கும் வாசனையை உன் மூக்கால் நுகரும் அறிவின் வாயிலாக அச்சுற்றளவு முழுதும் நீ நிறைந்தும், 18 மைல் சுற்றளவில் உண்டாகும் சப்தமும் உன் காதால் கேட்கும், அறிவு வாயிலாக அவ்விஸ்தீரணம் முழுதும் நீ நிறைந்தும், 60 மைல் தூரத்திலுள்ள பொருள்களையும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஆகாய வெளியையும், உன் கண்கொண்டு பார்க்கும் அறிவின் வாயிலாக, அவ்விஸ்தீரணம் முழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் நீ நிறைந்தும், உலகெங்கும் நீ சுற்றிப் பார்த்திருந்து, இருந்த இடத்திலிருந்து அவைகளை ஞாபகிக்கும்போது உன் ஞாபக அறிவின் வாயிலாக உலக முழுதும் நீ நிறைந்தும் இருக்கிறாய். இவற்றிற்கெல்லாம் மேலாக நீ எங்கும் நிறைந்திருக்கும் தன்மையை உன் ஆராய்ச்சி அறிவால் அறிந்து கொள்ளும் பொருட்டே உன் அறிவின் நிலைக் கேற்ற வாறு நீ பக்தனாக வுள்ளபோது கடவுள் நிலை எங்கும் நிறைந்தது, அதைக்காண முற்பட வேண்டும் என்றும், நீ யோகியா யுள்ளபோது குண்டலினி சக்தியாய் அது விளங்குகிறது, அதனை அறியவேண்டும் என்றும், தன் நிலையறிந்த குருவின் வாயிலாக உன்னை நீ யறிந்து அனுபோக அறிவின் விளக்கத்தில் நானே எங்கும் நிறைந்திருக்கிறேன் என்றும் சொல்லத் துணிந்துகொள்வாய்.

## பார்வைக்குள்ளான ரூபங்களுக்கு எல்லாம் பார்ப்பவனே பெரியோன்

மனிதனின் அறிவின் விளக்கத்தால் தன்னை அறியாதவரை பிறவி உண்டு.

மனிதனின் நினைப்பின் வியாபகம் எங்கும் நிறைந்திருக்கிறது, அதை அறியக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்தின் யூகம் தன் அறிவைப் பொறுத்தது.

மனிதனின் நினைப்பு இல்லாத இடமே இல்லை. அவன் பாராத இடமுண்டு.

பக்தர்களின் பிரயாசையின் முடிவு தன் நிலை அறிதல், தன்னிலை அறிவின் விளக்கமே முக்தி.

## 3. நாதம்

நான் அல்லது நினைப்பின் வேகமே நாதம். எல்லா உருவங்களிலும் இது உள்ளது. இரு காதுகளையும் மூடிக்கொண்டு நம் முன் கவனிக்க கேட்கும் சப்தத் தொனியே நாதம்.

## 4. ஜோதி

நான் என்பதின் உருவமே நெருப்பு. இதற்கு ஜோதி, மகாகாரணம் என்று பெயர். அது உலகில் வெளிச்சமாகவும், தாவரத்தில் வித்துவாகவும், ஜீவ உருவங்களில் விந்து நீராகவும், மனிதனில் விந்துவாகவும் இருக்கிறது.

## 5. அணுக்கள்

ஆதி நான் என்ற ஒரு அணு இன்று அணுவாக இல்லை. அது நெருப்பாகப் பெருகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இருக்கிறது. அதன் பொறிகளே அணுக்களாக வியாபித்துப் பரவுகிறது. அவ் வணுக்களின் சேர்க்கையே சகல லோகங் களும் நட்சத்திரங்களும் மற்ற எல்லா உருவங் களும்.

அக்கினி உருவமே சூரியன்
அணுக்களின் மயமே வெளி
அணுக்களின் வேகக் குறைவே கானல்
அணுக்களின் சேர்க்கையே நீர்
அணுக்களின் உறைதலே நிலம்
அணுக்களின் அலைகளே காற்று
அணுக்களின் வெப்பமே அக்னி.

குளிர் அணுக்களின் சேர்க்கையே சந் திரன். ஒன்றும் இல்லாத இடமே ஆகாயம் அல்லது இருள். அணுக்களின் சேர்க்கை யின் வளர்ச்சியே எல்லா உருவங்களாக அமைந்திருக்கின்றது. அறிவின் கூடுதலுக் குத் தக்கவாறு ஓர் அறிவிலிருந்து படிப் படியாய் உயர்ந்ததே ஆறறிவுள்ள மனித சரீரம். ஆறறிவுள்ள மனிதன் அறிவின் பெருக்கால் நான் என்ற தன்னிலை அடை கிறான்.

சூரியன் என்ற வடிவம் தனியாகவோ அநேகமாகவோ கிடையாது. அந்தந்த உல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கள் சுற்றும் வேகத்திற்குத் தக்கவாறு பெரிதாகவும் சிறியதாகவும் மகாகாரண அக்கினி சூரிய வடிவமாகத் தெரிகின்றது.

## 6. அணுக்கள் பிரிதல்

உலகத்தில் எரியும் நெருப்பு, விளக்குகளின் வெளிச்சம், பட்டுப்போன மரங்கள், வெட்டிய மரங்கள், பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட உலோகங்கள், பூர்த்தியான கட்டிடங்கள், உடுக்கும் உடைகள், ஆடை ஆபரணங்கள், பாத்திரங்கள், வாசனைத் திரவியங்கள், இவைகளிலிருந்து எப்போதும் அணுக்கள் பிரிந்துகொண்டே யிருக்கின்றன.

கடலைக் கடந்தது அலை, அலையைக் கடந்தது ஆவி, ஆவியைக் கடந்தது அணு.

நெருப்பைக் கடந்தது புகை, புகையைக் கடந்தது வெப்பு, வெப்பைக் கடந்தது அணு.

உடலைக் கடந்தது வேர்வை, வேர்வையைக் கடந்தது வாடை, வாடையைக் கடந்தது அணு.

கடலைக் கடந்தது நிலம், நிலத்தைக் கடந்தது மலை, மலையைக் கடந்தது மரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தைக் கடந்தது சுவை, சுவையைக் கடந்தது அறிவு, அறிவை அறிந்தவன் ஆசான்.

தாரத்தைக் கடந்தது குழந்தை, குழந்தையைக் கடந்தது அன்பு, அன்பைக் கடந்தது அறிவு, அறிவு உள்ளது அணுவில்.

அணுவைக் கடந்தது அக்னி, அக்னியைக் கடந்தது நாதம், நாதத்தைக் கடந்தது நினைப்பு, நினைப்பாய் உள்ளவன் நானே.

## 7. சக்தி

அணுக்கள் கூடிய வேகமே சக்தி. சுமார் லக்ஷம் அணுக்களின் சேர்க்கையே பூதக் கண்ணாடியில் தெரியும் சிறு கிருமி. அது போன்று அநேக மடங்கு சேர்ந்தது ஒரு பெரும் ரூபம். அந்த ரூபத்தாலேயே சக்தியின் வல்லமை தெரியவரும். அச்சக்தியெல்லாம் அறியக்கூடியது மனித சக்தி.

## 8. இயற்கை சேர்க்கை

அணு இயற்கை, அணுக்களின் சேர்க்கையே எல்லா உருவங்களும்.

## 9. அறிவு

“ நான் ” என்பதன் அழகே அறிவு. அவ்வறிவு உன்னுடம்பில் காரண சரீரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. நீ இதை உன் அறிவாலேயே பார்க்கிறாய்.

அநேக பிறவி வாயிலாக அறிவு பெருகி வருகிறது. நாடியதைச் செய்வதும், பார்த்ததையும், கேட்டதையும் ஞாபகித்ததையும் ஞாபகத்தில் வைத்திருப்பதும் அறிவு. அறிவு பெருகுவதற்காக ஏற்பட்டது ஒழுக்கம், கற்பு, அன்பு, கல்வி, கருணை, பக்தி, யோகங்கள்.

ஓரறிவுள்ள மரம், செடி, கொடிகளாவது பூத்துக் காய்க்கும் தன்மையுடையன. அந்தப் பிரயோஜனமும் இல்லாதிருக்கிறது மறதியாயும் மடமையாயும் இருக்கும் மனித அறிவிற்கு. உடல் அழுக்கை கைசுத்தம் செய்வதோடு, கை அழுக்கையும் கையே சுத்தம் செய்வது போல, அறிவாளிகள் மக்களைச் சீர்திருத்தம் செய்வதோடு தமக்கு வேண்டிய திருத்தங்களை உணர்ந்து நடந்துகொள்வது பெரும் நிலை.

அறிவின் அலங்காரமே உன் சிறப்பாகும். அறிவின் திருத்தமே உன் திருப்தியாகும். அறிவின் உயர்வே உன்னை நீ அறியும் வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. மகா காரண லோகம்

அக்கினி சொரூபமான ஜோதி சொரூபமே மகா காரண லோகம். இவ்வக்னியை எல்லா லோகங்களும், நக்ஷத்திரங்களும் வலமாகச் சுழன்று சுற்றுகின்றன.

### காரண லோகம்

அக்னியிலிருந்து அணுக்கள் பிரியுமிடமே காரண லோகம். அணுக்கள் பிரியும் வேகத்தில் வலமாகச் சுழன்றுவரும்வீழ்ச்சிக்குப் பெயர் ஆயிரத்தெட்டு மலர். ஆத்மா சரீரமெடுக்குமுன் காரண சரீரம் இங்கு ஏற்படுகிறது. அறிவுப் பெருக்க முடையோர் தம் சரீரத்தை விடும்பொழுது ஆத்மா அங்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளுகிறது.

## 11. சூக்கும லோகம்

காரண லோகத்திற்கும் சரீர லோகத்திற்கு மிடையே எண்ணெயில் அமுக்கி யெடுத்த வெள்ளைக் கண்ணாடியைப் போன்ற நிறமுடையதாய் அமைந்திருக்கிறது சூக்கும லோகம்.

ஆத்மாவுக்கு இங்கு சூக்கும சரீரம் (இரண்டாவதாக) ஏற்படுகின்றது. சூக்கும சரீரத்துடனிருக்கும் ஆத்மாக்களுக்கு தேவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் என்று பெயர். சாதாரண மனிதனும், நல்லறிவுள்ள மனிதனும் தன்னுடம்பை விட்டபொழுது ஆத்மா இங்குச்சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளுகிறது. இந்த இடத்துக்கே சுவர்க்கம், மோக்ஷம், தேவலோகம் எனப் பெயர்கள். உடம்பில் அடிபடும்பொழுது, அடிபடுவது ஸ்தூல சரீரத்தில், வலி ஏற்படுவது சூக்கும சரீரத்தில், அதை அறிவது காரண சரீரத்தால்.

## மோக்ஷம்—முக்தி

தேகத்தை விட்ட ஆத்மா மறு பிறவி எடுப்பதற்கு முன்னதாக தூக்கம் போன்ற நிலையில் இருப்பதுவே மோக்ஷம்.

மறு பிறவி இல்லாத நிலையே முக்தி.

## தேவர்கள்

இதுவரையில் ஸ்தூல சரீரமே எடுக்காது, சூக்கும லோகத்தில் இருக்கும் சூக்கும சரீரங்களுக்கே தேவர்கள் என்று பெயர்.

## 12. சூக்கும லோகப் போக்கு வரவு

**அனுசரிக்கும் முறை**:—இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள் இரவில் பதினொரு மணிக்கு மேல் காலை நான்கு மணிக்குள், நிசப்தமான தனி இருட்டறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில், தலையணை இல்லாமல், மல்லாந்து படுத்து, வலது கால்மேல் இடது காலும் இடது கைமேல் வலது கையும் வைத்து வாயை மூடி அண்ணாளத்தில் நாவை ஒட்டி ஒரே ஞாபகமாய், முதுகு எலும்பிலிருந்து உடல் அசையாது உச்சியை ஞாபகத்தால், தலையணை உரை கழற்றுவதுபோன்ற உணர்ச்சியோடு தன் சூக்குமம், சூக்கும லோகத்திற்குப்போய் வரும். சிறிது காலம் முயற்சியோடு பழக வேண்டும்.

சூக்குமம் உடலை விட்டு விலகி இருந்தால் ஸ்தூல தேகத்தில், ஒரு சந்தோஷமான மின்சார கூச்சத்தோடு சூக்குமத்திற்கும், ஸ்தூலத்திற்கும், ஒளிக்கிரணங்கள் பாய்ந்து கொண்டிருக்கும். இரவில் சாப்பிடாமல் இருப்பதும், ஆண்கள் முகத்தை க்ஷவரம் செய்துகொள்வதும் இதற்கு நல்லது; சூக்குமலோகப் போக்கு வரவு செய்துகொள்வதால் தன் உடல் தத்துவம் தெரிவதோடு மறதி தெளிந்து, திடமும், சந்தோஷமும் ஏற்படுகின்றன.

## 13. பூதலோகம்

ஜனப் பெருக்கத்தால், ஆகார வசதியும், போக வசதியும் இல்லாத அனேகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மேலுள்ள இச்சா சக்தியின் வன்மையாலும், துர்ச்சேஷ்டை உடையவர்களுக்கும், அதிகப் பற்றுதல், தொந்தம் உடையோர்களுக்கும், சூக்கும சரீரங்களில் ஏக்கத்தின் அழுக்கால் கனம் ஏற்பட்டு மயில் துத்தம் போன்ற நிறமாகிவிடுவதால், சரீரத்தை விட்டவுடன் சூக்கும லோகம் போகாமல் பூமியில் காற்று உள்ள தூரம் வரையில் தங்கி உலாவுகிறார்கள். அவர்களுக்கு இது இவ்வுலகத்தில் உள்ள தண்டனைச்சாலையைப் போல் உள்ளது. மூன்று மாதங்களிலிருந்து எழுபது வருஷங்கள் வரையில் இச்சூக்கும சரீரம் பிசாசாக இருக்கும். முப்பது வருஷ காலமான பின் அவர்கள் உலகில் சேஷ்டை ஒன்றும் செய்யமுடியாது. உலகத்தில் ஒருவர் இறந்த பிறகு அவர் பேரில் செய்யும் கிரியைகளாலும் கோவில்களில் செய்யும் உற்சவங்களாலும் அநேக விதமான தீங்குகளே உண்டாகின்றன. இறந்தவர்களுடைய படங்கள் இருக்கவே கூடாது அவர்களைப்பற்றி நாம் நினைக்கவும் கூடாது. மற்ற விவரங்களுக்கு "பூத லோகம்" பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. அணுக்கள் வெளியாக இருந்து காலாகி, நீராகி, நிலனாகியது பூமி

நினைவு தொனி அக்னி சேர்ந்ததே அணு; அணுக்களின் பிரிவினைகள் 10414515300 கோடியாகும். இதில் அநேக கோடி அணுக்களின் பிரிவினை பூமியில் தாவரங்களாய் வளர்கின்றன.

அணுக்களின் சேர்க்கை உருவங்களில் அறிவு அணுக்களின் திறமைக்குத் தக்க ஜீவன், ஜீவாத்மா, பரமஜீவாத்மா எனப் படும்.

ஈரறிவு ஜீவப்பிரிவினைகள் 103318 கோடியும், மூவறிவு ஜீவப்பிரிவினைகள் 10 கோடியும், நாலறிவு உள்ளது 10 லக்ஷம் உருவப்பிரிவினைகளும், ஐயறிவில் 22,900 பிரிவினைகளும், மனிதனின் முக உருவத் தோற்றங்கள் 1200 பிரிவினைகளாகவும் இருக்கின்றன. வேண்டியதை உபயோகித்து, வேண்டாதவைகளை அழித்துவிடுவதால் மேற்கண்ட எண்ணிக்கைகள் நாளுக்கு நாள் குறையும். அறிவானது ஓரறிவிலிருந்து ஆறறிவுவரை வளர்வதற்கு வெகு காலம் சென்றது. ஓரறிவில் விளைந்த வித்து படிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியாக உயர்ந்து மனித ஸ்தூலத்தில் விந்துவாக வந்து முடிகிறது.

## 15. மனித ரூபம்

முதலில் அநேக சரீர வாயிலாக அறிவு அணுக்கள் உருவத்தை மாற்றி மாற்றி, குரங்காகி, காட்டுமனிதனுகி, உடை, ஒழுக்க, அறிவு ஏற்பட்டதும் மனிதனுனன்.

மனிதனில் அறிவின் பெருக்கம் உண்டாக வெகு காலம் சென்றது.

மனிதனின் விந்துவால் இன்று மனிதப் பெருக்கம் உண்டாகினும் 1000 க்கு 2 இன்றைக்கும் குரங்கிலிருந்து மனித ரூபம் உண்டாகி வருகிறது.

1011451 5300 கோடி குணங்கள் உப்பு, உறைப்பு, துவர்ப்பு, கசப்பு, புளிப்பு, தித்திப்பு ஆகிய 6 சுவைகளாகி விளைந்து அது ஈரறிவு ஜீவனில் இருந்து மனிதன் வரைக்கும் வேண்டிய உணவுப் பொருளாய் இருக்கிறது.

| | | |
|---|---|---|
| உப்பின் | அம்சம் | உடம்பு |
| உறைப்பின் | ,, | இரத்தம் |
| துவர்ப்பின் | ,, | விந்து |
| புளிப்பின் | ,, | ஜீரணம் |
| கசப்பின் | ,, | அமைதி |
| தித்திப்பின் | ,, | அறிவு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரறிவு தான்யப் பொருள்களை எந்த ஜீவன் சாப்பிடுகிறதோ அதே ஜீவனுகவே அந்த தானியப் பொருள்கள் மாறுகின்றன. அதுபோன்றே ஜீரணிக்க வல்லமையுள்ள ஒரு ஜீவன் மற்ற ஜீவன்களை உண்டு தன் உருவமாக மாற்றிக்கொள்ளுகிறது.

ஒரு பலாச் சுளையை ஈரறிவுள்ள புழு சாப்பிடுமாகில் புழுவாகவும், மனிதர்கள் சாப்பிடும்போது மனிதனுகவும் மாறுகிறது. கெட்ட மனிதன் உண்ணும் உணவு கெட்ட அறிவாகவும் நல்ல மனிதன் உண்ணும் உணவு நல்ல அறிவாகவும் உலகில் பரவுகிறது.

அறு சுவையுள்ள குணங்கள் மனித உடம்பில் ஒரு விஞடிக்கு 40 குணங்களாகத் தோன்றுகின்றன. அதில் அறிவுடையோர்கள் நல்லதையும், கெட்டதையும், உணரும் போது கெட்டது நல்லதில் சேர்ந்து அறிவாகிக்கொள்ளுகிறது.

## 16. ஸ்தூலக் கண்—ஞானக் கண்

ஸ்தூலப் புலன்களின் உணர்ச்சியின் வாயிலாக அறிவின் பெருக்கத்தின் விளக்கமே ஞானக்கண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலன்கள் = ஸ்தூலம், நாவு, மூக்கு, காது, கண், பிடரி, நெற்றி, உச்சியாகும்.

வளரும் உணர்ச்சியுள்ள ஓர் அறிவு ஸ்தூல தாவரத்திலிருந்து நகர, நுகர, உணர்ச்சியுள்ள ஈரறிவு ஜீவன்களிலிருந்து மூக்கு, காது, கண், ஞாபக, சிந்தனை, தெளிதலுள்ள புலன்களின் கூடுதலுக்குத் தக்கவாறு ஐயறிவு ஜீவன்களாகி இருக்கிறது. இவைகள் அறியக்கூடிய ஆற்றலிருந்தும் அறிந்தவைகளை வெளியிட முடியாததால் தாவரமாகவும், மற்ற ஜீவ்ராசிகளாகவும், மிருகமாகவும் இருக்கின்றன.

யாவுமறிந்து யூகிக்கவும் வெளியிடவும், நிர்வாகம் நடத்தவும் வல்லமையோடு முடிவாய் அமைந்துள்ள ஸ்தூலமே மனிதன்.

புலன்கள் யாவுமிருந்தும் அறிவின் வளர்ச்சி குறைவாக இருப்பது குழந்தைகள். தன் புலன்களின் உணர்ச்சியையும் அறிவையும், மது உண்டு தானே கெடுத்து மயக்கிக் கொள்வோர்கள் குடிகாரர்கள்.

உடம்புக்குள் நோவு இருந்தும் வெளி ஸ்தூல ஸ்பரிச, உணர்ச்சியை கிரகிக்க முடியாது ஸ்தூலம் கெட்டு இருப்போர்கள் ரோகிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயவக் குறையுள்ளோர்கள், நொண்டி, முடவன், மூக்கரையன்.

உண்ணும் உணவாலும், உட்கொள்ளும் வாசனையாலும் உடலின் வளர்ச்சி தளர்ச்சி இருந்தும் சுவை வாசனைகளை கிரகிக்க நாவு மூக்கில் உணர்ச்சியில்லாதோர்கள் ருசி வாசனை உணர்ச்சியற்றோர்கள் தன் அபிப்பிராயத்தையும், மற்றவர்களின் அபிப்பிராயத்தையும் சொல் மூலம் அறிவிக்க, கிரகிக்க முடியாதோர்கள் ஊமைகள்.

தன்னுள் சப்தமிருந்தும் வெளி சப்தம் கிரகிக்க காதில் உணர்ச்சியற்றவர்கள் செவிடர்கள்.

தன் எதிரில் செந்நிற வெளிச்சம் தெரிந்தும் வெளி உருவத்திலுள்ள வெளிச்சத்தை கிரகிக்க கண் உணர்ச்சி யற்றோர்கள் குருடர்கள்.

ஸ்தூல அவயவ புலன்கள் நன்றாய் இருந்தும் அறிவின் பெருக்க மில்லாதோர்கள் பாமரர்கள்.

ஸ்தூல அவயவப் புலன்கள் நன்றாக இருந்தும் அறிவு கெட்டோர்கள் வெறியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தூல அவயவப் புலன்களும் அறிவு மிருந்தும் நிதான மில்லாதவர்கள், பெரும் தீனி உண்போர்கள், காமபோகிகள், மூட பக்தர்கள் யோகிகள்.

அறிவாளிகள் எதிலும் சரிவர நடந்து கொள்ள இவைகள் எச்சரிக்கின்றன.

ஒவ்வொரு துறையிலும் எல்லா மக்களும் சரியாய் நடக்கவும் சுகமாய் வாழவும் பிரயாசையோடு சிந்திப்போர்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஸ்தூல அவயவங்களாலும் நாவு, மூக்கு, காது, கண், இப்புலன்களின் வாயிலாக இன்பிக்கும் சுகத்திற்கும் மேலேயுள்ளது, ஞானகுருவின் ஸ்பரிசத்தால், பிடரி, நெற்றி, உச்சி இப்புலன்களில் ஏற்படும் உணர்ச்சியின் இன்பமே பேரானந்தம்; பேரின்பத்தால் எல்லாம் அறியக்கூடிய அறிவின் பெருக்கத்தின் முடிவின் விளக்கமே ஞானக்கண்.

## 17. தொந்தமும்-மாய்கையும்

தன் வசதிக்கு வேண்டியவற்றைச் சேகரிப்போர், முயற்சியுடையோர், அளவுக்கு மீறிச் சேகரிப்பதும், சேகரிக்க யோசிப்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையுடையோர், தன்னைச் சார்ந்தோர், அறிந்தோரின் ஜீவன் அறிவு நிலைகளில் அக்கறை செலுத்துபவர், அன்பும், கருணையுமுடையவர், உலக முழுவதும் சீர்திருத்தமாக இருக்கவேண்டு மென்று முயற்சிப்போர் பெருந்தன்மை, சமத்துவமுடையோர், இதில் ஓரளவு நிதானமில்லாதார், மாய்கை யுடையோர், தொந்தமுடையோர், கட்சிபேதமுடையோர், நானென்ற அகந்தை யுடையோர், மதவெறிபிடித்தோ ராவார்கள்.

பக்ஷி, மிருகங்கள் சிசுக்களை இரைதேடி தானே உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடிய வல்லமை வரும்வரை பாதுகாத்து வளர்த்து விட்டுவிடுகின்றன. அதுபோன்று, மனிதர்களின் குழந்தைகளும், தன்னைச் சார்ந்தோர்களையும் விட்டுவிட முடியாததற்குக் காரணம், மனிதருக்கு உணவு, உடை, தொழில், இடவசதி, ஒழுக்கம், கல்வி, அறிவு, யூகம் இவைகளெல்லாம் வேண்டியதாய் இருப்பதாலும், இவ்வசதிகள் யாவும் அரசாங்க நிர்வாகப் பொறுப்பில்லாதிருப்பதாலும், ஒருவர்க்கொருவர் ஆதரித்ததிலும், ஒரு பொருளோடு ஒரு பொருள் சேகரித்தலும் **தொந்தமும்-மாய்கையும் ஏற்பட்டது**. சீர்திருத்த அறிவாளிகள் பற்றற்ற நிலையில் இருந்து நற்காரியங்கள் யாவும் செய்து முடிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலை நடத்துவது ஞாபகம்
உடலில் உணர்வது அறிவு
உடலாய் இருப்பது நினைப்பு
நினைப்பாய் உள்ளது நான்.

தோன்றும் ஞாபகங்களால் உலகத்தில் உள்ள எல்லா நிர்வாகங்களும் நடக்கின்றன.

தன் அந்தஸ்துக்குத் தக்கவாறும், சரீரத்தில் ரத்த சுழல் உள்ளவரை தன்னைப்பற்றிய ஞாபகங்களும், உலகிலுள்ள சூழ்நிலைக்கேற்ப சந்தர்ப்ப ஞாபகங்களும் எவருக்கும் ஏற்படுவதுண்டு. அதில் சீர்தூக்கிப் பார்த்து நல்வழியில் நடந்துகொள்பவர்களே அறிவாளியாவர். இதை யறியாது, இவ்வித சிந்தனைகள் ஏற்பட்டவுடன் தன் மனது கட்டுப்படவில்லை யென்ற மேல்போந்த முடிவுடன் தன் தவத்தையும் நற்காரியங்களையும் விட்டு மடிந்தோர் அநேகர். ஆகையால் உணர்வு கவனிக்கும்போதும், நற்காரியங்கள் செய்யும்போதும் இவ்வித ஞாபகங்கள் தோன்றினல்; மனது நிலைபெறவில்லையெனத் தோல்வியடையாதீர்கள்.

## 18. அரசியல் நிர்வாகம்

(மனிதப் பெருக்கத்தாலும், பொருளாதாரத்தாலும், அறிவின் குறைவுள்ள அர

சியல் நிர்வாகங்களாலும் ஏற்பட்ட நன்மையும், தீமையும், இனி இருக்கவேண்டிய அரசியல் நிர்வாகம்.)

ஆகாரப் பொருள் சேகரிக்கும் திறமைக்குத் தக்கவாறு வறுமையும், ஏழ்மையும் ஏற்படுகின்றன.

சேகரித்ததை அபகரிக்கவும், அபகரிக்காது பாதுகாக்கவும் ஆயுதமும் பலமும் ஏற்பட்டன.

சேகரித்ததை அபகரிக்கும் தன்மையுடையோர் அதிகரித்தபோது சட்ட திட்ட சேவக அதிபதி அரசாங்க நிர்வாகங்கள் ஏற்பட்டன.

வெள்ளாண்மை விளைவுள்ள நாட்டைத் தேடிச் சென்ற துரிதமே வாகனங்கள், விவசாயம் உள் நாட்டில் விளைவாகும் உணவு பொருள்கள் எல்லா நாட்டிற்கும் சொந்தமாக இருக்கவேண்டும். விவசாயமில்லாத நாட்டினர்கள் விவசாயப் பெருக்கத்திற்கு வேண்டிய கருவிகள் உற்பத்தி செய்து கொடுப்பதுமன்னியில் உலகமக்களுக்கு வேண்டிய இதர அவசியமான பொருள்களையும் உற்பத்தி செய்துதரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகத்தில் விளைவாகும் உணவுப் பொருளுக்கு வேண்டிய ஜனத் தொகைக்கு அதிகமாய் பிறப்பதால் யாரும் சமாதானமாய் இருக்க இடமில்லை. வேண்டிய ஜனத்தொகைக்குமேல் பிறக்கவிடாமல், தடுக்க முயற்சி எல்லா நாட்டிலும் இருக்கவேண்டும். ஒரு நாட்டில் இருந்து மற்ற நாடுகளில் இல்லாதிருந்தாலும் யுத்தம் என்றைக்கும் உண்டு.

ஆதி உற்பத்தியாகும்போது எவ்வித எண்ணத்துடனும் உற்பத்தியாகியதில்லை. தன் இயற்கை இயல்பு ஆதிநாதமாக எழுந்து அக்னியாகப் பெருகி, அணுக்களாய் எங்கும் நிறைந்து அவ்வணுக்களின் சேர்க்கையால் ஆங்காங்கு உலகங்களாகவும், அவ்வுலகங்களில் அநேக உருவங்களாகி அவ்வுருவங்களில் அறிவு படிப்படியாய் உயர்ந்து மனித உருவாய் முடிவடைந்திருக்கிறது.

ஒவ்வொரு உலகிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மக்களே சிருஷ்டியாகி அவர்களே அவ்வவ்வுலகங்களில் வரப்போக உரிமை உள்ளவர்களாக இருந்து, புது ஆத்மாக்கள் எப்போதும் உற்பத்தியாகாமலிருந்தால் எல்லா நிர்வாகமும் அந்தந்த அளவுக்கு யாதொரு குறைவு இல்லாமல் நடந்தே வந்திருக்கும். அப்படி இல்லாததால் **நான்** என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி அக்னியாக என்றென்றைக்கும் குறையாது நாளுக்குநாள் அதிகமாக விளைந்து கொண்டே யிருப்பதாலும் முடிவில்லா எல்லை யற்ற இருட்டு எங்கும் நிறைந்தே இருப்பதா லும் அக்னியின் பொறி அணுக்களாய்ப் பிரிந்து அவ்விருட்டில் வேகமாய்ச் சென்று அவ்வேகம் குறைந்ததுமே அவ்வணுக்களின் சேர்க்கையால் புது உலகங்கள் உண்டாவ தும், முன் உண்டாயிருக்கும் உலகங்களிலும் சேர்ந்து அவ்வுலகங்கள் பெரிதாவதும் புது ஆத்மாக்கள் அதில் வந்து சேருவதாலும் உல கத்தில் உண்டாகும் உருவங்களில் ஜீவன், அறிவு, ஆத்மசக்தி கூடுதலாயுள்ள வல்லமை அதிகரித்து பெருகுவதாலும் எல்லா மக்களுக் கும் வேண்டிய உணவுப்பொருள் விளைவு போதாமலிருக்கிறது. ஆகையால் அறிவின் ஆராய்ச்சியுள்ள நிர்வாகம் ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டியது அவசியம்.

போக்குவரத்து வாகனங்கள் இல்லாது இருந்தபோது வெள்ளாண்மையுள்ள நாட்டார் கள் உணவுக்கு யாதொருகுறையில்லாசுகத்து டன் இருந்தும் வெள்ளாண்மை இல்லாத நாட் டார்கள் உணவுக்கு அநேக கஷ்டங்கள் அனு பவித்தும் வந்தார்கள். போக்குவரத்து வாக னப் பெருக்கத்தாலும், ஆயுதபலமும் ஏற் பட்டபின் அவற்றால் எங்கு உள்ள வெள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாண்மையையும் எல்லா நாட்டிற்கும் நிர விவர ஏதுவாகிறது. இருப்பினும் உணவுக் கஷ்டம் இருப்பதற்குக் காரணம் உலகத்தில் வெள்ளாண்மைக் குறைவாய் இருப்பதும் மனிதப் பெருக்கம் மிக அதிகமாய் இருப் பதுமேயாகும்.

மேலும் அதிக வருவாயுள்ளவராயிருப் பினும் சரி, இவர்கள் உட்கொள்ளும் உணவோ சாதாரண மக்கள் உண்ணும் உண வைவிட மிகச் சுருக்கமே. இவர்கள் இருக்க இடவசதி, உடை, போக்குவரவு மற்ற சௌகரியங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொள்வதிலும் அனுவசிய ஆடம்பரச் செய்கைகளிலும் செலவழிக்கும் தொகை களால் பணக்காரர், உத்தியோகஸ்தர் என்ற பிரஸ்தாபப் பேர் தனித்த ஒருவரை பாதித் திருந்தாலும் அந்தந்த நிர்வாகத்திலுள்ள உல கத்திலுள்ள எல்லா தொழிலாளிகளுக்கும் அத்தொகை நிரவியே வருகிறது. அப்படி நிரவியும் வறுமை உலகில் இருப்பதற்குக் காரணம் விளைவாகும் பொருள் குறைவாக வும் அதை அனுபவிக்கும் மனிதர்கள் அதிகமாகவும் பிறந்திருப்பதே யாகும்.

ஒரு தென்னை மரம் இருக்கவேண்டிய பத்தடி சதுர நிலத்தில் எட்டு தென்னை மரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் முளைப்பதால் கீழ் வேர்களின் மோதுதல் போல், மத சண்டைகளும், மேல் மட்டை களின் மோதுதல் போல், நாட்டுப் பிரிவினை, கட்சி சண்டைகளும் ஏற்படுகின்றன. எந் நாட்டு அரசாங்கமும் அதிக பிள்ளைகள் பிறக்க விடா முயற்சி உடனே எடுத்துக்கொள்ளுங் கள். என்றைக்கும் மத பேத கட்சி சண்டை கள் இல்லாது எல்லோரும் சந்தோஷமாகவே வாழ்வீர்கள்.

ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் சிறு பாகப் பிரிவினையால் ஏற்படும் மனஸ் தாபம் அவர்கள் உயிருள்ள வரை இருப்பது போன்று நாட்டுப் பிரிவினையின் பிரச்னை உலகிலுள்ள வரை மக்களிடையே குழப்பமே அதிகரித்து நிற்கும்.

பூமி நாளுக்கு நாள் பரிணமித்துப் பெரி தாகிறது. அதில் உணவுக்கு வேண்டிய தாவ ரப் பொருள்கள் விளைய வெகுகாலம் செல்லு கிறது. பூமியில் ஒரு மனிதனுக்கு வேண்டிய உணவு விளைவாகுமுன் பத்து பேர்கள் பிறந்துவிடுகின்றனர். அதன் காரணத்தால் 100 க்கு 20 பேர்கள் பசி இல்லாது உண்டும் 80 பேர்கள் எளியவர்களாக உலகில் கஷ்டப் படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு உருவாகுமுன் தடுப்பது குற்றமே யாகாது. கரு உருவாகிய பின் அதற்கு வேண்டிய சவுகரியங்கள் இல்லாது படும் அவஸ்தையோ பலரையும் பாதிக்கிறது.

ஆராய்ச்சியும், பணமும், ஆயுத பலமும் உள்ள நாட்டார்களே! நீங்கள் நான் சொல்லும் திட்டங்களை உடனே அமுலுக்குக் கொண்டு வருவதில் 10 வருடத்திற்குள் உலகம் முழுதும் க்ஷேமம் அடைந்து எல்லோரும் சுகமாய் வாழமுடியும்.

தன்னிலே அறிந்த அறிவின்
விளக்கத்தால் சொல்லுகிறேன்,
ஞானமும் அரசியலும் ஒன்றுபட்ட
அன்றே உலக சமாதானம் (அது)
பசிப்பிணியையும் ஒழித்து
பணத்துக்குள்ள மரியாதையையும்
ஒழித்து, உருவ வழிபாடுகளையும்
ஒழித்து, உலகில் உள்ள ஜாதி, மத,
வேத, போத, பேதகங்களையும்
ஒழித்து, எந்நாட்டில் விளைந்த
விளைவானாலும் அது எல்லா
நாட்டிற்கும் பொதுவாய்
நிர்வகிக்கும் நிர்வாகம் உள்ள
அன்றே உலக சமாதானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனவந்தர்களிலிருந்து சர்வாதிகாரிகளாக வந்தோர்களுக்கு உலக ஏழை மக்களின் வாழ்வில் உண்டாகும் பலவித கஷ்டங்களும் தெரியாதிருக்கும். ஆனல் பெரும் வறுமையிலிருந்து அதன் கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்து மேல்பதவிக்கு வந்த சர்வாதிகாரிகளும் அவர் போன்று வறுமையில் வளர்ந்த ஞானிகள், தீர்க்கதரிசிகள் மற்றும் பல நிர்வாக பரிபாலகர்களுக்குத் தான் தாம் அனுபவித்துவந்த கஷ்டங்கள் ஞாபகத்தில் இல்லாமலில்லை. தம் உயர் பதவியில் தமக்குப் பணமும் புகழும் இனப் பெருக்கமும் கிடைத்தபோது தாம் முன்பு பட்ட கஷ்டங்களெல்லாம் நினையாது அப்பதவி மோகத்திலேயே, அப்பதவி நிலைப்பதற்கான முயற்சிகளிலேயே முற்பட்டுவிடுகின்றனர். மக்கள் படும் கஷ்டங்களை எல்லாம் நீக்கி அவர்களை மேல் நிலைக்குக் கொண்டுவர சட்ட திட்டம் வகுத்து நிர்வாகத்தில் கொண்டு வரச் சந்தர்ப்பம் (சக்தி) வாய்ந்திருந்தும், சீர் திருத்தம் செய்யும் எண்ணம் கிஞ்சித்தேனும் அவர்களுக்கு இருப்பதே இல்லை. ஏழைகளாய் இருந்து மேல்பதவிக்கு வந்த பலன் மக்களின் வறுமை கஷ்டங்களைநீக்கபயன்படுத்தப் படாமலே இன்றுவரை உலகத்தில்தோன்றிய மதங்களும் அரசாங்க நிர்வாகங்களும் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டன. தன் தன் இன ஒற்றுமையின் உயர்வைக் காட்ட உரத்துப்போடும் சப்த முடைய மதத்தலைவர்களும் தம் தம் இனத்திலேயே உள்ள ஏழை மக்களின் கஷ்டங்களை நீக்க இதுவரை செய்த தொன்றுமில்லை.

பொந்தில் வாழும் புழு, பூச்சி, வண்டு, எறும்பு, நண்டு, எலி, பாம்புக்குமுள்ள காற்று இடவசதிகூட இந்த எளிய மக்களுக்கு இல்லை.

வரும் வருமானமோ அவர் ஒருவர் செலவுக்கே காணுது, ஆனல் அவருக்குப் பிறந்திருக்கும் குழந்தைகளோ ஏழு, சுற்றியுள்ள ஏழை இனபந்துக்களின் மேலுள்ள இரக்க சிந்தனையோ வேறு, மாத கிழமை சடங்கு கிரியை கொள்கைகளின் செலவோ வேறு, இதில் எல்லோருக்கும் நிரவி வராதுபோனல் பாவி துரோகப் பாதகன் என்ற பழிச்சொல் வேறு, இதை எங்கே சொல்வது; சொன்ஞலோ உயரமான வாசலில் தானே குதித்து முட்டிக்கொண்ட தலை வலியைப்போல் விதி கர்மா என்ற குற்றச் சொல் வேறு.

இதை எல்லாம் நினைத்து ஈசனிடம் ஒப்படைத்து கண்ணீர் விட்டு அழுதாலோ உடம்பிற்குப் பலக்குறைவு வேறு, இவைகள் எல்லாம் எதுபோன்றென்ருல் மழை இல்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரண்டு இருந்த பூமியில் சிறு மழை பெய்து விட்டு விட்டால் அங்கு ஏற்படும் வெப்பத்தி னுல் அநேக நோய்கள் உண்டாவதைப் போன்றதே யாகும்.

பெரும் மரம் செழித்து வளர்வதிலும் அதன் அடியில் வளரும் புல், பூண்டு, செடி, கொடிகளும் செழிப்பாகவே வளருகின்றன. அதுபோல், காட்டில் வசிக்கும் ஜீவராசிகள் மறு ஜீவனுக்கு இரையாகுமுன் சுகமாகவே வாழ்கின்றன. மனிதர்களில் எல்லா வகையி லும் அவர்கள் உயிருள்ள வரையில் கஷ்டப் படுகின்றவர்கள் அநேகர். எல்லா வகை சுகத் துடன் வாழ்கின்றவர்கள் வெகு சிலர்.

ஓ சர்வாதிகாரிகளே !
இராஜ்ய நிர்வாகிகளே !
மதத் தலைவர்களே !

உங்கள் கையில் எடுத்த உணவு வாய்க்கு வருமுன் உள்ள நேரத்தில், இவ்வாகாரம் எல் லோருக்கும் சரிவர நிரவி வருகிறதா என்று உணர்ந்து சிந்தியுங்கள்.

தாய் தந்தையின் கருணையிலும் பெரிதே அரசாங்க நிர்வாகம்.

**கருணையின் கண்ணீர் விட்டுச் சொல்லுகின்றேன்,** நீங்கள் வெளியேறிப் பாராத ஒரு குற்றமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண் விவகாரம் விளைவுக்குக் காரணமாக இருந்துகொண் டிருக்கிறது. பெரும் அறிவாளிகள் சிந்தித்தும் பயனென்ன ஆவது, எடுத்துச் சொல்லியும் நிர்வாகம் நிர்வகிக்காது போனுல் அவ்வறிவாளிகளின் இருதயத்தி லுள்ள நிந்தனை அரசாங்க நிர்வாகிகளையே பாதிக்கும். சிந்தித்தீர்களானுல் எல்லா வகை யான தொழில் முறைகளும் மிக ஒற்றுமையாக நடந்தேறியே வ்ரும். பிறந்த எல்லோருக்கும் உணவு, உடை நிரவுதலின் ஆற்றலுள்ள இராஜ்யம் இல்லாத வரை உலக ஒற்றுமை எவ்வகையிலும் முடியாது. இதுவுமன்றி உண்மை தெரியாத மதங்கள், ஒரு விபர மில்லாத கட்சிகள், வீண் விவகாரக் கோர்ட்டு கள், எடுத்த சரீரம் சரிவர நிலைக்க விடாக் கொடிய பிணிகள், இன பந்துக்களின் பந் தத்தால் பிறவியின் தொல்லைகள், சகாயம் காட்டும் சம்பிரதாயத்தின் கூட ஒத்துழைப்பு கள், இல்லாது இருக்கிறது என்று சொன்னு லும் ஆராய்ச்சியில்லா நம்பிக்கைகள், ஆயுத பலத்தாலும் கோள் கொண்டும் நய வஞ்சக நுட்ப தந்திரங்களின் நிர்வாகங்கள், இவை எல்லாம் உலகத்தில் இருந்தே வரும்.

உலகத்தில் அறிவறியா மக்கள் பெரும் பான்மையாகவும் அறிவறிந்த மக்கள் சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையாகவும் இருந்தே வருவதால் அறிவறியா மக்கள் எடுத்துக்கொண்ட சம்பிரதாயம் நீதி யில்லாது, ஒரு வகைக் கூட்டமாகி ஒதுங்கி, ஜாதிமத துவேஷம் பரவிவர ஏதுவாயிருக்கிறது.

இன்று வரைக்கும் வந்திருக்கும் இக்குறைவால் சவத்தையும் **சமாதியாக்கி சம்பாதிப்புக்காக அறிவை அடிமைப்படுத்தி வந்திருக்கும் தொல்லைகள்** இது போன்ற இன்னும் அநேகம் ஏற்பட்டு இருந்து வருகின்றன.

மக்கள் கடவுளிடம் வேண்டும் கோரிக்கையும் வருந்தும் எல்லாவகை நிந்தனையும் அக்காலங்களில் உள்ள அறிவாளியையும் அரசாங்க நிர்வாகத்தையுமே பாதிக்கின்றன. அறிவாளிகள் எந்த நீதியை போதித்தாலும் அது அரசாங்க நிர்வாக வாயிலாக இருந்தாலே எல்லோரும் சுகத்துடனும் சமதர்மத்துடனும் வாழ்வார்கள். இனி இருக்கவேண்டிய அரசியல் நிர்வாகம் எவ்வித மதபோதனை யில்லாமலும், யாருக்கும் சொந்தமென்ற சொத்துரிமை யில்லாமலும், சரீர வயதுக்கும் அறிவுக்கும் தக்கவாறு எல்லோருக்கும் தொழில், ஆகாரம், படிப்பு, உடை, இடவசதியும், விவாகப் பதிவு, குழந்தை பெறுதலில் திட்டம், பிரசாரத்தால் அறிவுக்குப் பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தமில்லாத எதையும் மக்களிடை பரப்ப விடாதும், பணிவான சொல், எழுத்துக்கள், மக்களிடை இல்லாதும் உள்ள நிர்வாகம் உலகில் இனி என்றைக்கும் இருக்கவேண்டும்.

சுற்றும் இராட்டினத்திலுள்ள பொம்மைக் குதிரையில் ஏறி சவாரி செய்து இறங்குவதுபோல் உள்ள நிர்வாகஸ்தர்களின் நிர்வாகத்தால் மக்களுக்கு பயன் எதுமில்லை.

குடி, விபசாரம், நயவஞ்சகம் இம்மூன்றுமில்லாது நீதியுடன் இருப்போரையே அரசாங்க நிர்வாகி உள்பட உத்தியோகஸ்தர்களாய் நியமித்தல் வேண்டும்.

உலகம் சிறப்பாய் இருக்க உற்சாகம் கொள்வீர்.

இது எல்லோரிலுமுள்ள நன்னேக்க ஏக்கத்தோடு எல்லா மதத்திலும், எல்லா இராஜ்யத்திலும், பரவியே பூர்த்திக்கும்.

இதைப் பார்க்கும்போது உங்கள் அன்பு நிலை சமத்துவத்திலும், உங்கள் மன நிலை உற்சாகத்திலும், உங்கள் அறிவு நிலை ஆராய்ச்சியிலும், தன் சுய நிலை திட சித்தத்திலும் இருந்தே வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேயே சரீரப் பூரிப்பு அடைகிறேன். சந்தோஷம்.

## 19. பொருளாதாரம்

மக்களின் உபயோகத்திற்கு வேண்டிய வஸ்துக்கள் பல பாகங்களில் விளைவதாலும், அப்பொருளைக் காரணமாகக்கொண்டு எல்லா நிர்வாகங்களும் நடந்து வரவேண்டி இருப்பதாலும் அறிவின் தெளிவு இல்லாது வெகு காலம் வரை பண்டம் மாற்றும் முறையில் நிர்வாகம் நடந்துவந்தது. மக்களுக்கு அவைகளால் ஏற்பட்ட சிரமத்தை அறிந்த அரசாங்கம் அதை நீக்கவேண்டி, எப்பொருளையும் சுலபமாக மதிப்பிட்டு மாற்றிக்கொள்ளத் தகுந்த முறையில் முத்திரையிட்ட மதிப்புச் சீட்டுகள் வெளியிட்டது.

அறிவின் நுட்பத்தால் ஓலை தோல் முதலியவைகளில் அரசாங்கத்தார் முத்திரை யிடுவதைப்போல் மக்களும் செய்ய முற்பட்டார்கள். இதைத் தடுக்க அரசாங்க நிர்வாகத் திறமை, மக்கள் எளிதில் அடையமுடியாத உலோகங்களாகிய வெள்ளி, தங்கம் ஆகியவைகளில் முத்திரையிட்ட நாணயங்கள் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயங்களைக் கொண்டே எந்தப் பொருளையும் சுலபமாகப் பெற்றுவிடலாம் என்ற சௌகர்யம் அனுபோகத்தில் தெரிந்தவுடன், ஒரு வியாதிக்கு ஏற்படுத்திய மருந்தால் அநேக வியாதிகள் உண்டாவது போன்று பணத்துக்குள்ள மரியாதையால் பணத்தை அதிகமாகச் சேகரித்த மக்களால் அநேக தீங்குகள் ஏற்படலாயின.

ஆகையால் பணத்துக்குள்ள மரியாதையை ஒழித்து ஒரு மனிதனின் வயது, தொழில், அறிவின் திறமை, அந்தஸ்துக்குத் தக்கவாறு, போதிய இடவசதியும் ஒவ்வொரு வருஷத்திற்கும் உணவு உடை போக்குவரத்து வசதிக்குள்ள மரியாதை கார்டும் ஒவ்வொருவருக்கும் அவர் போட்டோ, பெயருடன் கொடுத்து நிர்வாகம் நடத்துங்கள்.

உபயோகத்திற்கு உதவாத உலோகப் பொருள்களை எடுக்கும் தொழிலாளரின் பிரயாசையும், பொருள் சம்பந்தமான விவகாரத்திற்குள்ள அதிகாரிகளின் பிரயாசையும், அதைப் பாதுகாத்துக்கொண்டிருக்கும் வேலைக்காரர்களின் பிரயாசையும் மற்ற நிர்வாகத்திற்கும், தொழிலுக்கும், விவசாயத்திற்கும் பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. ஆகாரத் திட்டம்

அவரவர்கள் எந்த ஆகாரத்தை மேலாகக் கொண்டுள்ளார்களோ அதுவே சிறந்தது.

கடுமையான சரீர உழைப்பில்லா அறிவாளிகள் பகல் 11 மணிக்குமேல், 2 மணிக்குள் திருப்தியாய் ஒரு வேளை ஆகாரம் உண்பதில் சரீரத்திற்கு வியாதியில்லா சுகம் உண்டு.

இதனுல் குடும்பம், தொழில், தவம், இவைகளுக்கு யாதொரு தடையுமில்லை.

விருப்பமுடன் உண்போரைத் தடுப்பபதும், விருப்பமில்லாதவரை உண்ணவைப்பதும் கூடாது.

## 21. ஒழுக்கம்

இருப்பு, நடை, பார்வை, சொல், உடை ஒழுக்கத்தோடு இருப்பதோடு, மிக மறைவாய் மலங்கழிப்பதும், முழங்கால் வரை உடையால் மறைத்து குளித்தலும் வேண்டும்.

ஆண்கள் எவ்வித நகைகள் அணியாமலும், 30 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் 10 வயதிற்கு மேற்பட்ட பெண்களுடன் நாடகம் நடிப்புக்குச் செல்லக்கூடாது.

ஜெபம், பூசை, விரத மிருத்தலும், பல குறிகள் சரீரத்தில் இடுதலும், தாயத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுதலும், சூரியன், தீபம், நாணயங்கள், படங்கள், சிலை, சமாதிகளை வணங்குவதும் கூடாது.

உணவு உண்போர் முன்னும், விருந்து நடக்கும் இடங்களிலும், பெருங் கூட்டங்களிலும் துப்புதல், மூக்கு சிந்தல், அபான வாயு விடுதல் கூடாது.

## 22. குழந்தைகள் தாமே சொல்லிக்கொள்ள பழகவேண்டிய வாக்கியங்கள்

நான் எதிலும் நல்லவனாய் நடப்பேன். எல்லாம் அறிந்தே முடிப்பேன்.

அன்பாய் இருப்பேன். அறியாமை அகற்றுவேன்.

குறைச் செயல் செய்யேன். குற்றம் அகற்றுவேன்.

சுகாதாரமாய் இருப்பேன். சுயம்புவைப் பரப்புவேன்.

யாருக்கும் பணியேன். எவரும் பணியச் சம்மதியேன்.

சமத்துவம் கொள்வேன். சமாதானம் நிரவுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் வணங்கேன். என்னில் நான் அறிவேன்.

உணர்வாளர்களாகிய முஸ்லிம்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு 5 மாதத்தி லிருந்து ஒரு வருஷத்திற்குள் எவ்வித சடங்கு களும் இல்லாது டாக்டர் நாவிதர் மூலமாக சுன்னத்து செய்தே தீரவேண்டும்.

அநேக கொடிய வியாதிகள் தொடராத தற்கும் விவாகத்திற்குப் பின் ஆண், பெண் போக உணர்ச்சிக்கு வேண்டிய சுகத்திற்கும் இது பயன்படுகிறது.

## 23. பாடல் நடிப்பு உற்பத்தி-விளைவுகள்

முதன் முதல் மக்கள் ஆகாரத்திற்கு யாதொரு தடையுமின்றி வயிறு நிரம்பிய ஆனந்தத்தில் குரலிட்டு கை தட்டி, உடம்பு ஆட்டி ஆனந்த பரவச மடைந்த ஓய்வில் உறங்கினார்கள். இன்றைக்கும் மலைப் பிரதேசங்களில் உள்ள காட்டு மனிதர்களிடம் இச்செய்கை இருந்து வருகிறது.

சொல் ராக மேள தாளங்கள் ஏற்பட்ட தும் உடம்பை ஆட்டி நடிப்பது அறிவில் நாணமாகத் தெரிந்து, தோல் துணி, மண் இவைகளால் பொம்மைகள் செய்து அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகத்திற்குத் தக்கவாறு ஆட்டிச் சந்தோஷித்தார்கள்.

அதன்பின் ஒழுக்கக் கதைகள் ஒவ்வொன்ருக ஏற்படுத்தி அதை பொம்மலாட்டக் கூத்தாக நடத்திஞர்கள். அதன்பின் ஆண்களே பல வேஷங்கள் தரித்து நாடகமாக நடித்து வந்தார்கள்.

தற்காலத்தில் நாகரிக அறிவு கற்பனைக் கட்டுரைகளால் கனவு ஆவேசம் துவேஷம் காமம் தந்திரங்கள் நிரம்பிய நாவல்களாக எழுதி அதை ஆண் பெண்கள் அறிவு நாணத்தை மறந்து நடிக்கும் நாணமிலாச் செய்கைகள் இன்று நிரம்பி விட்டன. சில நாவலும் கதையும் சிறிது காலத்திற்குப்பின் கோயில், சமாதிகளான உற்பத்தியாகி கூத்தாடவேண்டியதாகிவிடுகிறது.

பணமே பிரதானமாகக் கருதி சிறு தீங்கு விளைவிக்கும் குடி, சூது விபசாரம் இவைகளைவிட மக்களுக்குக் காமச் சேட்டை உண்டாக்கக்கூடிய விதத்தில் பெண்களை அலங்கரித்து பாட்டு நிர்வாண நடனங்களோடு படம் பிடித்து பார்வைப்படும் இடங்களிலெல்லாம் காமத்தீ மூட்டக்கூடிய கவர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியான வர்ணப் படங்களை ஒட்டி மக்களைக் கெடுக்கும் நாடக மேடைகள் அதிகரித்து வரும் இத்தகைய அறிவு ஆராய்ச்சி இல்லா பண சம்பாதிப்பு முறைகளால், கேவலத் தொழிலென்று ஒதுங்கி நிற்கும் விபசாரத் திற்கு ஆதரவும் ஆமோதிப்பும் ஏற்படுகின் றது. இச்செய்கைகளைக் கண்டிக்க சாதிமத உயர்வு பேசும் எல்லாரும் இதற்கு வேண்டிய தக்க பரிகாரம் உடனே எடுத்துக்கொள்ளுங் கள்.

என் இருதய செல்வப் பெண்மணிகளே! பெண்கள் நாணமில்லாது நடப்பதையும் வியா பார விளம்பரங்களில் உடை ஒழுக்கமில்லா பெண் உருவ லேபில்களையும் அரசாங்க அதி கார மூலமாகத் தடுக்க முற்படுங்கள்.

## 24. விவாகத் திட்டம்

பெண் குழந்தை ருதுவாகியபோது பிரஸ்தாபப்படுத்துவதும் சடங்குகள் செய் வதும் கணிதம் கணிப்பதும் கூடாது.

18 வயதிற்குமேல் எக்காரணத்தை முன் னிட்டும் பெண் குழந்தையை விவாகமில்லா மல் வைத்திருக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22—23 வயதுள்ள ஆண், 14—15 வயதுள்ள பெண்களுக்கு விவாகம் முடிப்பது நல்லது.

பெண்களின் வயதிற்கு 10 வயதிற்கு மேற்பட்ட ஆடவர்களுக்கு எத்தகைய விருப்பத்தை முன்னிட்டும் விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.

விவாகம் முடிந்த பெண் ருதுவாகுமுன் புருஷன் இறந்துபோனால், விதவை என்று சொல்லாது, உடனே மறு விவாகம் செய்து வைக்கவேண்டும்.

40 வயதிற்குக் கீழ்ப்பட்ட விதவைப்பெண்கள், குழந்தை இல்லாதிருந்தால் மறு மணம் செய்துகொள்வதே உத்தமம்.

30 வயது ஆடவர்களுக்கு தாரம் இறந்து போயிருந்தால் மறு விவாகம் விதவையையே செய்துகொள்ளவேண்டும்.

தாரம் இருந்து குழந்தை இல்லாததற்காக மறு விவாகம் செய்துகொள்வது கூடாது.

மணம் முடிப்பதில் உடல் நிலை, குணம் உயர்வு, தொழிலின் முயற்சி, இவை பார்ப்பது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைகள், பணம் கேட்டல், அதிக செலவு செய்தல், கடன், நன்கொடை விரும்புவதும் மற்றவர்களுக்குச் செய்தலும் கூடாது.

ஜெபம், அதற்கு ஒரு குரு, மாதம், கிழமை, நக்ஷத்திரம், பாகுபாடு சடங்குகள் கூடாது.

வீடு, பந்தல், உற்சாகமாய் அலங்கரித்தல், ராக சுவை வைத்தல், இனிப்பு, கனி, வாசனை, புஷ்பம், வழங்கலாம்.

விவாகத்திற்கு வந்திருக்கும் கூட்டத்தில் ஒரு பெரியோனால் மண மக்களின் சம்மதத்தில் மாலை சூட்டவேண்டும். அக்கூட்டத்தின் சந்தோஷமே மணமக்களைச் சந்தோஷமாய் வாழச் செய்யும்.

தாய், தந்தை, மாமி, மாமன் அனுவசிய கட்டுப்பாடுகள் இல்லாமல் சுயேச்சையாய் வாழ வைத்தல், வாழுதல்.

பெண்கள் விவாகமில்லாது கன்னியாய் இருப்பதில், ஆத்ம சாந்தியை விரும்பி, பொறுமையுடன் நீதியாக இருந்தாலும் அவர்களுக்கோ, அவர்களின் சரீரத்தின்பின், ஆத்ம சாந்திக்கோ, அவர்களால் உலகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கோயாதொரு பிரயோஜனமும் கிடையாது.

அறிவு உடையோருக்கே இன்பம், நீதி, ருசி, அனுபவம்.

விளைந்த அறிவு அனுபவிக்கும் அனுபோகங்களை அடக்குவதும் குற்றமே. நீதியில்லா அநீதியில் அனுபவித்து மடிவதும் குற்றமே.

சரீரத்தின் சிறப்பு, அறிவின் நீதியான அனுபவத்தின் இன்பமே இன்பம்.

அன்பு, பார்வை, பருவம், நீதி, உரிமை, கூடுதல், சேர்ந்ததே இன்பம்.

## 25. குழந்தை பெறுதலின் திட்டம்

விவாகமுள்ளோர்:—இரண்டு குழந்தைகளைப் பெற்றால் போதும்.

ஆண் குழந்தை வேண்டுவோர் குழந்தை பிறக்கும் வரையிலும் புணரும்போதெல்லாம் 6 அடி நீளம் 3 அங்குல அகலம் உள்ள மெல்லிய துணியால் இடது பீஜத்தை மட்டும் மேல் தூக்கி வலது தோளில் கட்டிப் புணர, ஆண் குழந்தை தரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரகாரம் வலது புறம் மாற்றிக் கட்டிக்கொண்டால் பெண் குழந்தை தரிக்கும்.

3 வருஷம் அல்லது 5 வருஷம் அல்லது 7 வருஷத்திற்கு ஒரு முறை குழந்தை தரித்தாலே தாயின் சரீரம் பலக்குறைவு இல்லாமலும், குழந்தை புஷ்டியாகவும், சரீர சுகத்துடனும் இருக்கும்.

குழந்தை அறவே வேண்டாததற்கு மாத விடாயாகி 23 நாளுக்குமேல் போகிப்பதில் குழந்தை தரிக்காது.

சதா போகம் வேண்டுவோர் போகத்தில் இந்திரியத்தைக் கீழே விட்டுவிட்டால் குழந்தை தரிக்காது. இதுவால் திரேகத்திற்கு யாதொரு தீங்குமில்லை.

## 26. போகம்

25 வயதிற்கு மேல் நாள் ஒன்றுக்கு ஒரு முறையும், 35 வயதிலிருந்து 60 வயது வரை வாரம் இரு முறையும், 60 வயதிற்கு மேல் மாதம் ஒரு முறையும், போகித்தால் சரீர சுகமுண்டாகும்.

விந்து ஊறு முன், அடிக்கடி போகித்தால் கண்கள் கெடுவதுடன், வாதம், காசம், முதலிய நோய்கள் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வாளர்கள் நெற்றியில் ஞாபகம் வைத்து கண்களை இமையாது போகித்தால் உணர்வு நன்ருயிருப்பதுடன் சரீரமும் சுக மாயிருக்கும்.

## 27. குழந்தையில்லாக் கவலை

தன் ஆயுளுக்குப் பின் கிரியைக்காகவும் பரம்பரை பெயர் பட்டத்திற்காகவும் பிள்ளை வேண்டும் என்ற எண்ணமுடையோன் அறி வில்லான்.

பிள்ளை யில்லாதவன் சொத்து எல்லோ ருக்கும் நிரவி வரட்டும் என்ற எண்ணத்துடன் பிள்ளை யில்லாதவன் பாவி என்ருன் தந்திரி.

பிள்ளை யில்லா குற்றத்திற்காக தான தருமு ஆலயங்கள் செய்ய முற்பட்டான் தன வந்தன், வேந்தன்.

தன் பணத்தை மற்றவர்கள் அனுபவிக் காது பாதுகாக்க பிள்ளை வேண்டுமென்ற எண்ணமுடையோன் பணக்காரன்.

பிள்ளைகள் மூலமாவது வறுமை நீங்கி சுக மடையலா மென்ற எண்ண முடையோன் ஏழை.

போர்புரிய குழந்தைப் பெருக்கத்தை நாடுவோர் யுத்த நாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித பெருக்கத்தாலும், ஏழை பணக் காரர் பாகுபாட்டாலும் வந்த தொல்லை இது.

அரசியல் நிர்வாகங்கள் இதுவரை, இவை களின் விவரம் அறியாத குறையால் அநேக வித கற்பனைகளுக்கு, இயற்கை சுபாவமுள்ள மனித அறிவு ஈடுபடவேண்டியதாயிற்று. கற் பனைக்குள்ளான அறிவு கற்பனையை ஒழிக் கும் வரையிலும் வீண் காலப் போக்கிற்கும் பிறவிக்கும் ஆளாகவேண்டியதாய் இருக் கிறது.

## 28. சூது!

சிறு தொகையைக் கட்டிப் பெருந் தொகையை எதிர் பார்த்து ஏங்கிக்கொண் டிருக்கிறீர்கள். ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில் தன் அறிவின் சுய பிரயாசையை வீணாகக் கெடுத்துக்கொண்டீர்கள்.

1. உங்கள் உண்மை உற்சாக நீதியை விட்டு மாறிக்கொண்டீர்கள்.

2. அப்படியே ஜெயித்துவிட்டீர்களானு லும் அநேகரின் தோல்வியே உங்களின் வெற்றி.

3. அவ்வெற்றியின் பரிதாபச் சொத் தால் சுகிக்கும் சுகம் சுகமா? சுகமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சொத்தால் சுகிக்கும் சுகமோ கருணை அருள்பெற்று இருக்காது.

4. உன் தோல்வியின் பரிதாபத்தைப் போலவே உன் வெற்றியில் அநேகரின் பரிதாபம் அடங்கியுள்ளது.

5. களவினால் கிடைத்த சொத்து ஒருவரைப் பாதிக்கிறது. சூதினால் கிடைத்த சொத்தோ பலரைப் பாதிக்கிறது.

6. இன்றே சூதை விட்டு விட்டு சத்தியம் சொல்லி, இதன் அடியில் கையொப்பம் இட்டுக்கொள்.

.....................................

7. பலன் : நீ உன் குடும்பத்தோடு கவலையின்றி அறிவின் சிறப்போடு நல்வாழ்வு வாழ்வாய்.

## 29. இந்த பூமி அழியாது

இந்த பூமியும், இதைவிட பெரிய பூமிகளும் எப்போதும் அழியா. காரணம் சிறிய நட்சத்திரங்கள், அழிந்து பிரியும் அணுக்கள், பெரிய பூமிகளிலும், நட்சத்திரங்களிலும், சேர்ந்துகொள்ளுகின்றன.

ஜீவராசிகள் இல்லாதிருந்தால், நட்சத்திரம் என்றும், ஜீவராசிகள் இருந்தால் பூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பெயர். பூகம்பம், காற்றல், இந்த பூமியில் சேதம் ஏற்பட்டால் 90 நாட்களுக்குள், மேல் சென்ற அணுக்கள் பூமியில் வந்து சேர்ந்துகொள்கின்றன.

## 30. அழிந்தது தோன்றல்

கண்களால் பார்க்கப்படும் பெரும் தோப்புகள், கட்டிடங்கள், நிலங்கள் அழிந்துவிட்டாலும் சுமார் 2000 வருஷங்களுக்குப் பின் அவை முன்போலவே தோன்றிவிடும். காரணம்:-அழிந்தது ஒன்று, பார்த்த பதிவு அனேக மனிதர்களின் கருத்தில் இருப்பதே. மனிதர்கள் இறந்துபோனாலும், பார்த்த பதிவு அறிவு அணுக்களில் இருப்பதாலேயே மீண்டும் உற்பத்தியாகின்றன.

### சுவை மாறுதல்

அறுந்து விழும் நட்சத்திரங்கள் அணுக்களாகப் பிரிகின்றன. அவ்வணுக்கள் பூமியில் வந்து சேர்வதில் திடீரென்று புது செடிகளும் வியாதிகளும் உண்டாவதுடன், செய்து வைத்த மருந்துகள் கெடுவதும் சுவையான வஸ்துக்களில் சுவை மாறுதலும் உண்டாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. முன் ஜென்மத்தின் சம்பந்தமும் சம்பந்தமில்லாததும்

வெகு காலமாக ஏழை தனவந்தர் என்ற பாகுபாடுகள் உலகில் இருந்து வருவதற்கு அரசாங்க நிர்வாகத் திறமை குறைவே காரணமாகும்.

கால நிலவரத்தாலும்; யூக யுக்தி சமய சந்தர்ப்பங்களையும், பிரயாசையையும் பொறுத்து எளியோன் பணக்காரனுவதும், பணக்காரன் எளியோனுவது மாகும்.

தந்தை, தாயின் விந்தும் இரத்தமும் கெட்டு இருந்தால் குழந்தைகளுக்கு கெர்ப்பத்திலேயே நோய் ஏற்படுகிறது.

தாயின் இருப்பு, பார்வை, நடை, படுக்கையில் அஜாக்கிரதையால் அவயவக் குறைவோடு குழந்தைகள் பிறக்கின்றன.

அறிவின் உணர்ச்சியுள்ள வயதுக்குப் பின் ஏற்படும் வியாதிகள் தன் கெட்ட எண்ணத்தாலும், பார்வையாலும், நடத்தையாலும் உலகத்தில் வியாதிகள் பெருக்கத்தாலும் ஏற்படுகின்றன. ஆகையால் இவைகளுக்கும் எளியோர் தனவந்தராய் பிறப்பதற்கும் முன் ஜென்மங்களுக்கும் யாதொரு சம்பந்

தழுமில்லை. முன் ஜென்மங்களின் தொடர்பு அறிவின் பெருக்கம் ஒன்றிற்கே சம்பந்தம்.

உண்டு உறங்கும் அறிவின் பெருக்கமில்லா மக்களுக்கு மற்ற எவ்வித எண்ணங்களின் வழுவில்லாதிருந்தும் அறிவின் விளக்கத்தின் உயர்வுக்காக வேண்டியே மறுபிறவி எடுக்கிறார்கள்.

அறிவுள்ள மக்கள் வறுமையின் கொடுமையாலும் வம்பு, வழக்கு, விவகாரத் துன்பத்தாலும், தான் கொண்ட கொள்கை, பதவி, பணம், படிப்பு, அறிந்த எல்லை இவைகளைப் பெரிதாகக் கருதுவதாலும், மத போத, பேதகக் கற்பனைகளை நம்புவதாலும், பக்தி யோக ஞானத்தின் விருப்பத்தாலும். தன் சரீர இன்பங்களை சரிவர அனுபவிக்காத ஏக்கத்தாலும், நல்ல எண்ணத்திற்கும் கெட்ட எண்ணத்திற்கும் பொதுவாகவே வலு அதிகரித்துவிடுகிறது. உதாரணம்:—ஒரு மணங்கு இரும்பும், ஒரு மணங்கு தங்கமும் கனத்தில் ஒன்றே.

இக்குறையால் மரணிப்போர்கள் அவ்வெண்ணத்தின் வலுவால் மீண்டும் மறுபிறவி சீக்கிரத்தில் எடுக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லா மக்களும் சமத்துவம்

பின் பிறக்கும் பிறவிகளில் முன் இருந்த தேசத்திலோ மதத்திலோ இனத்திலோ பிறப்பதில்லை.

உயிரைவிட்ட ஆத்மாக்கள் ஓய்வு எடுத்து பிறவிக்கு வரும் சமயத்தில் பூமி சுற்றும் வேகத்தால் எந்த தேசத்திற்கு நேரே வருகிறதோ அத்தேசத்தில் 7 மாத கெர்ப்ப ஸ்திரீயுள்ள விடத்தில் பிறவி எடுக்கின்றன. அதனால் எந்த லோக தேசத்தில் உள்ளவர்களும் சகோதர சமத்துவ முடையவர்களே.

## செய்கை சேர்க்கைகளின் தொடர்பு

சொல் சக்தியாலும், நடத்தை பார்வை குரல் அன்பு அழகாலும், படிப்பு பணம் உத்தியோகம் இவைகளின் அந்தஸ்தின் பிரஸ்தாபத்தாலும், சமய சந்தர்ப்பங்களின் இணக்கத்தாலும், ஒருவருக்கொருவர் நெருங்கிய வெகு கால தொடர்பாலும் போக்கிரித்தனத்தாலும், பெரு வருமானம் பதவி நல்லறிவு இவைகள் உண்டாகிவிடுவதும் உண்டு.

இவைகளின் காரணத்தால் காதலின் தொடர்பு நோய் கஷ்டம் நஷ்டம் அநேக தொந்தங்களும் உண்டாகிவிடுவதும் உண்டு.

நன்மையை கிரகித்து தீமையை அகற்றிக் கொள்ளும் தன் உணர்தலின் ஆராய்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள வல்லமையுடன் இருப்பீர்களானல் நல்லதை முன்கால தவப்பயன் என்றும், தான் கெட்டதில் சார்ந்துகொண்டு அதை வினைப் பயன் என்றும் சொல்ல வேண்டியதே ஏற்படாது.

### பிறவி

இவ்வறிவுலகில் முதன் முதலாகப் பிறக்கும் புதிய மனிதர்களுக்கு அறிவின் விளக்கம் வேண்டியிருப்பதால் மூன்று பிறவிகளில் தம் பிறவியை முடித்துக்கொள்ளவும் அறிவுடையோர் இதே பிறவியில் பிறவியை முடித்துக்கொள்ளவும் ஏதுவாயிருக்கிறது.

உதாரணம்:—மரம் முளைத்துப் பூத்துக் காய்க்குமுன் அது பட்டுவிட்டால், நெருப்பிற்கும், அநேக காரியங்களுக்கும் உபயோகப் படுகின்றது போல், அறிவின் பெருக்கமில்லா மக்கள் அறிவின் உயர்வுக்கு இடை நடுவே அநேக வேலைக்கு உதவுகிருர்கள்.

விளைந்து பழுத்து ரசமாயிருப்பினும், அதை அனுபவிக்கவேண்டிய உருவமோ, மனிதனே, இல்லாது போனல், பிரயோசன மில்லாதது போல், அறிவுடையவனுகப் பிறந்தும், அனுபவிக்கும் அனுபோகத்திற்கு தடையிருந்து அனுபவிக்காமல் போனல் மறுபடியும் பிறந்தே தீரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழ ரசத்தின் சுவையை ருசிக்க, அறிவுடையோர் இருப்பின் மரத்தின் ஏக்கமும், ரசிக்கும் சுவையறிவின் ஏக்கமும் முடிவடைவது போல், அறிவுடையவனாகப் பிறந்து எல்லாம் அறிந்து, அனுபவிக்க ஏதுவாயிருக்குமாகில், சரீரம் எடுத்த பலாபலனும் முடித்து, சரீரம் எடுக்கா நிலையும் அறிந்து பிறவி முடிப்பார்கள்.

அறிவுடையோர்களின் சொல்லை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளுவோர், அநேக பிறவிகளில் அறிவைப் பெருக்கிக்கொண்டு வந்தவர்களே யாவர். மீண்டும் அநேக பிறவி எடுத்து அனுபவிக்கவேண்டு மென்பதில்லை. அறிவின் தோல்வியால் வேறு சரீரம் எடுப்பதை விட, அறிவின் ஜெயத்தால் இச் சரீரத்திலேயே அனுபவித்து முடிக்கலாம்.

உதாரணம்:—விளைந்த வித்தின் ருசியை மீண்டும் விளைவித்து அறியவேண்டிய தில்லாதது போல்.

சத் விஷய சம்பந்தமான கவிகளும், பேச்சுகளும் நடக்குமிடத்தில், யாருக்கு உருக்கக் கண்ணீர் வருகிறதோ, அவரும், கண் விழித்து நெற்றியால் ஆராய்ந்து கொண்டிருப்பவரும், அநேக பிறவிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அறியும் அறிவை தேடியவர்களா வார்கள்.

## 32. மதி

மதியே மனிதன், மதிமறந்த மனிதன், மதிதேடும் மனிதன், மதியில் மதியாய் அறிவோடு நிலைத்தவன் மனித ஈசன்.

விதியென்ற விவகாரமற்ற சொல்லில்லா மக்களிடமே எல்லா ஆட்சியும்.

அறிவை அறிய முற்படும் அறிவாளி, விதியென்ற சொல் சொல்வானுனல் அது வெறிபிடித்த விஷச் சொல்லே ஆகும்.

சிலையைப் போன்றது விதி. சிலையை எதற்காகச் செய்தது என்று அறியும் ஆற்ற லில் சிலையும் மதியே.

ஒவ்வொரு துறையிலும் அனுபோக தீர்க்க திடத்தில் உள்ளவர்களாகிய உபாத்தி யாயர், வைத்தியர், கொத்தர், வாகன ஓட்டி, ஆராய்ச்சி நிபுணர், பரிபாலன நிர்வாகி, குரு இவர்களை நம்பி உலகத்தோர் அவர்களுக்கு வேண்டிய காரியங்களிலும் ஓட்டும் வாகனங் களிலும் கூசாது, நிஷ்களத் துணிவுடன் செல்லவும், செய்யவும் முற்படுகிறுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங் கப்பல் ஓட்டியின் ஜாக்கிரதைக் குறைவால் ஏற்படும் அபாயம் அவன் ஒருவனை மட்டும் பாதிக்காமல் அவனை நம்பிய எல்லோரையும் பாதிக்கிறது.

ஒவ்வொருவனின் ஜாக்கிரதையில் எல்லோரும் தாம் தாம் கோரிய இடங்களில் சுகமாய்ச் சேருகிறார்கள். அதைப் போன்றே அறிவின் நுட்பம், மேல் உயர்வுக்குத் தக்கவாறு அநேக வித உத்தியோகஸ்தர்களின் ஜாக்கிரதையால், ஒவ்வொரு பெரும் அரசியல் நிர்வாகங்களும் நடைபெறுகிறது. எல்லாம் மதியுடன் இருந்தால் யாதொரு தாமதமும் அபாயமுமில்லாமல் நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாய் நடந்தேறுகின்றன. ஆகையால் எதிலும் முக்கியம் மதியே.

ஒருவன் வேகமாய் வண்டி யோட்டிக் கொண்டே போகின்றான். இதை அறியாத ஒருவன் குறுக்கே சென்றுகொண் டிருக்கின்றான். அதைக் கண்டு மற்றொருவன் வண்டியை எங்கு அவன் மேல் ஏற்றி விடுகிறானோ என்ற பயத்தோடு நினைக்கிறான். பாராது சென்றுகொண் டிருந்த வண்டியோட்டி திடுக்கிட்டு விபத்து ஏற்படாது காப்பாற்றிக்கொண்டான். வெகு சுலபமாய் இதை யறிந்து எழுதியும்விட்டான். இவ்

வளவிலும் படிப்படியாக ஏக்கத்தோடு உயர்ந் திருப்பது மதி.

நுட்பமில்லாது வேகம் மட்டும் இருந்தால் பிரயோஜனமே இல்லை. நுட்பமிருந்து வேகமில்லாமலிருந்தால் நினைத்தவாறு எதுவும் முடியாது. வேகமுள்ள விமானத்தை சாதுரியமாக ஒட்டுவதுபோல் அறிவின் வேகமும் நுட்பமும் இருந்தால் எதுவும் முடியும்.

## 33. ஆராய்ச்சி

சரீர மெடுத்த பயன் எதையும் சுகமாய் அனுபவிக்க ஏதுவில்லாது சகிப்போடு வருந்தி மடிவோர் அநேகர்.

வறுமையால் ஏற்படும் துன்பங்களைச் சகிக்க முடியாது நஞ்சுண்டும் நீரில் மூழ்கியும் இன்னும் அநேக விதத்தில் உயிரை மாய்த்துக்கொள்வோர் அநேகர்.

பொருள், நகை, இவைகளுக்காக அபகரித்து ஜீவிப்போரால் கொலை செய்யப்படுபவர்கள் அநேகர்.

தன் துர்ச்செயல்களின் குற்றங்களை உணர்ந்து என்றைக்கு மன்னிப்பு கிட்டுமோ என்று வருந்தி மடிவோர் அநேகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தொழிலும் வருமானத்தைக் கருதியே இருப்பதால், வியாதியஸ்தர்கள் அதிகமாக வரவேண்டுமென்ற ஏக்கம் வைத்தியர்களிடமும், விபசாரத்திற்கு அதிக மக்கள் வரவேண்டுமென்ற ஏக்கம் தாசியினிடமும், விவேகமில்லா நம்பிக்கையால் கிரியைகள் பூஜைகள் செய்ய மக்கள் அதிகமாக வரவேண்டுமென்ற ஏக்கம் சமாதி பூசாரிகளிடமும், கலவர வம்பு வழக்கு அதிகமாக வரவேண்டுமென்ற ஏக்கம் வக்கீல்களிடமும், குடிகாரர்கள் அதிகமாக வரவேண்டுமென்ற ஏக்கம் மதுபான கடைக்காரர்களிடமும், பிணங்கள் அதிகமாக வரவேண்டுமென்ற ஏக்கம் மயான காவலாளியினிடமும், தொழில் எதுவானாலும் சரி, வரி அதிகமாக வந்தால் போதுமென்ற ஏக்கம் அரசாங்கத்திலும் இருப்பதற்கு பொருளாதாரமே காரணம். வெள்ளாண்மை என்றைக்கும் செழிப்பாய் விளைவாகவேண்டு மென்ற எண்ணமுடையோன் விவசாயி ஒருவனே.

குடும்பத் தொல்லைகளுக்குப் பயந்து களவுக்குச் சென்றால், அதனால் ஏற்படும் அவமானத்திற்குப் பயம். தாடி முடி வளர்த்து காவி அணிந்து சந்நியாசம் கொண்டால் உலகத்தார் கேட்கும் அநேக வித கேள்விகளுக்

குப் பயம். இவைகளுக்கெல்லாம் சாந்தம், சாந்தம் என்று சொல்லித் தப்பித்தாலும் ஈ, எறும்பு, கொசுக் கடி, நமைச்சல், சொறி, சிரங்கு, ஜலதோஷம் இவைகளின் சிறு தொந்தரவுகளைப் போன்று எதிலும் நிம்மதியாய் ஒருவன் இருக்க முடிவதில்லை.

பணத்திற்குள்ள மரியாதையினல், பணச் செலவாலும், சிபார்சுகளாலும், படித்த படிப்பு தொழில் வைத்தியம் விஞ்ஞான சுளிவு அதிகார தோரணை இவைகளின் பிரயோசனம் எல்லா மக்களுக்கும் பொது நீதியாக உதவுகிறதே யில்லை. தனக்கு வேண்டிய பணம் சம்பாதிக்கவும் பணமுடையவர்களுக்குமே உதவுகின்றன.

பொது மக்களுக்கென்று இருக்கும் பொது ஸ்தாபனங்களும், அரசியல் நிர்வாகங்களும், பணத்திற்குரிய மரியாதையினல், பொது மக்களுக்குப் பிரயோசனப்படாது. "ஆளைப் பிடிக்கும் மீன் வலையைப் போல்" அந்தந்த நிர்வாகத்திலுள்ள சில உத்தியோகஸ்தர்கள் சம்பாதிக்கவே உதவுகிறது.

கொடிய பெரும் வியாதியாயிருப்பினும் சரி, காசம், பக்ஷவாதம், அங்கஹீனம், கூன், குருடு, வெறி, மடமை, இவையிருப்பினும் சரி, தள்ளாடும் வயது 80 இருந்து தாரம் பன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டிருப்பினும் சரி, இவர்களுக்குப் பணம் மட்டும் இருந்தால் இன்னும் வேண்டிய பதினாறு வயது சின்னஞ்சிறு வாலிபப் பெண்ணை விவாகம் செய்து கொடுத்து புகழ்மாலை சூட்டி வரவேற்பு செய்யும் பெரும் பாதகச் செயலோடு பொது ஸ்தலங்களிலும், அரசாங்க நிர்வாகத்திலும் பதவியையும் வகிக்கவைக்க வழக்கத்தில் இருந்து வருவதை அடியோடு தொலைக்க ஒவ்வொருவரும் முற்படுங்கள்.

விவேகத்திற்குப் பொருத்தமில்லா கொள்கை, ஆஸ்ரம, நூல்களை விவேகமில்லா மக்கள் பெரிதாக நம்பி வருவதில் விவேகத்திற்குத் தடையாயிருப்பதோடு அவர்கள் நம்பிக்கையில் தம்மனதில் பலதையும் கற்பித்துக் கூத்தாட ஆரம்பித்துவிடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட அனர்த்தமான கொள்கைகள் அநேகம் இருப்பதில், அவற்றிற்குப் பொருள் ஆதரவு அதிகமாயிருந்தால் விவேகிகளும் அந்த பொருள் ஆதரவுக்காக வேண்டியே தம் விவேகத்தை அடியோடு விட்டுவிட்டு, அத்துடன் ஒத்துழைத்து தமக்கு வேண்டிய சௌகரியங்களை முடித்துக்கொண்டு வருவதால் மூடக் கொள்கைகள் நிலைத்துவர ஏதுவாய் இருந்துவருகிறது.

விவசாயிகள் நீர் நிலத்தின் உரத்தை நம்பி வெள்ளாமை செய்து பயனளிக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். தந்திரிகள் மக்களிடத்தில் அறிவு அபி விருத்திக்குத் தடையான அறியாமையை விளைவித்துப் பிழைத்து வருகிறார்கள்.

வறுமை யுள்ள நாட்டில் விவகார வியாச்சிய கோர்ட்டுகளும் கூன், குருடு, நொண்டி அங்கஹீன கொடிய நோய்களும் வேத மத போத பாகுபாடுள்ள ஆலயங்களும் அதிகமாகவே பெருகி இருக்கின்றன.

வெள்ளாண்மை விளைவும் குளிருமுள்ள நாட்டில், குடி, விபசாரம், கொலை அதிகமாயிருப்பினும் அன்பு, ஆதரிப்பு, ஒற்றுமையோடு பெருந்தன்மை நிறைந்தே இருக்கிறது.

பணமுள்ள நாட்டில் பல பொருள்களை உருவாக்கி நாடுதோறும் விலை பெற அனுப்பி சம்பாதிக்கும் ஏக்கம் அதிகமாகவே இருக்கிறது.

பெரிய புண்ணிய ஸ்தலங்கள் இருக்கும் ஊர்களில் வசிக்கும் பெரும்பாலோர்களின் சொல் அன்பாய் இருப்பினும் நயவஞ்சக விஷம தந்திரங்கள் நிறைந்தே இருக்கின்றன.

படிப்பாளிகள் நிறைந்திருக்கும் ஊர்களில் படிப்பால் தன்னை உயர்வாகவும் பிறரைத் தாழ்வாகவும் நினைக்கும் காரணத்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதார்த்த அன்பு பரவசம் பெரும்பாலும் இருப்பதில்லை.

விவேகமில்லா தந்திரிகள் தமக்கு வேண்டிய சௌகரியத்திற்காகச் செய்யும் தந்திர செய்கைகளால் அநேக எதார்த்த மக்களையும் பின் அவர் இருதரப்பினர்களின் பரம்பரையையும் வெகு காலம் வரை அறியாமை பாதித்திருக்கிறது.

இதுவரை நடத்திவந்ததை விடவேண்டுமே என்று ஈனப்படாது அறிவுக்கு முரணாய் உள்ள மத ஆசார விதிகளை அறிவுடையோர்கள் விடுவித்தீர்களானல் அநேக ஆயிர மக்களை நல்லறிவுக்கு ஆளாக்கி வைக்கிறீர்கள்.

என்றென்றைக்கும் தனவந்தர்கள் பரம்பரையில் எளியோர் இல்லாது எல்லோரும் தனவந்தர்களாகவே இருப்பதில்லை.

எளியோரும் பிச்சை எடுப்போரும் விவகார வழக்குகளும் இல்லாத மதம் எதுவுமில்லை.

தனி ஒரு வியாதிக்காக பரீக்ஷைபெற்ற வைத்தியரிடம் சிகிச்சை செய்துகொண்டவர்களெல்லோருக்கும் அவ்வியாதி தீர்ந்துவிட்டதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் செய்யும் பிரார்த்தனையில் எந்தக் கடவுள் கோவில் சமாதி மூலமாவது தனி ஒரு விஷயமாவது எல்லோருக்கும் பூர்த்தியாகிய தென்பதும் ஒன்றுமே இல்லை.

உண்ண உதவாத விலையுயர்ந்த தங்கம், வைடூரியம், முத்து நிரம்ப இருக்கும் தனவந்தர் உணவு உண்ணுது பசி தீர்த்துக் கொண்டோர் எவருமில்லை.

பெரிய அரசர்களுக்கு வைத்தியராய் இருந்த வைத்தியரும், அரசரும், சாகா கல்பம் உண்டோரும், அறிவில் சிறந்த ஞானிகளும், சரீரம் விடாது என்றைக்கும் ஸ்தூலத்தில் அறிவோடு இருந்தோர் ஒருவருமில்லை.

வருங்காலத்திலாவது மனித சரீரத்திற்குப் பெரும் பதவி 'யுள்ள வேறு ஒரு சரீரம் உலகில் தோன்றக்கூடியதாய் இருப்பின் மனித சரீரத்தில் எந்த நிர்வாகமும் நடத்தக் கூடிய விவேகம் ஏற்பட்டிருக்காது.

ஸ்தூல உடல் எடுக்குமுன் சூக்ஷ்ம காரண லோகங்களில், இன்று ஸ்தூல உடலில் அனுபவிக்கும் சுகத்தைவிட மேலான சுகத்தில் இருந்திருந்து சுகமறிந்து சுகித்திருக்குமாகில் ஸ்தூல சரீரத்தில் அனுபவிக்கும் சிறு சுகத்திற்காக எவரும் உலகத்தில் இருக்க சம்மதிக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் என்ற தத்துவம் இன்னது இன்னதுதான் என்று விளக்கத்துடன் விளக்கியதும், மனிதனின் தன் நிலையை அறிவித்ததும், இவ்வுலக சமாதான ஆலயத்தைத் தவிர இதுவரை உலகில் தோன்றியது வேறு எதுவுமில்லை.

## 34. மனிதனின் எண்ணமும் தொழிலும்

தன் மலஜலம் சுத்தம் செய்துகொள்ளும் போதும், தன் உடை துவைப்பதிலும், தன் முகத்தைத் தானே க்ஷவரம் செய்துகொள்வதிலும், தான் இருக்குமிடத்தை சுத்தம் செய்துகொள்வதிலும், தன் அனுபோகத்திற்கு மாருக நடப்பவர்களைத் திருத்தும் போதும், மரியாதை நற்சொல் நன்கொடை யளிக்கும்போதும், விசாரணையிலுள்ள போதும், அறிவிற்குப் பொருத்தமில்லாததைக் கண்டிக்கும் போதும், தான் சுயேச்சையான நிம்மதியில் இருக்கும் போதும், ஒவ்வொரு மனிதனும் எல்லா மத அரசியல் கொள்கைகளிலும், தொழிலாளிகளின் செய்கைகளிலும் க்ஷணத்திற்கு க்ஷணம் இருந்தே வருகிறன். ஒவ்வொரு தொழிலையும் தன் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டவர்களே, தோட்டி, ஒட்டன், நாவிதன், வண்ணுன், கொத்தன், தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளி, தனவந்தன், அரசன், சமயாச்சாரி, தீர்க்கதரிசி, அறிவாளி, ஞானியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## 35. ஞாபக சக்தியின் தொடர்பு

ஒரு மனிதனின் நினைப்பின் ஞாபக சக்தியின் வேகம், அநேக தொடர்புகளுக்குள்ளது, அறிந்த இடத்தின் வாயிலாகவும், பார்த்த ஒருவரை நினைத்த மாத்திரத்திலே, எத்தனை ஆயிரம் மைலுக்கப்பால் இருந்தபோதிலும் இவனை அவன் நினைக்கிறான். ஒரு கூட்டத்தின் வாயிலாக ஒருவரைப் பார்த்திருந்தால், இவனுக்கு அவன் தெரியாது போனாலும், இவன் அவனை நினைத்த மாத்திரத்தில் அவனுக்கு அக் கூட்டத்தின் ஞாபகம் வந்துவிடுகிறது; ஒருவருக்கொருவர் பல காரணங்களால் தொடர்பு இருந்துகொண்டு இருக்கிறது.

## 36. அறிவாளிகளின் சந்தர்ப்பம்

தனக்குத் தெரிந்த ஒரு இடத்தைப்பற்றி அறிவாளியிடம் ஒருவன் கேட்பானாகில் அவ்விடம் அறிவாளிக்குத் தெரியாதிருந்தாலும், கேட்பவனின் ஞாபகத்திலுள்ளது அறிவாளியிடம் பிரதிபலித்து பதில் சொல்லிவிடுவார். இருவருக்கும் தெரியாத இடத்தைக் கேட்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுகில், அதைத் தெரிந்த மற்றொருவர் அரு காமையில் இருப்பாராகில், அவர் ஞாபகத்தில் உள்ளது, அறிவாளியிடத்தில் பிரதிபலித்து, அறிவாளி பதில் சொல்லிவிடுவார்.

ஒருவன் ஒன்றைக் கேட்க வேண்டு மென்று வந்து கேட்காமலிருந்தாலும், அது சம்பந்தமான பேச்சுகளை அறிவாளி தாளுகப் பேசுவார்.

இச் சம்பவங்கள் சமயா சந்தர்ப்பங்களில் நடந்தேறும். சாதாரண உலக மக்களிடையே யும் இம்மாதிரி ஏற்படுவதுண்டு. ஆனால் அவர் கள் பெயர் பிரஸ்தாபம் இல்லாததால் வெளிப் படுவதில்லை.

சென்ற காலத்தின் விபரங்களும், உலக தத்துவ விஷயங்களும், வருங்கால நிர்வாக நிலையும், தம் யூகத்தால் சொல்லுவார்கள்; அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு, யூகத் தைப் பொறுத்து எப்போதும் பதில் சொல்லு வார்கள்.

ஒரு அறிவாளியையோ, ஒரு மகானையோ பார்த்தோரும் பாராதவரும் கோரும் கோரிக் கைகள், நிறைவேறுவதற்கும், நோய் பிணி தீருவதற்கும், அவர்கள் மேலுள்ள விசு வாசமே காரணம். இவைகளை மேலாகக் கருதும் அறிவாளியோ அதற்காகப் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை கொடுக்கும் உலகத்தார்களோ, அறிவினுடைய, ஆராய்ச்சி குறைந்தவர்களாகவே இருப்பார்கள்.

தனக்குத் தான் விஷமுண்டு பார்ப்பதும், கொடிய பிராணிகளிடத்தில் நெருங்கிச் சோதிப்பதும், உலகத்தார் அவர்களை அம்மாதிரி பரீக்ஷிப்பதும் மூடத்தனமாகும்.

வாதி, பிரதிவாதி சாக்ஷி, வக்கீல், ஜட்ஜ் இவர்கள், ஒருவருக்கொருவர் தெரியாமல் ஒரே குருமேல் விசுவாசமுள்ளவர்கள். தோல்வியும், ஜெயமும் யாரைச் சேர்ந்தது ?

## 37. அசரீரி

ஒன்றை நாடிச் செல்லும் போதும், ஒன்றை ஆராய்ந்துகொண் டிருக்கும்போதும், திடமான வார்த்தைகள் பேசிக்கொண் டிருக்கும் போதும், வெளியில் உள்ள மற்றவர்கள் அவர்களுக்கு வேண்டியதைப் பேசிக்கொள்வதில் அச்சொற்களில் சில நமக்குப் பொருத்தமானவையாகவே இருக்கும். இவை சமய சந்தர்ப்பங்களில் வார்த்தைகள் பொருத்தமாகிக்கொண்டதே யொழிய வேறொன்றில்லை.

ஒருவருமில்லாத இடத்தில் தன்னுடைய ஞாபகமே ஒரு சில சமயங்களில் பிரதிபலித்து சொற்கள் கேட்பதுண்டு. இவைகளுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் அசரீரி. இதையும் நம்பி எதையும் செய்துவிடக்கூடாது.

## 38. ஆராய்ச்சிக்குக் கிடைக்கும் சேதியும், வேதவாக்கும்

முன் உள்ள அனுபவங்களும் சொற்களும் அணுக்களிற் பதிந்து என்றைக்கும் எங்கும் வியாபித்திருக்கின்றன.

முன்னுள்ளோர்களின் அனுபவங்களும் சொற்களும் அணுக்களில் பதிந்திருப்பதால் யாரொருவர் எந்த தத்துவத்தை ஆராய்கின்றனரோ அந்தந்த தத்துவம் அவ்வணுக்களின் தொடர்பால் முற்கால அனுபவ அளவு அறியவும், அதற்குமேல் தற்காலத்திற்கு வேண்டியதைத் தன் சுய அறிவால் ஆராய்ந்து செயலுக்குக் கொண்டு வருவதற்கும், மேலறிவு புகட்டுவதற்குரிய நிலையையும், வருங்காலத்திற்கு வேண்டிய நிர்வாகச் சட்டதிட்டங்களை வகுப்பதற்கும் ஏதுவாகிறது.

அவ்வணுக்களின் அத்தகைய காரணங்களினல் சில சிறு குழந்தைகளிடமும், ஆராய்ச்சியில்லா சில யதார்த்த யோகிகளிடமும், ஞான விருப்பத்தால் புத்தி சுவாதீன மற்ற சிலரிடமும், நம்பிக்கை விசுவாசமுள்ள சில பக்தர்களிடமும், சில புலவர்களிடமும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்கால விஷயங்களும் தற்காலத்தில் வெளியில் நடக்கும் சில முக்கிய விஷயங்களும்-கவிகளாகவும், சொற்களாகவும், மக்கள் வியந்து கேட்கக் கூடியதாகவும் வருவதுண்டு. இவைகள் தத்துவ தோரணையாகவும், ஒரு விஷயத் தொடர்புள்ள தாகவும், ஆராய்ச்சிக்குப் பொருத்த முள்ளதாகவும் இருக்காது. இவர்களை ஞானிகளாகவும், இவர்கள் சொற்களை வேத வாக்காகவும் கருதுவது கூடாது.

## 39. பிரம்மச்சாரி

மனிதனுகப் பிறப்பது தனி ஓர் ஏக்கத்திற்காக வேண்டியல்ல. சரீர உணர்ச்சியால் அறிவு இன்பமடைய வேண்டியதற்கும் அறிவின் ஆராய்ச்சியால் அறிந்து சுகிக்க வேண்டியதற்கும், தன் சுயநிலை, சுகம், அறிந்து முடித்துக்கொள்வதற்கு மனித சரீரம்.

எவன் தன் இன்பத்தில் எல்லாம் அறிந்தவனே அவனே பிரம்மச்சாரி. சிற்றின்பம் மட்டும் இல்லாதவன் பிரம்மச்சாரியாக மாட்டான். பின் சரீர அனுபவத்தில் இது ஒரு முக்கியம்.

உதாரணம்:—கனவில் கண்டது விழித்துப் பார்த்தால் ஒன்றும் இருப்பதில்லை. ஆனல் ஒரு பெண்ணை சம்போகம் செய்யக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு காண்பவன் இந்திரியம் ஸ்கலிதமாகி யிருக்கும். இது சம்பந்தமாக கனவுகள் தோன்ருத பிரம்மச்சாரியாய் இருப்பினும் வைராக்ய பக்தனே ஆவான். முக்திக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமே இல்லை.

## 40. தைரியம்

எந்த நோயாளிகளிடத்திலும் எவரும் சந்தோஷமாய் தைரிய சொற்களே பேச வேண்டும். அதுவால் அவன் இரத்தம் சுத்த மாவதுடன், நல்ல அணுக்கள் சரீரத்தில் பிர வேசித்து சுகமடைவர்.

இப்படி இல்லாவிட்டாலும் சந்தோஷத் துடன் சாரத்தை விட்டு விலகி ஆத்மா சூக்கும லோகத்தில் சுகமான மறதியிலிருந்து பின் உலகில் நல்லவராய் பிறப்பார்.

உயர்வான ராகச் சுவைகளிலும், வாச னைத் திரவியங்களாலும், உற்சாக வெளிச்சத் தோற்றங்களாலும், ஊக்கமுள்ள திடச் சொற்களாலும், உருக்கமான தன் மனேமய தைரியத்தினுலும், அநேக வியாதிகள் போவ துடன் மேலான அறிவு அபிவிருத்தியும் உண் டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. குரு சிஷ்யர் அன்பின் தொடர்பு

குரு மேல் விசுவாசமுடைய உண்மை சிஷ்யர்களுக்குச் சரீரத்தில் நோவு ஏற்பட்டால் அவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், அந்த நோவு குருவுக்கு பாவனையாய் அதே இடத்தில் நோகும்.

பெரும் வருத்தத்தில் இருப்பார்களானல் குருவின் இருதயம் சூடாக இருக்கும். குருவினிடம் அடிக்கடி சிஷ்யர்கள் வந்து போவதாலும், அவர்களின் கடிதங்களாலும், வெகு கால அனுபவத்தாலும் இந்த ரகசியம் கண்டு பிடிக்கப்பட்டது.

ஒருவர்மேல் அதிக அன்பிருந்தால் அவரின் பார்வை, சொல் நடை தோற்றம் அன்பு பாராட்டுவோரின் சரீரத்தில் சிறு நிமிஷம் தோன்றி மறையும்.

நோவு குருவை பாதிக்காது. அன்பான சிநேகிதன் தாய் தந்தை இவர்களுக்கும் இத் தொடர்பு இருக்கும்.

## 42. கனவு

கனவுக்குக் காரணம் தன் ஞாபகத்திலுள்ளதும், பிறரை நீங்கள் பாராது அவர்கள் உங்களைப் பார்த்து விரும்பிய விருப்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும், பனிக்காற்று நாசிக்கு நேர் வீசுவதாலும் நடை பாதைகளில் படுப்பதாலும், புளிப்பான ஆகாரத்தாலும், இரத்த ஓட்டம் தடைப்படுவதாலும், இரத்தக் குறைவாலும், பலவித கனவுகள் தோன்றுகின்றன.

பனிக்காற்றுக்கு நேர் நாசியை வைத்து வலது புறம் சாய்ந்து படுத்திருந்தால் வேடிக்கையான பயங்கரக் கனவுகளும் இடதுபுறம் சாய்ந்து படுத்திருந்தால் காமக் கனவுகளும், மல்லாந்து படுத்திருந்தால் எதிர் காலத்தில் நடக்கப்போவதும் கனவில் தோன்றும். இதற்குச் சான்று:—

நான் கனவில் கண்ட பிரகாரமே எட்டரை வருஷம் சென்று உபதேசம் பெற்றேன்.

ஒருவர் படுக்கப் போகுமுன் 'கனவே காண்பதில்லை என்ற திட சித்தத்தோடு ஒரு மாதம் பழகுவாரானல் கனவு தோன்றுவதில்லை.

கனவில் தன் அறிவின் நிறை குறைவுகள் பிடிபடும்.

## 43. கவிகள்

காம விளைவு முதுகால்
காமத்தின் எண்ணம் கண்ணால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காம அடக்கம் நெற்றியில்
காம முடிவு உச்சியில்.

வீடு கட்டி வாசல் அடைத்து வைத்தது போன்றே குருவை அடையா உடம்பு.

மதுவெறி, மதவெறி, மண்வெறி, தனவெறி
புகழ்வெறி, காமவெறி, இவ்வெறியெல்லாம்
தன்னிலை அறிவு அறிய விடா வெறி
யென்றுணர்ந்து தேருவீர் உலகீர்.

நினைப்பு இல்லையேல் ஒன்றும் இல்லையா ?
ஒன்றும் இல்லை. ஒன்றுமே இல்லையா ?
நினைப்பு நினைக்க எல்லாம் ஏற்பட்டது.

நினையாது இருந்தால் என்ன? சொல்லே இல்லை. சுகம் என்ன? சொல்லில்லா சுகத்தில் இருந்தால் சுகத்தோடு இருந்தவன் யார்?

கடலினுள் தத்தளிக்கும் மக்களே! மேல் நோக்கி அறிவால் நீந்துங்கள்! க்ஷணத்தில் வெளியைக் கண்டு; கரை யடைந்து; சுகங் கொண்டு; நம் சுயம்பர வெளியும் அடைவீர்.

துரிதத்துக்கேது துன்பம்
அன்புக்கேது அவமரியாதை
அறிவுக்கேது குற்றம்
அக்கினிக்கேது குளிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதத்துக்கேது தனியிடம்
ஆதிக்கேது அழிவு
இருளுக்கேது எதுவும்
அறிவறிந்தோர்க்கு ஏது இணை.

ஓ மதபோதகர்களே!
மக்களை மதுகொடுத்தாவது
மயக்குங்கள் மதபோதனையால்
மயக்காதீர்கள்.

சாக்குப் போக்குச் சொல்லும் முகத்தைப் பாராதிரு.

பறக்கும் பறவையைக் கூண்டில் அடைத்தது போன்றது மதபோதனை.

ஆயிர வருஷத்து வணக்கத்தைவிட அரை நிமிஷ ஆராய்ச்சியே மேல்.

உன்னில் தோன்றும் ஞாபகங்களை நீயே உணர்ந்தால் ஆயிரம் குருவின் பலன் அடைவாய்.

அறிவை யறிந்தோர் அன்பை மறவார்
பொருளை யறிந்தோர் புகழை விரும்பார்
கருவை யறிந்தோர் கடவுளை நாடார்
குருவை யடைந்தறிந்தோர்
குறையில்லாதார் பிறவியில்லாதார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழினத்தில் பிறந்து மேலினத்திற்கு வந்து தன்னினத்தைத் தாழ்த்துபவனும், மேலினத்தில் பிறந்து தன்னினத்தைப் பெரிதாகப் போற்றுபவனும் அறிவாளியாகான்.

சொல் படிப்பு மூச்சால் ஞானம் தேடும் உலகீர்—அது நினைவால், கருவால், குருவால், கம்ப உள் வழியால் அம்பலத்தினுள், அறிவின் அனுபவ இன்பசுகமே பேரானந்த ஞான முடிவு.

ஓ! படி ஏறுகின்றவனே! முன்னும் பின்னும் பார்த்து ஏறு. அபாயமே இல்லை.

மக்கள் அறிவுடையராகக் கருதும் அறிவாளிகளும் தனவந்தர்களும் செய்யும் சிறு வணக்கங்களால் ஆயிரமாயிர மக்கள் அறிவு பாழாகிறது.

ஊற்றினின்று பொங்கிவரும் தண்ணீரை உலகங்களெல்லாம் இறைத்தாலும் அது எவ்வாறு கொஞ்சமும் வற்றாது தெளிந்து, நிறைந்து நிற்கின்றதோ அதே போன்று அனுபவ அறிவுடையோரின் தீட்சையும், சொல்லும் விளங்கி நிற்கும்.

ஒரு அணுவினால் எல்லாம் சிருஷ்டி
O ஒரு துளியினால் உடம்பு சிருஷ்டி
.— ஒரு புள்ளியினால் எழுத்து (வேதம்)
சிருஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அநுபோகம் முந்தியது;
வேதம் பிந்தியது."

அழகுள்ள வாலிபப் பெண்ணின் பேரில் ஆணவமில்லா பேடி இச்சித்து பயன் ஒன்றில்லாதது போன்றதே அறிவாராய்ச்சியில்லா ஞானம் தேடுவோரின் கதி.

அவனவன் இயல்புக்குள்ள தன்மைக்குத் தக்கவாறே நினைத்தது முடியும்.

தாசி வீட்டில் பேசும் கிளிக்கு உள்ள மரியாதைக்கும் தாழ்ந்ததே ஆராய்ச்சி இல்லா படிப்பாளிக்குள்ள மரியாதை.

ஊக்கமும் நீதியும்
ஒன்றுபட்ட ஒற்றுமையில்
ஊழல் ஒழிந்து உண்மை
பிரகாசிக்கும்.
அற்பத்திற்கு ஆசை கொள்ளாது
அலட்சியம் கொள்

அநீதி ஒழியும்—நீதி பிரகாசிக்கும்.

உலகீர்! யதார்த்தம் உலகில் பரவ வேண்டியதற்கு, தலைமையாய் உள்ள பெரியோனுக்கும் அவரோடிருக்கும் முதன்மையான முக்கியஸ்தர்களுக்கும் தாம் சரியாக நடந்துகொள்ளுகிறோமா என்ற உணர்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடன் பெருந்தன்மையும் முக்கிய அவசியம். பின் ஜன ஆதரவும், இட ஆதரவும், அனுபவ ஆராய்ச்சி அறிவு ஆதரவும், இவைகள் கூடிய போதும், அரசாங்க நிர்வாக ஆதரவு இல்லாதிருந்தால், பொருள் ஆதரவு இருந் தாலே எதார்த்தம் எல்லோரிடத்திலும் நிரவி நிலைக்க ஏதுவாகிறது.

விசுவாசமும், துணிவும் அனுபோகமும் ஆராய்ச்சி அறிவும் சேர்ந்துள்ளோ ரிடத் தில் நீதி பிரகாசிக்கிறது.

தன்மை உயர்வு இல்லாரிடத்தில்
  பண மிருப்பதும்,
அறிவுணர்தல் இல்லாரிடத்தில்
  படிப்பிருப்பதும்,
ஏழைகளின் துயரம் அறியாரிடத்தில்
  அரசியல் நிர்வாக மிருப்பதும்,
ஆராய்ச்சி ஒழுக்க மில்லாரிடத்தில்
  ஞானம் பேசுவதும்,

எதுபோன் றென்றால் மனித சஞ்சார மில்லாவிடத்தில் ருசி உள்ள வஸ்து விளைந்தும் பயன்படாதது போன்றே.

## 44. ஊமை

ஊமைகளுக்கு பித்தப் பையும் சுவ ரொட்டியும், ஈரலின் ஜவ்வால் பிணைக்கப்பட் டிருக்கின்றன. (X ray) எக்ஸ்ரேயின் மூலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து அந்த ஜவ்வை விலக்கி விட்டால் ஊமைகள் பேசுவார்கள்.

## 45. குருடு

கண் பாப்பா உள்ள பிறவிக் குருடருக்கு இரு கண்களுக்கு நேர் பின்பக்கம் பிடரியில் உள்ள நரம்பில் ஒரு கிருமி, பாப்பாவுக்கு வரும் ஒளியைத் தடுத்துக்கொண் டிருக்கிறது. இதை டாக்டர்கள் மின்சார சிகிச்சையால் அகற்றிவிடலாம்.

## 46. மரணித்தல்

முற்கால மக்கள் அதிக வயதுவரை இருந்து நாளடைவில் சரீரம் மெலிவடைந்து குன்ற, பின் ஸ்மரணையற்று ஒன்றுக்கும் உதவாததாக இருந்து மிருகம் முதலியவற்றிற்கு ஆகாரமாகிவந்தார்கள். அக்காலங்களில் மரணிப்பது கிடையாது.

பிற்காலத்தில் அறிவின் தெளிவு சிறிது ஏற்பட்டு இவர்களைப் பானையில் வைத்துப் புதைத்துவந்தார்கள். அக்காலத்தில் உண்டு, உறங்கி போகிக்கும் வசதிகளுக்கு எவ்வித தடையுமில்லாமலும் பயம், துவேஷம், கபடம், குரோதம், தந்திர யுக்திகளாகிய பேதங்களுமில்லாதிருந்தன. ஆகாரபோக வசதிகளுக்குத் தடை ஏற்பட்ட காலத்தில் அவைகளைப் பூர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்க முயற்சிக்கும் அறிவில், துவேஷம், பயம் முதலியவும், சரீர ரோகமும், பின் மரணமும் ஏற்பட்டன..

கொடிய வியாதியஸ்தர்களை வீண் இரக்கத்தால் அரசாங்கம் வைத்திருப்பதால் ஆரோக்யமாயுள்ள ஜனங்களும் பல வியாதிகளுக்கு ஆளாகிறார்கள்.

தேக அபிமானத்திற்காகவும் ஜன சமுக ஒற்றுமைக்காகவும் ஏற்படுத்தியதே பிரேத சடங்கு விதிகள். பிரேதத்தை ஒரு மணிநேரத்துக்குமேல் வைத்திருக்கவே கூடாது. சரீரத்தில் கை கால், வாய் இரணமுள்ளவர்களும் வியாதியஸ்தர்களும் பிரேதத்தின் அருகாமையில் செல்லவும், அதைத் தொடவும்கூடாது. பிரேதத்தை ஆழக்குழியில் புதைப்பதும், கடல்நீரில் மூழ்குவிப்பதும், கழுகுகளுக்குக் கொடுப்பதும், நெருப்பால் சுட்டு எரிப்பதும் ஒன்றே.

ஓ வைத்தியர்களே! மக்களுக்கு தைரியத்தை ஊட்டி வியாதியைப் போக்குங்கள். சோர்வை ஊட்டி வியாதியை உண்டாக்காதீர்கள்.

## 47. மரணத்தைத் தடுக்கும் முறைகள

1. மனிதன் மரணிப்பதற்கு 2 1/2 மணிக்கு முன் உயிருள்ள பெரிய வௌவால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தத்தை வைத்திய முறைப்படி நரம்பில் செலுத்தி அவனைக் காப்பாற்றலாம்.

2. வாலிபனாகவிருந்தால் மரணத்திற்கு 5 நிமிஷங்களுக்குமுன் விந்து ஸ்கலிதமாகாமலிருக்க லிங்கத்தை இரப்பரினால் இறுகக் கட்டிவைக்க உடல் சூடு ஏறி உயிர் மீளும்.

1. ஒருவனை உயிர்போக 5 நிமிஷங்களுக்கு முன் காற்று போகாதபடி கெட்டி உலோகத்தால் செய்த பெட்டியில் வைத்து அடைத்து, சிறு உள்துவாரமுள்ள ஊசி கொண்டு, அவ்வூசிக்கும் பெட்டிக்கும் காற்று வெளியேறாத குழாய் பொருத்தி உயிர்விட்டு ஒரு நிமிஷத்திற்குமேல் ஆகாத ஒரு சரீரத்தின் குறுக்கெலும்பு துவாரத்தில் மேல்கண்ட ஊசியை செலுத்திவைக்க பெட்டியிலுள்ளவன் உயிர் ஊசி பொருத்தியிருக்கும் சரீரத்துக்கு மாறி ஜீவித்திருப்பான். சகல வசதிகளுமுடைய பெரிய ஆஸ்பத்திரிகளில் மேல் சொன்ன முறைகளைக் கையாண்டால், ஆரம்பத்தில் சுமார் 100-க்கு 10 பேர்களைக் காப்பாற்றலாம்.

உலக இரகசிய மறியாத காரணத்தால், தற்காலத்தில் வைத்திய சித்த இரசாயன ஆராய்ச்சிகளின் மூலம் மக்கள் மரணிக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் எப்போதும் உலக போகங்களை அனுபவித்துக்கொண்டு இருக்க ஆசைப்படுகிறார்கள். சாதாரணமாக ஒருவனுக்கு 47 வயது வரை ஆகார போக வசதிகளுக்கும், துவித பான்மையில்லாது தன்னிலையின் விளக்கமும் குறைவில்லா திருக்குமானல் அவனறிவில் விரோத குணங்களோ சரீர ரோகமோ ஏற்படாது. அப்போது மக்கள் 40 வயதுக்குமேல் உலகத்தில் எவ்வித போகங்களில் நிமித்தமும் இருக்க எக்காரணத்தைக் கொண்டும் விரும்பவே மாட்டார்கள்.

ஓ ஆராய்ச்சியாளர்களே! மக்கள் வயது விருத்திக்கு உங்கள் ஆராய்ச்சியை உபயோகிப்பதைவிட இருக்கும் மக்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளைப் பெருக்க ஆராய்ச்சியை உபயோகியுங்கள்.

## 48. தூரச் செய்தி அறிதல்

தான் ஒரு இடத்தில் உட்கார்ந்தாவது, படுத்தாவது இரு காதுகளை விரல்களால் அடைத்து வெகு தூரத்திலிருக்கும், தனக்கு தெரிந்த ஒருவரைக் கண்ணை மூடி பத்து நிமிஷம் நினைத்தீர்களானல், அவர் எந்த நிலையில் இருக்கிறார் என்பது சிறிது சிறிதாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக தூரத்திலிருப்பவர்களாயிருந்தால் மிகத் தெளிவாக அறியலாம். அவர் போட்டோ இருந்து அதைக் கூர்ந்து பார்த்து நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அது அச் சமயமே அவருடைய ஞாபகத்தில் ஏற்படும்.

## 49. நரை

நரை: உடம்பின் சூடாலும், அநேக ஆராய்ச்சி சூடாலும் நரை ஏற்படும். கொழுப் பின் அம்சம் ரோமம். சூடு இல்லா உடம்பில் நரையும் ஏற்படாது; பல்லும் விழாது.

## 50. சோதிடம்

தன் முயற்சி இல்லாதவர்களுக்குத்தான் சாஸ்திரமும், சோதிடமும். அறிவாளி சோதி டம் பார்ப்பது எதைப் போன்றது என்றால், நல்ல நீர், உரம் உள்ள நிலத்தில் கல்லையும், முள்ளையும் விதைத்தது போன்றதாகும்.

ஓ! சோதிடர்களே, மக்கள் இருதயத்தில் உற்சாகத்தையே விளைவியுங்கள். நீங்கள் நல்லவர்கள்.

மெய்யுணர்வாளர்களே! உங்கள் குழந் தைகளுக்கு நல்ல பெயர் வையுங்கள். ஜாதகம் எழுதுவதோ சோதிடம் பார்ப்பதோ அறவே கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லி, சூனியம், வஞ்சனை செய்பவர்களே! நீங்கள் உங்கள் சரீரத்தில் கத்தியால் குத்திப் பாருங்கள். வலி ஏற்படுமாகில் இனி எக்காலத்திலும் பிறருக்குத் தீமை செய்யத் துணியாதீர்கள்.

## 51. என் ஜீவிய சரித்திரம்

எளிமையிற் பிறந்தேன்.

எவருக்கும் பணியச் சம்மதியேன்.

தொழில் உழைப்பில்லா திருக்கவே மாட்டேன்.

சரீர சுகம் விரும்பேன்.

என்னில் தோன்றும் எண்ணங்களை உணர்ந்து என்னை நான் உணர்த்துவேன்.

யாருக்கும் அஞ்சேன், எதையும் செய்து முடிக்கலாம் என்று துணிவேன்.

எந்த இரகசியத்தையும் கண்டு பிடியாதிருக்க மாட்டேன் என்று உறுதி கொள்வேன்.

உடல் கூசி, உரோமம் சிலிர்த்து, கண் கலங்கி, கண்ணீர் வடித்தேன்.

பிறர் காணாது தனித்திருந்து ஜெபித்தேன், தொழுதேன், யோகங்கள் செய்தேன், உண்மையை நாடிப் புலம்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறிவையே கோரினேன்.

குருவால் உணர்வடைந்தேன்.

அறிவில் தெளிந்தேன்.

என்னை நான் அறிந்து எல்லா விபரத்தையும் கண்ட பயனே கற்பனைகளையெல்லாம் ஒழித்து இயற்கைக்கு விரோதமில்லாது உலகத்தோருக்கு தன்னையறிவித்து உணர்வு உண்டாக்கி உலகெங்கும் நிரவ, உலக சமாதான ஆலயம் அமைத்தேன்.

## 52. ஆதியின் பரிணமிப்பு

ஒன்றில்லா திருந்தது ஒன்று, ஒன்றே இருந்தது ஒரு அணு, அணுவா யிருந்தது நான், நானக இருப்பது நினைப்பு.

நானென்ற வேகம் நாதம், நாத மயமா யிருப்பது நினைப்பு, நானென்ற உணர்ச்சி நெருப்பு, நெருப்பாயிருப்பது நினைப்பு.

நெருப்பின் பொறிகள் அணுக்கள், அணுவாய் நிறைந்தது நினைப்பு.

அணுக்களின் சேர்க்கையே உலகம், உலகங்களாய் இருப்பது நினைப்பு.

நானென்றதன் அழகு அறிவு, அறிவாக இருப்பது நினைப்பு.

நானுக்கு உரு கரு, கருவாய் இருப்பது நினைப்பு.

கருவுக்கு உரு உடல், உடலாய் இருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பு.

உடலில் இருப்பது உயிர், உயிராய் இருப்பது நினைப்பு.

உடலில் இருப்பது அறிவு, அறிவில் இன்பிப்பது நினைப்பு.

அறிவு அடைவது உணர்வு, உணர்வாய் இருப்பது நான்.

## 53 கல்வி

**மொழி தோன்றுதல்:**-எண்ணிய எண்ணங்களையும் கண்களால் பார்த்தவைகளையும் காதுகளால் கேட்டவைகளையும் மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டுவர வேண்டியதற்காக சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப சைகை, குறிகள், புள்ளிகளாகவும், நெட்டு நெளிவு கோணல் சுழித்த கோடுகளாகவும் ஏற்படுத்தப்பட்டன.

பின்னால் அந்தந்த தேசங்களின் சீதோஷ்ணத்திற்கேற்ப உச்சரிக்கும் வார்த்தைகளுக்கு இசைவாகவும், அபிப்பிராயங்களுக்குத் தக்கவாறும் அக்கோடுகளுக்குப் பேர் வைத்து எழுத்தாகியது. (உ-ம்.) படியாத குழந்தைக்கு எழுத்தைக் காண்பித்தால் அது யதார்த்தமாக கோடுகள் என்றே சொல்லும். அநேக கால சிரத்தையோடு அனுபவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாகக் கண்டுபிடித்த விவரங்களைப் பின் வரும் மக்கள் எளிதில் அறிந்து, ஒவ்வொரு துறையிலும் சரிவர நடந்துகொள்ளவேண்டிய தற்கு படிப்பு அவசியம்.

எந்நாட்டு பாஷையும் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் அங்குள்ள அபிப்பிரா யத்தை தெரிந்துகொள்ளவும் தன் அபிப் பிராயத்தை அந்தந்த நாட்டினர்க்குத் தெரி யப்படுத்தவும் ஏதுவாகிறது.

எந்நாட்டு பாஷையாயிருப்பினும் சரி தன் அனுபோகத்தில் புரியக் கூடிய பாஷையா யிருப்பின் அது தன் சுய பாஷையே யாகும்.

நடைமுறையிலிருக்கும் பாஷையை நீக்கி விட்டு ஒவ்வொரு தேச மாகாணங்களில் அவ் வக்காலங்களில் வரும் நிர்வாகஸ்தர்கள் அவர வர் தம் தேச பாஷை அபிமானத்தால் மறு பாஷையைக் கொண்டு வருவது விளைந்திருக் கும் வெள்ளாமையை அனுபவிக்காது அழித்து விட்டு மறுவெள்ளாமையை விளைவிக் கும் சிரமத்தை போன்று, மக்களுக்கு என் றைக்கும் சிரமத்தையே விளைவிப்பதாகும்.

தற்போது உலகத்திலுள்ள எல்லாதேசங் களிலும் பெரும்பாலும் நிர்வாக நடைமுறை யில் அனுபவத்தில் இருக்கும் எந்நாட்டு பாஷையாயிருப்பினும் சரி, அப்பாஷையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் எழுதப் படிக்க. பேசக் கற்றுக் கொள்வது வீண் கால சிரமத்தைத் தடுத்து நன்மை பயப்பதாகும்.

சுமார் 60 வருஷகால உத்தியோகத்திற் காகவும் உழைப்பில்லாது இருந்த இடத்தில் சம்பாதிப்பதற்காகவும், மற்றவர்களைத் தன் அதிகாரத்திற் குட்படுத்துவதற்காகவும், புக ழுக்காகவும், படிப்பே பிரதானமாகக் கருதி படிப்பு அதிகமாகி வருகிறது.

## விவேகமில்லாக் கல்வியால் விளையும் தீங்குகள்

ஏழைகள் அநேக கஷ்டங்களின் வாயி லாக 100-க்கு இரண்டு பேர்கள் பணக்காரர் கள் ஆவது போன்று, தனி ஒரு எழுத் துக்கோ, ஜெப, மந்திரயந்திர அக்ஷரங் களுக்கோ மரியாதை கொடுப்பதில் நூற்றுக்கு இரண்டு பேர்களுக்கு அறிவு அபிவிர்த்தி ஆயினும் 98 பேருக்கு அறிவு அடிமைப்படு கிறது. ஆகையால் ஜெப, மந்திர, யந்திர, அக்ஷரங்களுக்கு யாதொரு மரியாதையும் கொடுக்காதீர்கள்.

தனக்குப் புரியாத பாஷையைப் படிப்ப தாலும் மனப்பாராயணம் செய்வதாலும் அதைப் பெரும் மரியாதையாகக்கருதி பேசுவ தாலும் தன் சுய ஆராய்ச்சி குறைபடுவதோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற மக்களையும் வீண் காலப் போக்கிற்கு ஆளாக்குகின்றது.

படிப்பின் காரணத்தால் சரீரம் அழகாக அமைவதோடு யோசனை, யூக யுக்தி அறிவு பெருகுகிறது. அதில் அந்தந்த தேசங்களில் உள்ள சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு வயது வந்த குழந்தைகளை அந்தந்த பருவத்தில் விவாகம் செய்து முடிக்காமல் வைத்திருப்பதிலும், பெண் குழந்தைகளை பருவ வயதுக்கு மேல் படிக்கவைப்பதிலும் அக்குழந்தைகள் தன் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி தன் இச்சா சக்தியை அடக்கி பொறுமை கொள்வதிலும் ஏற்படும் கனலால் அநேக கொடிய வியாதிகள் உண்டாகின்றன.

தன் அறிவுக்கு பொருத்தமாயுள்ள விவேகமாய் இருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டால் தன் சம்பிரதாயத்தை விட வேண்டுமே என்ற எண்ணத்தால் சமய அறிவாளிகள் இடையில் ஒருவருக்கொருவர் சமாதானமில்லா அறிவின் குழப்பத்தால் ஏற்படும் பாதகச் செயல்களால் விவசாயிகளும், தொழிலாளிகளுமே சேதப்படுகிறார்கள்.

ஓ, கல்வி ஆராய்ச்சி உத்தியோக அறிவாளிகளே! உங்களுக்கு வேண்டிய ஆகாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு சத்தும் ருசியுமாயுள்ள விளை பொருள்கள் அவசியம். விவசாயிகள் உங்கள் அந்தஸ்தையே பெரியதாகக் கருதி படிக்க முற்படுவதால் வேண்டிய ஆகாரப் பொருள்கள் விளைவிக்கவேண்டிய விவசாயிகள் இவ்வுலகில் குறைந்துகொண்டே வருகிறார்கள்.

மூளை அறிவு நன்றாயிருந்தாலும், தலைக்குக் கீழுள்ள அவயவங்கள் நன்றாயிருந்தாலேயே பயன்படுவது போன்று, சரீர பிரயாசையுள்ள தொழிலும், உழவும், விளைவும் இருந்தாலே அறிவாக்கினைப் பிறப்பிக்கும் அரசாங்கம் நிலைக்கும்.

அரசர்களும் விவசாயிகளும் சம அந்தஸ்தில் இருக்க முற்படுங்கள். விவசாயிகள் தங்கள் விவசாயத்தை விட முற்படவே மாட்டார்கள்.

அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய உணவு உடை இடவசதி குறையில்லாது கவனிக்க வேண்டியது முக்கிய முதல் கடமை.

ஆலய சமாதிகள் பெருகி ஆராய்ச்சி குன்றுவதுபோல், படிப்புக்கு வேண்டிய பாடசாலைகள் பெருகி விவசாயத்தைக் குறைத்திடாதீர்கள்.

## 54. பத்திரிகை ஆசிரியர்கள்

**ஓ, பத்திரிகை ஆசிரியர்களே!** உலகிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மக்களையும் சுகாதார சமத்துவ சீர் திருத்த அறிவுக்குள்ளாக்குவதோடு, தொலை தூரத்தில் ஏற்படும் அறிவு பெருக்கமாயுள்ள அபூர்வ செய்திகளை எல்லோருக்கும் விரை வில் அறிவிப்பதிலும் யாருக்கும் துவேஷம், துன்பம் ஏற்படாதபடி பெரும் தீர்க்கதரிசி களின் தன்மையைக் காட்டிலும் மிக நுட்ப யோசனைகளோடு சமய சந்தர்ப்பங்களுக் கேற்ப பொது நிலையாய் எழுதி பிரசுரம் செய்ய முற்படுங்கள்.

உங்களுடைய நன்னோக்கத்தால்
உலகில் கலவரமே ஏற்படாது.

## 55. நூல்கள்

ஆராய்ச்சி அனுபவ செயலில் உள்ள நூல்களால் மற்றவர்கள் அதன்படி அனுப விக்கவும், கடந்த அனுபவத்திற்கும் மேல் சீர் திருத்தங்களை சுலபமாய் கண்டு பிடிக்கவும் பயன் படும்.

முன் கற்பனை நூல்களை உதாரணம்காட்டி பெருகும் கற்பனை நூல்களால் ஆராய்ச்சி இல்லாத மக்களுக்கு வியப்போடு நம்ப உதவி யாய் இருப்பினும் செயலில் பயன்படாது.

## 56. அறிவின் ஆற்றல்

உழைப்பில்லா சரீரமும்
ஆராய்ச்சியில்லா அறிவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வில்லா உண்மையும்
குற்றமில்லா தண்டனைக்குள்ளோர்
போன்றே.

அறிவின் வளர்ச்சிக்குத் தொழில் அவசியம்.

மனிதன் உண்டு, உறங்கி, போகித்து அடையும் சுகத்தோடு முடிவதல்ல: இது காட்டு மனிதனின் நிலையாகும்.

அறிவின் நிலைக்கேற்ப, தொழிலின் ஏற்றத் தாழ்வால் அறிவு அபிவிருத்தியடைகிறது.

மனிதனுக்கு வேண்டியது அறிவு. அவ்வறிவால் தன்னைத் தெரிந்து கொண்டால் மனிதனுக வந்த பலன் முடிவடைகிறது.

உலகத்தில் பிறக்கும் மக்களின் ஏக்கம், ஆகார வசதி, போகவசதி, அறிவின் உயர்வின் வசதி, இம் மூன்று வசதிகளின் சுகமும் நன்ருய் அனுபவித்தபின் அவ்வேக்கம் முடிவடைகிறது. இதற்குப் பெயர் முக்தி.

பிறக்கும் அறிவுடைய மக்களுக்கு இம் மூன்று சுகமும் சேர்ந்திருந்தாலே அதே பிறவியில் அவர்கள் முக்தி அடையலாம்.

முன் ஒரு சுகம் இல்லாது இருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரம் எடுத்த பின் அனுபவித்த அனுபவம் போதாததாலும், எப்படி அனுபவித்து முடிப்பதென்று தெரியாததாலும், எவ்வளவு வயதுடையோராய் இருப்பினும். வருந்தும் பெரும் நோய் இருப்பினும், உயிர் உடம்பைவிட சம்மதிப்பதில்லை. எவ்வளவு வெறியனுயினும் சரி, உணவு உண்ணுதிருப்பதில்லை. பிரம்மச்சாரியாயினும், காமக் கனவில் இந்திரிய ஸ்கலிதம் ஆகாமல் இருப்பதில்லை. பெரும் ராஜபோகத்திலிருந்தாலும் கடைசியாக எல்லாம் விட்டு அறிவைத் தேடமுற்படாதவனு மில்லை.

உணவுப் பொருள் அதிகமாகவும், மக்கள் குறைவாகவும் இருந்த காலத்தில், உண்டு போகித்து சுகமடைந்தும், இன்ன சுகத்திலிருக்கிறோம் என்று தெரியாது இருந்தார்கள்.

ஜனப் பெருக்கத்தின் பின், மக்களில் அறிவு உயர்ந்து வரும்போது, நாணத்தை மறைக்கவும், பருவ வயதில் போகத்தை அறிந்து போகிக்கவும், விவசாயம் செய்யவும், பக்குவமாக வேகவைத்து சுவைத்து உண்ணவும், வீடு கட்டவும், உடை சொல் ஒழுக்க சீர்திருத்தங்களும் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சீர்திருத்தங்களோடு கூடிய அறிவு உயரும்போது ரூபங்களின் பாகுபாடுகளையும் மக்களின் அறிவு ஏற்றத் தாழ்வையும் பார்த்து அதன் காரணத்தை அறிவுடையோர் ஊன்றி சிந்திக்கும்போது அவரின் உருக்கத்தால் அவரின் ரூபமே பலதோற்றங்களாய்த் தோன்றி மறைய, அது ஓர் சக்தியென்று எண்ணி, அதை மற்றவர்களுக்குச் சொல்லவும் அத்தோற்றங்களை சிலைகளாகச் செய்து வணங்கவும் ஏற்பட்டது.

பாடகர்கள் பாடியதை சிற்பிகள் சித்திரித்தார்கள்.

கண்ணுக்கு முன்னல் இருக்கும் தோற்றம் கண் மூடித் திறந்தாலும் அத்தோற்றம் இருக்கவே இருக்கும். உருக்கத்தில் ஏற்படும் அறிவின் மயக்கத்தில் தெரியும் பிரதி · பிம்பம், அறிவு விழித்துப் பார்க்கும்போது, அத்தோற்றம் இருக்காது. ஆராய்ச்சி அறிவிற்கு புலப்படும் தத்துவங்கள், அழிவதுமில்லை. அதுவே சகல உலக சிருஷ்டிக்கும் காரணம்.

அதற்குமேல் அறிவு உயர்ந்தபோது, அறிவிற்கு தீர்க்கமாய் புலப்படும் தத்துவத்தை முடிவாக வைத்து சிலைகளின் வணக்கங்கள் இல்லாது, சீர்திருத்தங்களோடு பரப்பியவர்கள் தீர்க்கதரிசிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூக்குமம், காரணம், அணு, அக்னி நாதம், நான் என்ற தத்துவங்கள் ஒவ்வொன்றையும் வெகு கால அளவில் அறிவாளிகள் கண்டுபிடித்தார்கள். இத்தத்துவங்களில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றியது ஒரு மதம்.

தன் அறிவிற்கு எது பொருத்தமாயுள்ளதோ அதையே திடப்படுத்தி பரப்பியவர்களையும் தீர்க்கதரிசிகள் என்பார்கள்.

## 57. தத்துவங்களைக் கண்டுபிடித்தவர்களே தீர்க்கதரிசிகள் ஆவார்கள்

**சூக்கும தத்துவத்தைக்** கண்டுபிடித்த தீர்க்கதரிசியைப் பின்பற்றிய மதஸ்தர்கள் நாளடைவில் வரங்கோருதலிலும், சிறு வணக்கங்களிலும் ஈடுபடவேண்டியதாயிற்று. அதற்கு மேலுள்ள காரண தத்துவத்தைக் கண்டுபிடித்த தீர்க்கதரிசியைப் பின்பற்றிய மதஸ்தர்கள், அறிவே தெய்வம் என்று சொல்லிக்கொண்டே, அறிவுக்கு முரணானவைகளையெல்லாம் வணங்கவேண்டியதாயிற்று.

காரணம் கடந்த அக்னி தத்துவத்தைக் கண்டுபிடித்த தீர்க்கதரிசியைப் பின்பற்றியவர்கள், அக்னியே தெய்வம் என்று நெருப்பை வளர்த்து, அது அணையாமல் பாதுகாத்து, அதையே வணங்குவதும் இளஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனையும், சுடர் சூரியனையும் வணங்குவதும் வழக்கமாய்க் கொண்டுள்ளார்கள்.

அணு தத்துவத்தைக் கண்டுபிடித்த தீர்க்கதரிசியைப் பின்பற்றிய மதஸ்தர்கள் ஆராய்ச்சியில்லாத தவத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று.

**உதாரணம்**:—அணுக்களையறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள், எதையும் ஆராய்ந்தறியும் வல்லமை இருந்தும், தம்மையறிய முற்படும் வகையில் ஒன்றும் அறியாத பாமர குருவாயிருந்தாலும், அவன் சொல்லுக்கிணங்கி, நீரில் தெரியும் தன் பிரதிபிம்பத்தை நீந்தத் தெரியாதவன் மூழ்கித் தேடுவது போல் தாம் அறிந்த அறிவின் ஆற்றலை இழந்துவிடுகிறார்கள்.

அதையும் கடந்த **நாததத்துவத்தைக்** கண்டுபிடித்த தீர்க்கதரிசியைப் பின்பற்றிய மதஸ்தர்கள், நாத சொரூபமே எங்கும் நிறைந்தது என்றும், அதுவே கடவுள் என்றும், ஜெபம், மணி ஓசை, தன்னுள் நாதம் கிரகித்தல், இவ்வணக்கங்களில் ஈடுபடவேண்டியதாயிற்று.

முடிவாக உள்ள '**நான்**' என்ற தத்துவத்தைக் கண்டுபிடித்த **ஞானி**யைப் பின்பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதஸ்தர்கள், 'நானே பிரம்மம்' என்று சொல்லளவில் மாத்திரம் சொல்லி, அத்தத்துவம், தன் அறிவிற்குப் புலப்படாமையால், அவர்களும் அவசியமற்ற 'துவித' வணக்கங்களில் ஈடுபடவேண்டிய தாயிற்று. ஆராய்ச்சியினல் கண்டுபிடித்த ஒன்றுமில்லா இருட்டை வெட்ட வெளி யென்று சொன்னபோது, அதை அறிவால் சரியாகப் புரிந்துகொள்ளாதவர்கள், அறிவுக்கு விளங்கும் பொருள், செயல், தத்துவம், யாவுமே பொய் என்று சொல்லிவருகிறார்கள்.

ஒரு தீர்க்கதரிசி கண்டுபிடித்த தத்துவத்தின் விளக்கம், அதைப் பின்பற்றிய மதஸ்தர்களிடம் மூன்று பரம்பரைக்கு மேல் இருப்பதில்லை.

அத்தீர்க்கதரிசிகளிடமுள்ள எதார்த்தத் துணிவும், ஒழுக்கமும், ஒற்றுமையும், சுகாதார சீர்திருத்த சட்டங்களையும் பின்பற்றியே அம்மதம் வெகு கால அளவில், அன்பினல் பரவி வருகிறது.

அத்தகைய தீர்க்கதரிசிகளின் கூட்டத்தின் நடை, உடை, ஒழுக்க அன்பின் உயர்வான பிரதம அநுபவஸ்தர்களுக்கும் பிறக்கும் குழந்தைகளின் அறிவின் பாகுபாட்டாலும் பிற்காலங்களுக்கேற்ப, குழந்தைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதளவில் அநுபவஸ்தர்கள் அதைக் கொண்டு வராது சொல், படிப்பு ஒழுக்கங் களோடு நின்றுவிடுவதாலும், அம்மத தத் துவ விளக்கம் அனுபவ அறிவில் எல்லோருக் கும் தெரிவதில்லை. அக்கூட்டத்தில் சேர்ந் தோர்களில் அம்மத, தத்துவ விளக்கம் அனு பவ அறிவில் தெரியாத சில கல்வி யுடையோர் களும், கவிராயர்களும், பிரசாரர்களும், அறி வுக்கு மீறி, மிகைப்படுத்தி எழுதும் நூல்களா லும், பாடும் கவிகளாலும், செய்யும் பிரசாரங் களாலும், சிற்பிகள் சித்திரக்காரர்களின் தொழிலைத் தீர்க்கதரிசிகள், இவர்கள் பிர தமர்களின் காலத்திற்குப் பின் அவர்களின் பெயரை வைத்து, சமாதிகளைக் கட்டி, சித்தி ரித்து, அலங்கரிப்பதிலும், பூசாரி தான் முன் செய்த தொழிலை இம்மதச் சார்பிலே, மாற்றி அமைத்துக்கொள்வதிலும், பக்தர்கள், யோகி கள், தங்களுக்குப் புலப்படும் ப்ரேமையை ஆராய்ச்சியின்றி மிகைப்படுத்தி தெரிவிப்ப தாலும், அரசர்கள் எங்நாடும் பரவுவதற்குச் செய்யும் உதவியாலும், எந்த ரீதியாகப் பரப்ப வேண்டுமென்றில்லாது, மிகைப்படுத்துவதால் அது எங்கும் பரவினும் அம்மதத்திலுள்ள வர்கள் பெரும்பாலருக்கு அதன் அடிப்படைத் தத்துவம் இன்னதென்று தெரிவதேயில்லை.

கூன், குருடு, செவிடு, ஊமைக்குமுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமர்த்திய யூக யுக்தி யோசனைக்கும் கீழே யுள்ளது ஆராய்ச்சியில்லா வணக்கம்.

தாம் எந்த இலட்சியத்தை விரும்பி செய்கிறோம், என்று தெரியாத தவத்தினர்கள், பெரும் யோகம் செய்யும் யோகிகளாக இருந்தாலும், தம் மத பக்தியின் கிரியைகளையும் சிறிய வணக்கங்களையும் விடுவதேயில்லை. பக்தி, யோகம், ஞானம் இன்னதென்று அறியாது இவர்கள் செய்யும் இச் செயல்கள் வளரும் வாலிப அறிவாளிகளுக்கு பெரும் பாதகமாக இருக்கின்றன.

சரீர அசுத்தம் அறியா நிர்வாணிகளையும் பேசாத மௌனிகளையும், அதிக நூல் படித்தவர்களையும், அதிக நூல் எழுதியவர்களையும், கடவுளைக் கற்பித்து வர்ணிப்போடு பாடியவர்களையும், மத யுத்தம் செய்து மடிந்தோர்களையும், அருளைத்தேடி அழுது புலம்பி உருக்கத்தோடு பாடியவர்களையும், அதிக தர்மம் செய்தவர்களையும், அடாத செயல்களும், பலாத்கார காமச் செயல்களும் செய்து, பின் அதை உணர்ந்து வருந்திப் பாடி மாண்டவர்களையும், தான் கொண்ட பிடிவாதச் சம்பிரதாய சாதனையை விடாது சாதித்தோர்களையும், குரு தொண்டு குருபூஜை செய்தவர்களையும், ரோகயில் கட்டியவர்களையும், சம்பிரதாயத்திற்

குள் ஒன்றுக்கொன்று போர் புரிந்து மடிந்தோரையும், ஜெயித்தோரையும், தன் ஊர், குடும்பம், தொழில், சொத்து, ராஜபதவி இவைகளை வெறுத்துவிட்டு ஓடியவர்களையும். வெறுத்து அலக்ஷியமாய் பாடியவர்களையும், அரசியல் வாதியாயிருந்து பின் சந்நியாசம் கொண்டவர்களையும், கொலைகள் செய்து தண்டனைக்குத் தப்பி சந்நியாசம் கொண்டவர்களையும், வறுமையின் காரணத்தாலும் அறிவின் விளக்கமில்லா காரணத்தாலும் இவர்களை ஞானிகளாகக் கொண்டாடுவார்கள் உலகத்தார். உலகில் இருப்பதெல்லாம் அவதார பொருள்களும் அவதார புருஷர்களுமேயாகும். அதில் அறிவுடைய ஒருவன் எடுத்துக் காட்டும் செயலும் சொல்லும் கிரகிக்கக் கூடிய மனிதர்களும் ஒரே சம அந்தஸ்திலுள்ளவர்களே யாவார்கள்.—பெரியோர்களை ஒருவன் நினைக்கும்போது அப்பெரியோருடைய அம்சமுடையவனுகவே இருக்கிறன். ஆகையால் ஒருவர்க்கொருவர் விசுவாசம் அன்பு மரியாதைசெய்வது சமத்துவமில்லையாகும். தனி ஒருவரை அவதார புருஷர் என்று கருதுவது கூடாது.

மறைந்து திரியும் பெரும் துஷ்டனைத் தேடும் அநேக துப்பாளர்களில், ஒருவர், கண்டுபிடித்து, அத்துப்பாளரின் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து, வழக்கு முடிவடைந்து, எல்லோரும் ஆனந்திப்பது போல், தான் கண்டுபிடித்த தத்துவத்தை உலகில் சொல்லத் துணிந்த போது, அதைத் தேடியவர்களும் ஒன்று கூடி அனுபவிக்க ஏதுவாகிறது.

தான் கொண்டுள்ள மதத்தின் தத்துவத்தை விளக்கமறத் தெரிந்தவர்களிலொருவர், அக்காலங்களுக்கேற்ப, மறு ஒழுக்கங்களோடு புதுப்பிப்பவர், அம் மத சமயாச்சாரியாவர். இன்று உள்ள எந்த மதங்களிலும் நானூறு வருஷங்களுக்கிடையில் சமயாச்சாரிகள் இல்லை.

ஞானிகள், தீர்க்கதரிசிகள், சமயாச்சாரிகள், அறிவாளிகளின் சொல்லை, அனேக உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுபவர்கள் வேதாந்திகள்.

பல நூல்கள் படிப்பதைவிட, ஒரு வேதாந்தியின் சொல்லைக் கிரகிப்பது மேல். படித்த படிப்பை அவ் வேதாந்தி உணர்வானல் அறிவாளியாகப் பிரகாசிக்கலாம்.

படித்தும் உணராது போனல், அநேக நூல்களுக்குப் பதிலாக மக்களுக்கு இவன் ஒரு நூலாக உதவுகிறுன்.

## 58. அத்துவிதம், துவிதம்

அநேக உருவங்களாய் அமைந்து வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவிதமே அறிவின் மறதியால், ஈசன் வேறு இருப்பதாகத் தேடுதலில் துவிதப்படுகிறது.

## 59. ரூப துவிதக் கொள்கைகள்

சிலை, விக்கிரகங்கள், படம், இவைகளைப் பூசை செய்வதும், சமாதிகள் தரிசிப்பது, ஜெபம் ஜெபிப்பது, பல உத்ஸவங்கள் நடத்துவது ஒன்றையே சிறப்பாய் வணங்குவது இவை எல்லாம் துவிதமே.

## 60. அரூப துவிதம்

எவ்வுருவங்களையும் வணங்காது வரம் கோருதல், ஜெபித்தல், யோகம் செய்தல், தத்துவ விசாரணையுள்ளது அரூப துவிதம்.

## 61. சுத்த அத்துவிதம்

அறிவின் அனுபோகத்தின் விளக்கத்தால் தன்னிலை அறிந்து, எதையும் வணங்காதவர்கள் சுத்த அத்துவிதக்காரர்கள்.

## 62. உடல் தத்துவம்

உடல் தத்துவங்கள் ஆறு. அவை:—

(1) உடல், சூக்குமம், காரணம், சோதி நாதம், நினைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சூக்கும தத்துவங்கள் ஐந்து:—சூக்குமம், காரணம், சோதி, நாதம், நினைப்பு.

(3) காரண தத்துவங்கள் நான்கு:—காரணம், சோதி, நாதம், நினைப்பு.

(4) சோதி தத்துவங்கள் மூன்று:—சோதி, நாதம், நினைப்பு.

(5) நாதத் தத்துவங்கள் இரண்டு:—நாதம், நினைப்பு.

(6) நினைப்பு அல்லது நான் என்ற ஒரே தத்துவத்தால். தத்துவங்கள் அனைத்தும் ஏற்பட்டன.

கண், கைக்கு அகப்படுவதே ரூபம், காதுயூக அறிவிற்கு அகப்படுவது அரூப ரூபம்.

தன்னைத்தான் அறியவேண்டும் என்ற விருப்பமே வணக்கம்.

## 63. சந்நியாசமும், புண்ணிய ஸ்தலங்களும்

அநேக பொருள்களைச் சேர்த்து ஒரு விலை பொருளாக்கி அதை உபயோகத்திற்குப் பயன்படும்படி செலாவணி செய்து அதுவே ஒவ்வொரு பெரும் நிர்வாகங்களாய் வலுத்திருப்பினும் அவைகளின் உட்கருத்து, உணவு, உடை, இடவசதிக்குள்ள சௌகர்யத்திற்காக வேண்டியே அது போன்றே ஒவ்

வொருவரும் செய்யும் தவப்பிரயாசையும், ஆராய்ச்சியும், உடல் நலம், தொழில் நலம், சொல் செல்வாக்கு சொர்க்கத்தின் சுகநலம் இவைகளின் சுகத்தையும். பொருள் பெருக்கத்தையும் விரும்பியதாய் இருப்பினும் அதின் மூலக்கருத்து தான் பிறந்த பயன் என்ன? பிறக்கு முன் எங்கு எப்படி இருந்தோம்? இவ்வுலக பிரபஞ்சங்களின் இரகசிய முடிவு என்னவென்றறிய வேண்டியதற்காகவே.

## 64. எளியவர்க்கும் தனவந்தர்க்கும் இடையில் விவேகி கற்பித்த சம்பிரதாய தீர்ப்பு

சொர்க்க, மோக்ஷ, இன்ப, அற்புத வியப்பான விஷயங்களாய்ப் பேசினல் பசி, வறுமை, நோய்கவலையுள்ளவர்கள் பொறுமை நிம்மதியுள்ள ஆறுதல் அடைவார்கள் என்றும்; நரக வாதனை, நெருப்பு, விஷம், அபாய கரபய வாதனை யாகியவைகளைப் பேசினல், கொடிய பாதக செயலுடையவர்களும், பணக்காரர்களும் இவைகளுக்கு அஞ்சி, ஒழுக்கத்தோடும், அன்பு சமத்துவ தர்மத்தோடும் இருப்பார்கள் என்றும் விவேகிகளால் நீதிக்காக வேண்டி இவைகள் கற்பிக்கப்பட்டன. நாளடைவில் விவேகியும் மற்ற எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி இல்லாது இதை நம்புவதால் விவேக வளர்ச்சிக்கு தடையாகவே இருந்து வருகிறது.

65. யாவரும் முக்தியடைந்தே தீருவார்கள்

அநேக உருவ வாயிலாக ஓர் அறிவிலிருந்து படிப்படியாக உயர்ந்து மனித உருவாகிய பின் எடுக்கும் பிறவிகளெல்லாம் மனிதனாகவே பிறந்து இறுதியில் ஒவ்வொருவரும் தன்னையறிந்து முக்தியடைந்தே தீருவார்கள்.

பின் ஏன் அறிவாளிகள் ஞானத்தை நாடி அதன் விளக்கம் தரத்தக்க குருவைத் தேடுவதும் விளக்கமறிந்த அறிவாளிகள் மக்களை துரிதப்படுத்தி அறிவிப்பதும் என்றால், இன்பதுன்பங்களை எல்லா ஜீவராசிகளும் அனுபவித்தாலும் அதன் காரண காரியத்தை சிந்திக்கவோ சொல்லவோ முடிவதில்லை.

நான் என்ற ஆதியின் முடிவு மனித உருவங்களாகி தன் முன் நிலை எப்படி இருந்து எந்தெந்த தத்துவங்களாக பரிணமித்து எந்தெந்த உருவங்களாகி இவ்வுடம்பு எடுத்தது என்பதை அறியவும், அறிவின் நிறை குறைவைப் பிரித்து நோக்கவும், மனித அறிவினால் தான் முடிகிறது.

இப்பிறவியில் நல் அறிவு ஏக்கம் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அறிந்துகொள்ளாமற் போனல் பிற் பிறவிகளில் தன் ஏக்கத்தின் பதிவு உள்ளே இருந்தாலும் பருவ வயது அறிவின் உயர்வு வருமுன் இத் தூலம் நிலைக்கின்றதோ இல்லையோ. இத்தூலம் நிலைத்தாலும் தன் உள் ஏக்க நல்லறிவைத் தூண்டி ஆராய்ச்சி அளிக்கவல்ல உணர்ச்சி ததும்பிய சொல் செயல்கள் உள்ள நாட்டிலாவது குடும்பத்திலாவது பிறப்பது என்ற நிச்சயமில்லாததாலும், அப்படி உணர்ச்சியுள்ள இடத்தில் பிறந்தாலும், அறிவிக்கவல்ல அநுபவஸ்தர்கள் (குரு) கிடைக்காவிட்டாலும் மறு பிறவிகள் எடுக்கவேண்டி யிருப்பதால் இப்பிறவி யிலேயே தன்னிலையை அடைந்து முக்தி அடைவதில் பின் பிறவிகளின் வீண் பிரயாசையைத் தடுக்கின்றது.

ஒரு சுகமுமில்லாதிருந்து ஒன்றுமே நினையாது ஏற்பட்ட தன் வேக விளைவின் பரிணமமே உலகங்களாகி, உருவங்களாகி மனித உருவாகிவிட்டது. முடிவறியா நிர்வாகங்கள் அங்கங்கு ஏகமாய் நிறைந்து வலுத்ததின் முடிவு மனிதனே ஈசனென்றறிந்தது. உடம்புக்குப்பின் சுகம் ஒன்றில்லாத தொன்றை மோக்ஷ முக்தியின் சுகமுண்டென்று நாடிய நாட்டத்தின் பயன் இவ்வுடம்பிலேயே இன்ப உணர்வடைந்து சுகமனுபவித்து அதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சமாதான ஆலயங்களாய் நிறைந்து வரு கிறது.

அருபா ரூபத்தில் ஓர் அணு - (ஆதி) - துணிவுகரத்தில் நான்—வியாபகத்தில் நினைப்பு—வேகத்தில் நாதம்—உருவத்தில் நெருப்பு—பிரிதலிலும் சேர்தலிலும் அணு பேசுவதிலும், யூகிப்பதிலும் அறிவு - சுவையி லும் நோவிலும் சூக்குமம் - ஸ்பரிசத்திலும், பார்வையிலும் தூலம் இவ்விதமாக நான் (கட வுள்) என்ற தத்துவம் புரிணமித்து இருக்கின் றது. கடவுள் என்பது தனி ஒரு பொருளாக இல்லை. அது நினைப்பாகி, நாதமாகி, வெளிச்ச மாகி, அணுவாகி, அறிவாகி இவ்வைந்தும் சேர்ந்த உருவங்களாகி இருக்கிறது.

ஒவ்வொருவரும் ஆராய்ந்து பார்த்தால் எல்லா இடத்திலும் எல்லா உருவங்களிலும் இவ்வைந்து தத்துவங்களும் இருப்பதை அறி யலாம்.

## 66. பக்தி

சரீர உழைப்பிற்கு நித்திரை அவசியம் போன்று அறிவின் நிலை யறிவதற்கு பக்தி அவசியம். ஓ, பக்தர்களே! உங்கள் பெரும் பக்தியின் தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள்.

ஆராய்ச்சியுள்ள தீவிர பக்தன் அறி வாளியாகப் பிரகாசிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரமில்லா மிகச்சாந்தத்துடன் ஆராய்ச்சி யில்லா பக்தனுக இருப்போனுக்கு இரத்த ஓட்டக் குறைவு ஏற்பட்டு அநேக வியாதிகள் தொடரலாம்.

தன் குற்றங்களை உணர்ந்து பக்தி கிரியை யில் ஈடுபடுவோன், பின் குற்றங்கள் செய்யா திருந்தும் முன்செய்த குற்றங்களை நினைந்து அடிக்கடி வருந்திக்கொண்டே இருப்பானுனல் அவனுக்கும் வியாதிகள் தொடரலாம்.

பெரும் மூட நம்பிக்கையுள்ள பக்தனுக இருப்பவனுல் பிறருக்குப் பாதகங்களோ, சாதகங்களோ அநேகம் ஏற்படலாம். ஆனுல் அவனுக்கு யாதொரு பிரயோஜனமும் கிடை யாது.

உலகத்தோர்களின் பார்வைக்காக பக்த னுக வேஷம் தரித்தோன் அநேக வித இன் னல்களை மக்களுக்கு விளைவிப்பான்.

## 67. குரு

உடலுக்காத்ரவு பூமி
குடும்பத்திற்காதரவு பொறுமை
அறிவுக்காதரவு அன்பும் அனுபோகமும்
அருளுயிர்க் காதரவு குரு.
அறிவாராய்ச்சியில்லா ஞானம்
மீசையில்லா அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தனமில்லாப் பெண்
வெளிச்சமில்லா வீடு
ஊற்றில்லாக் கிணறு
தயாளமில்லா நெஞ்சம்
கருணையும் கருத்துமில்லாக்கண்
விசாரணையில்லாத் தீர்ப்பு
விலையில்லாப் பொருள்
ஆராய்ச்சியில்லா அறிவு
வீரமில்லாச் சொல்
உருக்கமில்லாத தவம்
கேள்வி தெரியாத விடை
ஆடையில்லா சரீர அழகு
விழிப்பில்லாத் தூக்கம்
சமயமறியா சமர்த்து
விசுவாசமில்லா அன்பு
விளைவில்லா நிலம்
உலகத்தையறியா சந்நியாசம்
செலவில்லாப் பொருள்
அன்பில்லா வாழ்வு
அருளில்லா முகம்
குறையுணரா அறிவு
அனுபோகமில்லாச் சொல்
கரு இல்லாத் தவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருசியில்லா பெரும் பழம்
பருவத்தில் அனுபவிக்காத இன்பம்
தருணத்திற்கு உதவாத தயாளம்
உற்சாகத்திற்கு உடனில்லா மனைவி
கருத்துக்கு இசையாத நம்பிக்கை
காலத்தில் விளையாத வெள்ளாமை
உயிரில்லா உடம்பு
இவைகளைப் போன்றே குருவை அடை-
யாத முடிவு

குரு சொல்லும் விஷயங்கள், தன் அறிவிற்குப் பொருத்தமானதாகவும், தான் அறிந்த அறிவிற்கு எட்டாத உயர்வான விஷயங்களாகவுமிருந்தால், அதை ஆராய்ந்து அறியக்கூடியதாகவுமே இருக்கவேண்டும்.

தன்னையறிய முற்படும் ஞானதாகமுடையோர், தாம் அறிந்த அறிவைக் கெடுத்துக் கொள்ளப் போவதே தற்கால ஞானதாகம் என்பார்கள்.

அறிவறியா மக்களை, மேல் அறிவுக்குக் கொண்டு வருவதே முற்கால அறிவாளிகளான சந்நியாச குருக்களின் வேலையாக இருந்து வந்தது. தற்போது, அறிந்த அறிவையும் பாழ்படுத்தி, மடமையைப் போதிக்க முற்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவரே, சந்நியாச குருக்களாகப் பெருகுகிருர்கள்.

## 68. லம்பிகா யோகம்

தன்னுடைய நாவின் அடிப்பாகத்திலுள்ள சதையை மெது மெதுவாக அறுத்து, ரணங்களை ஆற்றி, நாவை இழுத்து, நீட்டி மூக்குக்கு மேல் நாவு ஒரு அங்குலம் நீண்ட போது தன் நாவை மடக்கி, அண்ணத்தின் மேல் துவாரத்தில் நுழைத்துவிட்டால், உடனே சரீர மறதி ஏற்பட்டு, சுவாசம் நின்று வெகு காலம் ஒன்றும் தெரியாதிருக்கலாம். அவர்களுக்குப் பசியுமில்லை. சரீரமும் அழியாது. வெகு காலத்திற்கு முன், நாவு அப்பியாசத்தில் இருந்தவரை இன்று எழுப்பினுல், க்ஷணநேரத்திற்கு முன் நடந்தது போன்று அக்காலங்களிலுள்ள பாஷையும், சமாச்சாரமும் சொல்லுவர். அவருக்கு க்ஷணநேரத்தில், உலகம் மாறி அமைந்திருப்பதாகத் தோன்றும். இவ்வப்பியாசத்தில் இருக்கும்போது சரீரத்தை ஜீவ ஜந்துக்களாலும், மண்ணாலும் அழித்துவிட முடியாது. நீராலும், நெருப்பாலும், பூகம்பத்தாலும் விபத்து ஏற்படலாம். முன் காலத்தில் சாதாரண குடும்பங்களிலும் இவ்வப்பியாசம் இருந்துவந்திருக்கிறது. இவர்களுக்கு உரோமமும், நகமும், வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலுள்ள பாப்பா சுத்தமாக இருக்கும். இவ்வப்பியாசத்தி லுள்ளவர்களைப் பார்த்த மக்கள், இவர்களைச் சித்தர்களாகக் கருதி, சமாதி கட்டி, ஆடம்பரம் செய்வதுமுண்டு. இவ்வப்பியாசிகளை எழுப்பி, அவர்கள் காலத்தில் உள்ள விஷயங்களைத் தெரிந்து, நூலும் எழுதி இருக்கிறார்கள்.

**இவர்களை எழுப்பும் உபாயம்:**—தகுந்த வைத்தியர் ஒருவரை வைத்து மெதுவாக வாயைத் திறந்து நாவை, இழுத்து எடுத்துவிட்டு கை கால் ஒரே முடக்காய் முடக்கி யிருப்பதை, மெது மெதுவாகத் தட்டி உணர்ச்சி உண்டாகும்படி செய்துவிட்டால், மூச்சு போக்கு வரத்து உண்டாகிவிடும்.

தேரை, கருநாகம், நல்லபாம்பு, இவைகள் உணவு கிடைக்காதபோது, இந்த அப்பியாசம் செய்துகொள்ளும். ஆனல் இவைகளுக்கு கண், காது, சரீர உணர்ச்சி யிருக்கும். உணவு கிடைக்கும்போது, நாவை எடுத்துப் புசிக்கும் மனிதனுக்கு இவ்வுணர்ச்சி இல்லை. தேரைக்கு வயது இதுவால் அதிகம்.

தன் அறிவின் பலஹீனத்தால் தற்கொலை செய்துகொள்ளும் ஒருவன், மறு பிறவிகளை எடுத்தாவது, அதை உணர்ந்து சீக்கிரத்தில் முக்தியடைகிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் உள்நாவு அப்பியாசத்தில் இருப்பவர், அறிவை அறிவதற்குப் பதிலாக அறிவைத் தற்கொலை செய்துவிடுவதால், அநேக காலங்கள் வீணுகச் சென்றுவிடுகின்றன.

அவர்களைப் போன்று சில மூச்சு அப்பியாசிகளுக்கும், கண் அப்பியாசிகளுக்கும், சரீரம் திமிரேறி, சுமார் மூன்று நாள் வரையிலும் தன் மறதியி லிருக்கலாம். இவர்களை ஏதாவதொரு இடத்தில் ஊசியைக் கொண்டு குத்தினல் எழுப்பிவிடலாம். இவர்கள் கொஞ்சம் தவறினல் மரணம் அடைவார்கள்.

உள்நாவு அப்பியாசத்திலிருப்பவர்களுக்கு, மூச்சு போக்குவரத்து இல்லாதிருப்பதால், சுவாசத்தை அடக்கிக்கொண் டிருப்பதாகக் கருதி மூச்சு அப்பியாசம் செய்ய முற்பட்டார்கள்.

## 69. வாசி யோகம்

அநேக ஆசனங்கள் போட்டு மூச்சை உந்தி, வயிறு, நெஞ்சு இவைகளில் வெகு நேரம் பிடித்துப் பழகுவதும், இருதயத்திலிருந்து மூச்சை அடக்கி, பாவனையாக, நெற்றி வழியாய் பல ஜெபங்களோடு விடுவதும் உண்டு. இவர்கள் சரீரம் மெலிந்திருக்கும். எவ்வளவுக் கெவ்வளவு மூச்சை அடக்கி பழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ருனே, அவ்வளவுக் கவ்வளவு பின்பு பல ஹீனப்படுகின்ருன். தன்னைத்தான் அறிந்து கொள்ளவேண்டு மென்ற ஏக்கத்தால் தன் பலஹீனம் தனக்குத் தெரிவதில்லை.

உதாரணம்:—காதல் கொண்ட காதலியை அடையும் வரை இடையிலுள்ள சிரமம் தோன்ருதது போன்று.

## 70. படுக்கை

படுக்கைக்குப் போகு முன் கால், கை, பற்களை சுத்தம் செய்யவேண்டும். வலது கைப் பக்கம் திரும்பிப் படுத்தால் உணர் வாய்த் தூங்கலாம். அதிக தூக்கம் விரும்பி ஞல், இடது பக்கம் திரும்பிப் படுக்கவும். இடது கை மேல் வலது கையும், வலது காலின் மேல் இடது காலும் வைத்து மல் லாந்து படுப்பதில் மிக நன்மையுண்டு.

உடம்பில் நோய் ஏற்பட்டால் மேற்கண்ட படி மல்லாந்து படுத்து, சரீரம் அசையாது, சுழிமுனையில் அரை மணி நேரம் ஞாபகம் வைத்தால் உடனே நோய் தீரும்.

## 71. பஞ்சவர்ணம்

இதில் அநேக வர்ணங்கள் அடங்கி யிருக் கின்றன. கண்ணை மூடி, நெற்றிக்குள் பார்த் தால், இரத்தத்தின் சுத்தத்திற்கு தக்க வாறும், அறிவின் பெருக்கத்திற்குத் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறும், நொடிக்கு நொடி, மாறி, மாறி, பல பிரகாச நிறங்களாகத் தெரியும்.

இருதயத்தைச் சுற்றியும் மூளைக்கு மேலும் இப் பிரகாசம் உண்டு.

## 72. கபம்

உடம்பிலுள்ள இரத்தமே எச்சிலாகம்ாறி விந்துவாகிறது. தன் எச்சிலை கைவிரல்களாலும் மற்ற எவ்வகையாலும் வெளியேற்றுவதில், நுரையீரலும் சரீரமும் பலஹீனப்படுகின்றன. உடம்பிலுள்ள சத்தில் எச்சில் மிக முக்கியமானது.

## 73. காய கல்பம்

சரீரத்தை வெகு நாள் வைத்திருக்க வேண்டுமென்ற ஆசைக்காக, தன் சிறு நீர் மலம், விந்து, பெண்களுடைய நாதம் (சுரோணிதம்) காய கற்ப உப்புகள், இவைகளை உட்கொள்ளுகிறார்கள். இவ்வறிவுலகில் நாய் கூட அவைகளை உண்ணாது. அதனால் சரீரம் நிலைப்பதுமில்லை. அது அறவே கூடாது.

## 74. நூறு வயது இருக்க உபாயம்

சுவாசத்தை ஸ்தம்பிக்காமலும், வாய் வழியாக சுவாசிக்காமலும், சந்தோஷம், துக்கம், வியப்பு, தூக்கம், போகம், விழிப்பு, அள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு மீறி கொள்ளாமலும், போதை வஸ்துக்களை உபயோகிக்காமலும் இருந்தால் வயது நூறு இருக்கலாம்.

## 75. நிர்வாணம்

உலகில் எல்லோரும் ஆடை உடுத்தி இருந்தபோதிலும், ஆடையுள் நிர்வாணமாக இருந்துகொண்டே இருக்கிறோம்; அறிவின் அலங்காரமும் மரியாதையும்தான் ஆடை உடுத்தியது. அறிவின் நிம்மதியே நிர்வாண மென்றறியாதார், ஆடையில்லா நிர்வாண மாய்த் திரிவர்.

## 76. கண்

கண்களை மூடி, கண் புருவக்கோடி அல்லது கடைக் கண்ணை மெதுவாய் விரலைக் கொண்டு அழுத்தினால் மறு கண் புறம் செஞ்சுடர் தெரியும்.

கண்களை இரு பெரு விரல்களாலும், காதுகளை ஆள் காட்டி விரல்களாலும் நடு நெற்றியை நடு விரல்களாலும், வாயை சுண்டு விரல்களாலும், மூக்கு துவாரங்களை மோதிரவிரல்களாலும் ஒரே சமயத்தில் அழுத்தினால், நெற்றிக்குள்ளே திடீரென்று வெளிச்சம் தெரியும். இவ்வப்பியாசத்தினால், கண்களைச் சுற்றியுள்ள நரம்புகள் கெட்டு, பார்வை கெடும்.

கண் பாப்பாவில் ஞாபகத்தை நிறுத்திப் பார்ப்பதில், சலனமில்லா திடசித்தம் உண்டாகும், இதை ஐந்து நிமிஷத்திற்கு மேல் செய்யக்கூடாது; பட்டினியுள்ள மனிதனும் பசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள வேங்கையும் சந்தித்தால், இமையா கண்ணே ஜெயிக்கும்.

## 77. தச நாதம்

நிச்சப்தமாய் உள்ள இடத்தில், தனித்திருந்து, ஒரே ஞாபகமாய் பிடரியைக் கவனித்தால் சரீரத்தினுள் நிரம்பிய தொனியும், இரத்த ஓட்டத்தின் தொனியும், சுவாசத்தின் தொனியும், இருதயத்தின் தொனியும், வெளியில் உள்ள தொனியும், இவ்வைந்து தொனிகளும் சேர்ந்து, தன் ஞாபகத்தின் வேகத்தால் கொடிக்கு கொடி மாறி தச நாதங்கள் எல்லோருக்கும் தெளிவாய்க் கேட்கும்.

இது மயில் தன் சிறகை விரித்து தானே ஆடி ஆனந்திக்கும் சுகத்தைப் போன்றது.

## 78. நுட்பம்

தொழிலாளி, வியாபாரி, இராஜாங்க நிர்வாகி, தீர்க்கதரிசி, ஆராய்ச்சியாளர் இவ்வைந்து நுட்பங்களுக்கும் மேலானது ஞான நுட்பம்.

## 79. அறுவகை தீக்ஷைகள்

அன்பால் அழைத்தல், குண்டலி சக்தியை எழுப்புதல், தொட்டு உபதேசித்தல், கண்ணால் பதிய வைத்தல், சொல் வாசகத்தால் தெளிய வைத்தல், ஞாபகத்தால் அடிக்கடி நினைத்தல் முதலியவைகள் அறுவகை தீக்ஷை எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80. தேஜஸ்

தொழிலின் உழைப்பின் அனுகூலத்தாலும், பணப் பெருக்காலும், பக்தியின் திடத்தாலும், குற்றமற்ற நடத்தையாலும் கற்பின் தீரத்தாலும், தன் குற்றம் உணர்வதாலும் நெற்றியில் தேஜஸ் தோன்றும். மெய்யுணர்வாளர்களுக்கு பொன்னிறம் போன்று எண்ணெய்ப் பசையோடு இத்தேஜஸ் தோன்றும்.

## 81. உட்காரும் விரிப்பு

வெள்ளை துணி தொழிலாளிக்கும், கம்பளி வியாபாரிக்கும், மான் தோல் அறிவின் சாந்தத்திற்கும், யோகத்திற்கும், வேங்கைத் தோல் அறிவின் வேகத்திற்கும், சிறப்பிற்கும் நல்லது. சமய சந்தர்ப்பத்தில் எவ்விரிப்பிலும் இருக்கலாம், அது உத்தம நிலை.

## 82. அமிர்தம்

இது மூளையின் மத்தியில் இரண்டு அவுன்ஸ் முதல் மூன்று அவுன்ஸ் வரை மிகத் தெளிவாயும், அதிக தித்திப்பாயும் இருக்கிறது. இந்த அமிர்தம் ஆருதாரத் திரைக்கு ஆதரவாய் உள்ளது.

வாயை மூடி மௌனமாய் நாவை அண்ணளத்தில் ஒட்டி அப்பியாசிப்பவர்களுக்கு பாளையில் கள் வடிவது போல் மிகச் சிறு துளி வாயில் பட்டவுடன் எச்சிலும் சேர்ந்து மிகத் தித்திப்பாய் மாறிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு உடம்பு மெலியும். இரத்தம் கெட்டு நகங்கள் கருக்கும். மூளை பலங் குறைந்து, புத்தி சுவாதீனமின்மையோடு ஆயுளும் குறையும்.

அறிவில்லா சில குருக்கள், தங்கள் எச்சிலையும், பருகிய எச்சில் பாலையும், சிஷ்யனுக்கு அமிர்த தீக்ஷை என்று கொடுப்பதுண்டு.

## 83. இருதய அப்பியாசம்

தன் ஞாபகத்தை இருதயத்தில் நிறுத்திப் பார்ப்பதில் வெகு கால அப்பியாசத்திற்குப்பின் இரத்தத்தின்வெப்பு அதிகரித்து, ஒரு வித வெளிச்சம் தோன்றும். இப்படிச் செய்வதால் இருதயம் பலஹீன மடையும்.

இருதயமும் மூளையும் உள்ள திடத்திற்கு தக்கவாறே அறிவின் பெருக்கம் உண்டாகிறது.

சந்தோஷம், நல்ல சிந்தனை இருப்பதில் இருதயத்திற்கு நல்லது.

பூமி நொடிக்கு 1500 மைல் வேகத்தில் சுழன்றுகொண்டும், நொடிக்கு, 1144 மைல் வேகத்தில் விலகிச் சென்றுகொண்டும், மணிக்கு 1132 மைல் வேகத்தில் உருண்டு பிரண்டுகொண்டும் இருக்கிறது.

பூமி 1500 மைல் வேகத்தில் சுழல்வதாலேயே ஒன்றுக்கொன்று ஆகர்ஷண சக்தியின் பிடிப்பு இருக்கிறது. 1144 மைல் வேகத்தில் விலகுவதாலேயே வருஷம், மாதம், நாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி, நிமிஷம், விநாடிகளாகப் பிரிக்கப்படு கிறது. மணிக்கு 1132 மைல் வேகத்தில் உருளு வதால், இராப் பகலும், அமாவாசை, வளர் பிறை, பௌர்ணமி, தேய்பிறை முதலியன வும் கிரகணங்களும் அதனுல் ஏற்படும் பிறழ்த லால், உத்தராயணம், தக்ஷுணயணமும் ஏற்படு கிறது. இதைவிட வேகமாக நமது இரத்தச் சுழல் நரம்பு நாடிகளில் ஓடிக்கொண்டிருக் கின்றது.

அந்த வேகத்திற்கு ஏதாவது தடையோ, மேலும் அதிக வேகமோ கொடுப்பது தன்னு டைய குணதிசயங்களைப் பொறுத்தது.

பூமி மணிக்கு 1132 மைல் வேகத்தில் உருளுவதால் இராப் பகல் ஏற்படுகின்றது.

ஒரு மணிக்கு 1132 மைல் வேகத்தில் போகக்கூடிய யந்திரம் சரியாக நேர் மேற்கு திசைநோக்கிச் செல்லுமானுல் அதில் இருப் பவனுக்கு புறப்பட்ட நேரம் எங்கும் இருக் கும்.

**முக்கிய கவனிப்பு:** ஒரு மனிதன் தன் உரு வத்தைப் புகைப் படத்தாலேயோ, அல்லது கைச் சித்திரத்தாலேயோ, மிக வசீகரமாக அழகுபடுத்தி, அதைக் காலையில் சுமார் ஏழு நிமிஷத்திற்குக் குறையாமல், நல்ல ஞாபகத்து டன் கூர்ந்து பார்த்துவிட்டு, தன் தொழிலுக் குச் சென்ருல், சரீரம் தளரவிடாமல் தனக்கே பெரும் துணிவும், அறிவின் அபிவிர்த்தியும் திடசித்தமும் எதார்த்த சிந்தனையும், பல நன்மைகளும் ஏற்படும். தன் வயதை இதனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக்கொள்ளலாம்; அங்கு வேறு எவ்வித படங்களும் இருக்கக் கூடாது.

## 84. சோம வட்டம்

நெற்றிக்கு எதிரே 8 கெஜம் முதல் 1/4 பர்லாங்கு தூரம் வரை பரவச, சிறு இழுவை உணர்ச்சியோடு உதய சூரியனைப் போல் தெரியும். இதில் மேல் கீழாய் உரோமம் போன்று நெளிவான கோடுகள் இருக்கும். சில பக்தர்களுக்கு தாம் எண்ணிய ரூபங்கள் இவ் வட்டத்திற்குள் தெரியவரும். நெற்றியை அசைத்தால் அதுவும் அசையும். பசி அதிகரிக்கும்போதும், ரீங்கார சப்தங்களைக் கிரகிக்கும் போதும் இதை எளிதில் காணலாம்.

கண் இமை உரோமங்களில் நீர்த் துளிகள் இருந்தால் கண்ணுக்கு எதிரில் ஒரு அங்குலம் அரை அங்குலத்தில் சிறு சிறு வட்டங்கள் பலவித வர்ணங்களோடு தெரியும். இவை சோம வட்டமல்ல.

## 85. சாயா தெரிசனம்

சூரியன், சந்திரன், தன்னுடைய நிழல், இவைகளில் ஏதேனுமொன்றைக் கூர்ந்து பார்த்துவிட்டு, உடனே மேல் நோக்கிப் பார்த்தால், தன்னுடைய சரீரம் வெள்ளை நிழலாக மேலே தெரியும்.

இரவு 11 மணிக்கு நிலா வெளிச்சத்தில் நான் சிறுநீர் செய்து எழுந்திருக்கும்போது பனை மரத்தைப்போல் ஜெகஜ் ஜோதி, பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஜ உயரத்தில் இரண்டு நிமிஷம் வரையில் தெரிந்தது.

கண்டதற்குக் காரணம் தெரிந்தால்தான் நான் சமாதானம் அடைவேன்.

அங்கே ஆராய்ந்தபோது, சிறிது தூரத்தில், என் வலது புறத்தில் பனை மரம் ஒன்று இருந்தது. கண் இமையாது இருந்து சிறு நீர் செய்ததால் மரத்தின் நிழல் கண்ணில் பிரதி பலித்து, ஜோதியாய்த் தெரிந்தது என்று அறிந்தேன்.

நான் ஆராயாது பெரும் ஒளியைக் கண்டேன், என்று சொன்னல் அது பொய்யாகாது. அதனுல் ஏற்படும் தீங்குகள்:— நான் சிக்கிக்கொண்டது மல்லாமல், ஆராய்ச்சியில்லா சொல்லில் இருக்கும் நூல்களுக்கும் இது ஒரு அத்தாட்சியாகுவதுமின்றி, இதை போன்றே மற்ற மக்களை பிரயோஜனமில்லாத வீண் பிரயாசைக்கு உட்படுத்துவதுமாகும்.

ஆராய்ச்சியில்லா சொல்லும், பிரசார நூல்களும் ஆயிர மக்களின் அறிவின் முற்போக்கை பாதிக்கின்றன.

அறிவின் நிறைவு குறைவுக்குத் தக்கவாறு குணம், மனது, புத்தி, ஆராய்ச்சி, அறிவு, பேரறிவு என்று பெயர்.

குணத்திற்கு இரத்த நரம்புகளும் மனதிற்கு இருதயமும், புத்திக்கு நெஞ்சும், ஆராய்ச்சிக்கு நெற்றியும், அறிவுக்கு மூளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகும். ஆனால் பேரறிவோ பெரும் அநுபோகத்தால் உண்டாகிறது.

## 86. விந்தின் இருப்பிடம்

மனிதனின் பதினைந்து வயதிற்கு மேல் இடுப்புக்குக் கீழ் சிறுநீர் துவாரத்திற்கும், மலத் துவாரத்திற்குமிடையே, விந்து வரும் இடத்திற்கே மூலாதாரம், உந்தி, அடிமூலம், குடிலை, மூலக்கண் எனப் பெயர்கள். இந்த விந்தை (Semen) முதுகெலும்புக்குள் அமைந்திருக்கும் மிகச் சிறிய துவாரத்தின் வழியாய் நெற்றிக்குக் கொண்டுவருவதுதான் **குரு தீக்ஷை**யாகும்.

## 87. நெருப்பாறு மயிர்ப்பாலம்

சிரசின் நடு உச்சியில், மண்டை ஓடுகள், ரம்பப் பற்களைப் போல சேர்ந்துள்ளன. இதனிடை நடுவே இது (நெருப்பாறு மயிர்ப் பாலம்) மெல்லிய துவாரமாயிருக்கிறது. விந்து இதன் வழியாகத்தான் நெற்றிக்கு வரவேண்டும். இதற்கு இரத்த சுத்தமும், அறிவின் பெருக்கமும், சிந்தனையுள் நுட்ப ஆராய்ச்சியும் அவசியமானதால், ஆராய்ச்சிக்குக் கொடுக்கக் கூடிய பெயரே **நெருப்பாறு மயிர்ப்பாலம்**.

## 88. நெற்றிக் கண்

இரண்டு கண்களுக்கும், மூக்கு சுழி முனைக்கும், புருவ இடை நடுவே, சிறு ஊசித் துவாரத்தில் பத்தில் ஒரு பாகம் (1/10) அளவு மிக நுட்பமாயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றிக்கண் மிக இலேசான ஜவ்வினுல் மூடப்பட்டிருக்கிறது. இதை திறப்பதற்கு, அறிந்த குருவாலும், இருபது வயதிற்கு மேல் அறிவோடு விந்துவும், தன் ஞாபகமும் கலந்தால்தான் முடிகிறது. இந்தக் கண் திறந்திருந்தால், அறிவிற்கு உணர்ச்சி நன்ருய்த் தெரியும். இதை வாசி என்ற மூச்சு அப்பியாசத்தாலும் (பிராணுயாமம்) மற்ற யோகங்களாலும், திறக்கமுடியாது. நெற்றிக் கண், திறந்த பின், பிடரிக்கண், உச்சிக்கண், வலம்புரிச் சுற்று நன்ருய்த் தெரியும்.

ஆருதாரத் திரைகள் வாயிலாக அறிவுப் பெருக்கம் ஏற்படும்.

## 89. பிடரிக்கண்

பின் மூளையின் நடு இடமே பிடரிக்கண். இந்த இடத்தில் முதுகெலும்பின் உள்வழியாய் நெற்றிக்குக் கருவாகிய விந்து வரும் பொழுது, இது (விந்து) உறைந்துகொண்டே இருக்கிறது. இதனுல் ஏற்படும் வெப்பத்திற்கே சோம வட்டம் என்று பெயர். இம் மூளையிலுள்ள அணுக்களில் உலகங்கள் சிருஷ்டியாகிய விபரமும் தான் ஞாபகித்ததும் கேட்டதும் பார்த்ததும் அனுபவித்தது மான எல்லாம் பதிந்திருக்கின்றன.

## 90. உச்சிக்கண்

சிரசிற்கு மேல் நடுமண்டை ஓட்டிற்கு உள்ளே அமைந்துள்ள இடமே உச்சிக் கண். நெற்றிக்கண் வழியாய் விந்து இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் வந்து, அழுத்துவதே உணர்வாகும். இதனுல் ஏற்படும் இன்பமே பேரானந்தம்.

உச்சிக்கு, விந்து போகக் கூடிய வழி தூண்டி முள்ளின் நாவைப்போல் இருப்ப தால், குருவில்லாப் பிரயாசையால் விந்து உச் சிக்குச் சென்ருல் சத்துள்ள விந்துவாய் இருந்து, பித்த உடம்பாய் இருந்தால் தலை பாரம், நோவு, இன்பம் இருந்து தலை வெடித் தாவது, வேறு வகையிலாவது மரித்து விடு வார்கள்.

சத்தில்லா விந்துவாய் இருந்தால், அறி வின் உணர்ச்சி கெட்டு, பைத்தியக்காரனைப் போலாகிவிடுவார்கள்.

## 91. ஆருதாரம்

இது மூளைக்கு மேல் மண்டை ஓட்டிற்குள் ஆறு திரையும் சேர்ந்த ஜவ்வு, ரோஜா புஷ் பத்தின் இதழுக்கும் மிக இலேசாக 20 1/2 அங்குல முதல் 25 1/2 அங்குல சுற்றளவில் 8 1/2 அங்குல நீளமும் 5 1/2 அங்குல அகல மாய், ஆமை முதுகைப்போல் இருக்கிறது.

நெற்றிக்கண் திறந்து, விந்து உச்சியில் போய் அழுத்துவதால், கண்ணுடியில் பூசிய ரசம் அழிவது போல், இத் திரைகளிலுள்ள மாசு நீங்கி, அறிவு அணுக்கள் பிரகாசிக்கின் றன.

பிறக்கும் குழந்தைகளுக்கு திரை ஒன் றும், மூன்று வயதில் திரை இரண்டும் ஏழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் திரை மூன்றும் பத்து வயதில் திரை நான்கும், பதினென்கு வயதில் திரை ஐந்தும், பதினெட்டு வயதில் திரை ஆறும் கூடுகிறது. ஆராய்ச்சியுள்ள படிப்பின் திறமையால் இத் திரையின் மேல் அதிக மாசு படருவதில்லை. உணர்வின் சக்தி பெற்றதின் பின் பத்து மாதங்களில் ஒரு திரையின் அறிவின் பிரகாசம் நன்ருகத் தெரியும். 5 வருஷத்திற்குள் ஆறு திரைகளும் பிரகாசிக்கின்றன. சிலருக்கு பத்து வருட காலமும் செல்லலாம். சுமார் ஐந்து அல்லது பத்து வருடத்திற்குள் தன்னுடைய வயதைக் கூட்டவும், குறைக்கவும் தனி சக்தி உண்டாகிறது. இந்த ஆருதாரத் திரை நாபி, வயிறு, மார்பு, தொண்டை சுழிமுனையில் இல்லை.

இத்திரை முதுகெலும்புள்ள ஜீவ ஐந்துக்களுக்கு ஒன்றும், சில மிருகங்களுக்கு இரண்டு முதல் மூன்றும் மானிடராய்ப் பிறந்த அலிக்கும் பெண்களுக்கும் ஐந்தும் இருபத்தொரு வயதுள்ள மனிதனுக்கு ஆறும் இருக்கின்றன.

## 92. வலம்புரிச் சுற்று

சிரசிற்குள் இந்தச் சுற்று தண்ணீரில் நனைந்த பாம்பு கூட்டுக்குள் சுழல்வது போன்றும், நெய் இளகுவது போன்றும், பொடி மணற் குவியல் மெதுவாய் சரிவது போன்றும் இருப்பதோடு, சிரசிற்குமேல் சிறு சூராவளிக் காற்றின் சுழலைப் போன்றும், மருந்தை ஊசியால் பீச்சுவது போன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Injection with a Syringe) தோன்றும். உயர்வான மேளவாத்தியம், பிடில், வீணை, புல்லாங்குழல், மோடி இவைகளை (மனிதன் தூக்கத்திலிருந்த போதிலும்) தானே கிரகித்துக் கொண்டு, சுகமான இன்பத்தோடு சுழலும்.

நற்சுவையான தித்திப்பு, சத்தான ஆகாரம், நல்ல வாசனை, உற்சாக வார்த்தைகள் இருந்தால் நலம். இதனால் கண்களுக்கு அநேக நன்மைகள் உண்டு. கண் பாப்பாவுக்குள் வலமாய் சிறு பூங்காற்றும், சிறு ஊசி சுழன்று துவாரமிடுவது போன்ற உணர்ச்சியால் கண்கள் குளிர்ந்து சுகமாய் இருக்கும். கண்களிலுள்ள சிறு வியாதிகள் சுகமாகிவிடுகின்றன. நெற்றி, உச்சி, பிடரி இவைகளிலும் இச் சுற்று இருக்கும். புளிப்பு, உரப்பு, மீறிய போகம், புகை இவை ஆகாது.

## 93. உணர்வு

உபதேசமானவர்களுக்கு நெற்றியில் சிறு பாரம், துடிப்பு, அரிப்பு, கூச்சம், சிறு நோவு அல்லது பாதை, ஒரு பாதரஸத்துளிப் போன்ற கனம் இருப்பதோடு, நெற்றியில் எண்ணெய்ப் பசை இருக்கும். இவைகள் ஆறு அல்லது ஏழு நாட்களுக்குப்பிறகு அதிகமாய்த் தோன்றும். பெண்களுக்கு மேற்கண்டவைகளோடு 4 மாத கர்ப்பிணிக் குண்டான மயக்கத்தைப் போன்று இருக்கும். மேலும் பத்து மாதத்திற்குமேல் இரண்டு வருடத்திற்குள் மாதவிடாய் நின்றுவிடும். குழந்தை தரிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவனிக்கும் முறை:-** சிறு துவாரத்தில் கூர்ந்து பார்ப்பது போன்றும், சிறு கடியாரங்களை செப்பனிடுவது போன்றும், சிறு ஊசியில் நூல் கோர்ப்பது போன்றும் கவனித்தல் வேண்டும்.

உடல் அசதியாயும், தைரியம் அதிகமாய் இருப்பதோடு, புது கலியாணம் முடிந்த மறு நாள் உள்ள வியப்பைப் போன்றும் இருக்கும். உடம்பில் யாதொரு பலமும் கொடாமல், சாதாரண நிலையிலிருந்து, உணர்வை கவனிப்பதோடு, பேச்சு, சப்தம், தூக்கம், உண்ணும் உணவு, நடை, எதையும் பத்து நாளைக்கு விடாமுயற்சியாய் உபதேசம் பெற்ற இடத்திலிருந்தே கவனிக்கவேண்டும்.

மெர்க்குரி விளக்கு வெளிச்சத்திலும் உற்சாகத் தோற்றப் பார்வையிலும், வெயிற் காலங்களிலும், சத்தான ஆகாரங்களிலும் பௌர்ணமி காலங்களிலும், நல்ல இனிய இராகங்களிலும் அடிக்கடி முக க்ஷவரம் செய்து கொள்வதிலும் உணர்வு தானாகவே அதிகரிக்கும்.

## 94. உணர்வின் இன்பம்

வெளிச்சமுள்ள பல்லைப் போன்றும், தண்ணீரில் தெரியும் சூரிய பிம்பத்தைப் போன்றும் சோப்பு நுரை ச்ரீரத்தில் கரைவது போன்றும், அக்னி திராவத்தில் பித்தளை பொங்குவது போன்றும், கண்ணாடிக்குள் உள்ள காற்றுக் குமிழி போன்றும் இன்பம் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 95. உணர்வுக்கு உதவாதவை

கெட்ட நெய், சுண்ணும்பு நெடி, வெங்காயவடை, இவைகள் கூடாது. கரும்புச்சார், அன்னுசிப்பழம், புதுப்பானை நீர், மாதுளம்பழம் இவைகளை நெற்றியை நோக்கிச் சாப்பிட்டால் சீதளம் உண்டாகும்.

## 96. இறங்குபடி

நூல் வழியாய் ஜலம் இறங்குவது போலவும், கால் திமிர் பிடித்தது போன்றும் எறும்பு ஊறுதல் போலும் சூடான வெப்பைப்போலும் உணர்ச்சி இருக்கும். இடுப்பு நோவு: அதிகப்பசி, சிறுகபம் அபாரக்கனவு, அடிக்கடி தலைபாரம் இருக்கும். மூல வியாதி இருந்தால் தோன்றி மறையும்.

**கவனிக்கும் முறை:-** இறங்குபடியில் நன்ருய் சாப்பிட்டு, நித்திரை செய்வதுடன், வசதியுள்ளவர்கள் சிற்றின்பம் செய்துகொள்ளவும்.

## 97. தவக்கனல்

வேகவைத்த கிழங்கின் ஆவியைப்போன்றும் உடம்பில் வெப்பு இருக்கும்.

## 98. உணர்வின் இன்பத்தால் பயன்

கண் காதால் கண்டு கேட்ட விஷயங்கள் ஞாபகத்தில் இருந்தும், சமயா சந்தர்ப்பச் சொல் தோற்றங்களாலே, வெகு கால விஷயங்கள் ஞாபகத்தில் வருவதுபோல், உணர்வால், எல்லா தத்துவ ஞாபகங்களும் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 99. உலகத்திற்கு அறிவித்த சந்தோஷ செய்தி

**என் இருதய மலர்களே!** உணர்வின் இன்பம் நான் அடைந்து 7—1—48உ முடிய வருஷம் பத்து பூர்த்தியாகியது. உணர்வின் இன்பத்தால் இது காலம் வரை ஆராய்ச்சியின் முடிவாலும் அறிவின் விளக்கத்தாலும் சொல்லுகிறேன்.

உலக சமாதான ஆலயத்தின் மூலம் ஞான விருப்பமுள்ளவர்களுக்கு **தன்நிலை அறிவித்தும்** உலகில் உள்ள எல்லா அரசியல் நிர்வாகங்களுக்கு எடுத்துக் காட்டும் விளக்கத்தில் எல்லா வகை நிர்வாகங்களும் சீர்திருந்தி உலகில் பிறக்கும் மக்கள் யாபேர்களும் சுகமாய் வாழும் **சமதர்ம அரசியல்** நிர்வாகம் உலகெங்கும் ஏற்பட்டதின் பின் என் சரீரத்தை ஐக்கியப் படுத்துவேன் என்ற உற்சாக செய்தியை உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் சந்தோஷமாய்த் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 100. அழைப்பு

எதிலும் பொறுமை உள்ளவர்களே! உங்கள் வெகுமதியை அடைய வாரீர்!

ஓ! செல்வந்தர்களே! நீங்கள் தேடிய பொருளை நன்ருய் அறிந்து, சுகித்துக் கொள்ள இடம் அறிந்துகொள்ள வாரீர்!

பல பாடுபடும் யோகிகளே! போதும். பலன் கிட்டி விட்டது-வந்து ஆனந்தித்து, அனுபவித்துக்கொள்ள வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுக்களின் ஆராய்ச்சி நிபுணர்களே! அணுவினுள் நீங்கள் இருப்பதை அறிந்து கொள்ள வாரீர்!

ஓ! அறிவாளிகளே! அரசர்களே!! உங்கள் அம்பல சிம்மாசனத்தில் ஆட்சி புரிய வாரீர்!

உணர்வின் தவக்கனலில்
நான் அடைந்து நானுகிய
சந்தோஷத்தால் அழைக்கின்றேன்.

**வாரீர்! வருவீர்!! சந்தோஷம்.**

---

## நம் சபை புத்தகங்கள்
## கிடைக்குமிடம்:

பரிபூரண பரஞ்சோதியின் உயர் ஞானசபை
300 திருவொற்றியூர் ஹைரோட்
(டோல்கேட் சமீபம்)
**புது வண்ணாரப்பேட்டை, சென்னை 21.**

தலைமை சபை: மதுரை.

கிளைச் சபைகள்:—மதராஸ், சூளை, பெரம்பூர் பாம்பே, கல்கத்தா, பெங்களூர், பத்ருவதி காக்கிநாடா, குருசாமிபுரம், பெரியகுளம், சின்னாளப்பட்டி, அருப்புக்கோட்டை, வேலூர், காஞ்சீபுரம், கள்ளிப்பட்டு, சேலம், வெள்ளக்கோட்டை. பாளையங்கோட்டை, விழுப்புரம் திருவண்ணாமலை, திருவாரூர், கடலூர் O.T மன்னார்குடி, புதுவை, வத்ராயிருப்பு, காட்பாடி, தனுஷ்கோடி, ஆற்காடு, சிலோன்.

---

VEEKAY PRINTERS, Chintadripet, Madras.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org